# குழந்தைகள் கலை கையேடு



CEDAR

# குழந்தைகள் கலை கையேடு

தொகுப்பாசிரியர்

Dr. சின்னராஜ் ஜோசப் ஜெய்குமார்

ESTD. 1994
Madurai, India

Centre for Education Development Action and Research (CEDAR)

© CEDAR 2020

**Centre for Education Development Action and Research (CEDAR)** is an NGO established in 1994. We in CEDAR, in the first 20 years largely worked for the abolition of child labour in Viruthunagar, Thoothukudi and Thirunelveli districts of Tamilnadu. In that process we reached out to 144 child labour prone villages. We now work for children and youth coming from the most marginalized and excluded communities in Tamilnadu. We help them to realise their 'creative potentials' and 'agency' through Alternative Art and Media Education.

**Paper Boat** is a UK based charity with its registered office at Oxford, England. It has been helping the poor and homeless children in Tamilnadu for more than 5 decades. CEDAR's partnership with Paper Boat goes back to 2000 with our early experiments in after-school-hour education and later, Total Quality Education (TQE) for the poor and the marginalised children. Paper Boat has been supporting us morally and materially in all our experiments in creating 'agency' in children including the present one. Presently it has borne the entire cost of the relief operation.

### *OUR TEAM*

**Dr. Chinnaraj Joseph Jaikumar**
CEO & Managing Trustee

### *MANAGERS*

**Rajadurai**
Administration and Partner Relations
**Babu Charles**
Programmes
**Pandiyan Kamal**
Advocacy

### *OFFICE*

**Muthu Priya**
Accounts Officer
**Thaveethu Raja**
Office Assistant

### *FIELD MANAGEMENT*

**Ms. Mariammaal**
Programme Coordinator (Kovilpatti)
**Michael Raj**
Senior Field Coordinator (Kovilpatti)
**Marikannan**
Field Coordinator

### *CREATIVE LEADS*

**Basheer Khan**
Filmmaking
**Ponkundram**
Creative Photography
**Jayakumar**
Folk Art
**Mithun Deepak**
Video and Photo Editing
**Nagaraj**
Painting and Drawing
**Selvam**
Theatre

# குழந்தைகள் கலை கையேடு

## முன்னுரை

இன்று இந்த உலகையே திணற வைத்திருக்கும் கொரோனா தொற்று போன்ற ஒரு பேரிடர், மனித வரலாற்றில் என்றுமே உருவானதில்லை என்று தான் கூற வேண்டும். எந்தப் பேரிடரானாலும், முதலாவதகவும், அதிகமாகவும் பாதிப்புக்குள்ளாவோர் விளிம்பு நிலை மக்களே. அதிலும் குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் என்ற வரிசையில் தான் பாதிப்புகள் அதிகம் நிகழும்.

இந்தச் சூழ்நிலையில் கொரோனா நிவாரணப் பணிகளை அரசு, தன்னார்வ அமைப்புகள், மற்றும் பல்வேறு குழுக்கள் செய்து வந்தாலும் குழந்தைகள் நலனை மையமாக வைத்து செயல்படுத்தப்படும் திட்டங்கள் மிக குறைவு அல்லது இல்லை என்றே கூறலாம். உணவுப் பொருட்களை பொருளாதாரத்தில் மிகவும் பின் தங்கிய குடும்பங்களுக்கு நிவாரணமாக தருவதே போதுமானது என்ற சிந்தனை தான் வலுவடைந்திருக்கிறது. சில நடவடிக்கைகள் குழந்தைகள் பாதுகாப்பை 'கண்காணிப்பு' என்ற முறையில் அணுகுவதோடு நின்று விடுகிறது. பொருளாதாரத்தில் மிகவும் பின் தங்கிய குடும்பங்களில் இருந்து வரும் குழந்தைகளுக்கு உணவு மட்டுமே பஞ்சம் என்பதும், வறுமைக்குள்ளான குடும்பங்கள், தங்களுடைய குழந்தைகளுக்கு முழு பாதுகாப்பு அளிக்க இயலாத சூழ்நிலையில் அதை மட்டுமே நிவர்த்தி செய்ய வேண்டும் என்று நினைப்பதும், ஒரு நடுத்தர வர்க்கத்தை சார்ந்தவர்களின் கற்பனை.

அதே சமயம் சமூக ஊடகங்களில் நுழைந்தால், கொரோனா முழு அடைப்பு காலத்திய 'குழந்தைகள் மன நலம் பேணல்' என்ற தலைப்பில் படைப்பு, கலைத் திறன், விளையாட்டு, செய்முறை பயிற்சி என்று அநேகம் பேசப்படுகின்றன. இவை அனைத்தும் பசியை தாண்டி 'பாதுகாப்புடன்' வாழக்கூடிய ஒரு நடுத்தர அல்லது உயர் வகுப்பு என்று சொல்லக்கூடிய குழந்தைகளுக்காகவே உருவாக்கப்பட்டதாக மட்டுமே இருக்கிறது. தகவல் தொழில் நுட்ப இடைவெளி மிகுந்துள்ள இன்றைய சூழ்நிலையில், அவர்களே விரும்பினாலும் கூட மிகவும் ஏழ்மையில் இருக்கிற குழந்தைகள் இணையதள வாய்ப்புகளை பெற முடியாது.

இந்தக் கையேடு மறைக்கப்பட்ட அல்லது மறக்கப்பட்ட சில உண்மைகளை மறுத்தே உருவாக்கப்பட்டுள்ளது. முதல் கட்டமாக, சமூக-பொருளாதார நெருக்கடியில் வாழும் குழந்தைகளுக்கே இந்த மனித சமுகத்தில் மிக

முக்கியமானதாக இருக்கும் கலை, உளவியல் ரீதியான ஊக்கமும், ஆதரவும், தோழமையும், கைகோர்த்தலும் அதிகமாகவே தேவைப்படுகிறது என்பது எங்களது நிலைப்பாடு. பேரிடர் காலங்களில் அவர்கள் பெற்றோர்களோடு விரும்பியும், விரும்பாமலும் ஏற்றுக்கொள்ளும் சவால்கள் அவர்களை எவ்வாறு சோர்வடையச் செய்யலாம் என்பதை விவரிக்கத் தேவை இல்லை.

இரண்டாவது, வசதியற்ற இறுக்கமான சூழ்நிலைகளிலும் கூட குழந்தைகளுக்கான சமூக-உளவியல் தளத்தை ஒவ்வொரு குடும்பமும் ஏதோ ஒரு வகையில் உறுதி செய்ய முயலும். இது ஒரு அடிப்படை மனித பண்பு. ஒவ்வொரு குடும்பமும் குழந்தைகளுக்காக கட்டமைக்க முயலும் 'சமூக-உளவியல் தளம்' பேரிடர் காலங்களில் சிதைந்து போகாமல் பாதுகாப்பது என்பது மிக முக்கியமான சமூக மற்றும் கல்விப் பணி. இதில் நாம் பெற்றோர்களுக்கு தோள் கொடுக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம்.
மூன்றாவது, பேரிடர் காலங்களில் எந்தச் சூழ்நிலையில் குழந்தைகள் வாழ்ந்தாலும் அவர்களுக்கு, மகிழ்ச்சியையும், படைப்பாற்றலையும், சுயமாக தேர்ந்தெடுக்கும் ஆற்றலையும் ஊக்குவிக்கும் கலை வழி கல்வியை மிஞ்சிய ஒரு திறன்-தகவமைப்பு அணுகுமுறை, இருக்க வாய்ப்பில்லை.

இந்த "குழந்தைகள் கலை கையேடு" என்பது மேற் சொன்ன சிந்தனைகளை தழுவியே உருவாக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு நிவாரணம் அல்ல. குழந்தைகளோடான எங்களது 26 ஆண்டு கால பயணத்தில் கிடைத்த ஒரு புதிய அனுபவமும், புரிதலும், எதிர்கொள்ளலும். இந்த "குழந்தைகள் கலை கையேடு" குழந்தைகள் கொண்டாடும், குழந்தைகள் திறன் படைக்கும் வினையூக்கியாக எங்கள் குழந்தைகளின் கரங்களில் இருக்கும்.

Dr. Chinnaraj Joseph Jaikumar — June 2020
Editor

# ஒப்புரை

கொரோனா முழு அடைப்பு, குழந்தைகள் கலை கையேட்டிற்கான ஒரு அவசியத்தை ஏற்படுத்தியதில் ஆச்சரியமில்லை. முழு அடைப்பினால் கோவில்பட்டி மற்றும் மதுரை பகுதிகளில் நேரடியாக நாங்கள் ஆற்றி வந்த ‘குழந்தைகள் வள மைய’ பணிகள் ஒரு புறம் முடக்கப்பட்டுப் போனதுமன்றி தஞ்சாவூர் மற்றும் காஞ்சிபுரம் பகுதிகளில் தொடங்கவிருந்த பணிகளும் நின்று போய்விட்டன. சுமார் 1,000 குழந்தைகளை தினந்தோறும் சந்திக்கும் வாய்ப்பை இழந்தோம். இந்த குழந்தைகளில் 90 சதவீதத்தினர் இணையதள வாய்ப்பற்றவர்களானதால், ஒரு அச்சிட்ட கையேட்டின் அவசியத்தை உடனடியாக எங்கள் குழுவினர் ஏற்றுக்கொண்டு அதற்கான பணிகளில் இறங்கினர். இதற்கான பொருட்செலவை எங்களது தோழமை அமைப்பான பேப்பர் போட் நிறுவனம் (Paper Boat, UK) உடனடியாக ஏற்றுக்கொண்டது. கையேடு மட்டுமல்லாமல் கலை கையேட்டை பயன்படுத்த தேவையான ஸ்டேஷனரி பொருட்கள், இப்பேரிடர் காலத்தில் குழந்தைகளுக்கு தேவையான நிவாரண பொருட்களையும் (Relief Kit) வழங்குவதற்கான நிதி உதவியையும் கேட்காமலேயே தர முன் வந்தது எங்களை நெகிழ வைக்கிறது. இத்தருணத்தில், அந்நிறுவனத்தின் இயக்குனர் மற்றும் அறங்காவலர்களுக்கு முதற்கண் என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தக் கையேடு சிடார் மைய படைப்பாசிரியர்களை (Creative Leads களை) கொண்டே குறுகிய காலத்தில் எழுதி வடிவமைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு துறையை சார்ந்த படைப்பாசிரியார்களின் தனித்துவமான பங்களிப்பு இருந்தாலும், இந்தக் கையேட்டை ஒரு கூட்டுப் படைப்பு என்றே கூறமுடியும். ஆனாலும் படைப்பாசிரியர்கள் நாகராஜ் (ஓவியம்), ஜெயக்குமார் (நாட்டுப்புறக் கலை), செல்வம் (நாடகம்), பஷீர்கான் (ஃபிலிம் மேக்கிங்), பொன்குன்றம் (ஃபோட்டோகிராபி) ஆகியவர்களின் தனித்துவ பங்களிப்பு போற்றுதற்குரியது. குறிப்பாக நாகராஜ் ஓவியங்கள் வரைந்து அதிகமாகவே தன் உழைப்பை தந்திருக்கிறார். பிழை திருத்தி தந்த ராஜதுரை (மேலாளர், நிர்வாகம்), கண்ணயராது கணினியின் முன் அமர்ந்து புத்தக வடிவமைப்பை கால வரைக்குள் முடித்து தந்த தீபக் (Creative Lead) அவர்களுக்கும் நன்றி. பாபு சார்ல்ஸ் (மேலாளர், பயிற்சி திட்டங்கள்), திருமதி மாரியம்மாள் (திட்ட ஒருங்கிணைப்பாளர்) திருமதி முத்துப்பிரியா (நிர்வாக

அலுவலர்), மைக்கேல் (மூத்த களப்பணியாளர்), மாரிக்கண்ணன் (களப்பணியாளர்) மற்றும் தாவீது ராஜா (அலுவல உதவியாளர்) ஆகியோர் இத்திட்டம் நிறைவு பெற பல வகையில் துணை நின்றுள்ளனர்.

படைப்பாசிரியர்கள் குழுவிற்கு தலைமை தாங்கி வழி நடத்தியமைக்கும், புத்தகத் தொகுப்பில் என்னோடு துணை நின்று பங்களித்தமைக்கும் பாண்டியன் கமல் (மேலாளர், அட்வகசி) அவர்களை பாராட்டாமல் இருக்க முடியாது. இந்த கையேட்டின் சில பகுதிகளை எழுதுவதற்கு எனக்கு வாய்ப்பு கிடைத்ததை எண்ணி மகிழ்ச்சி அடைகிறேன்.

காலம் தாழ்த்தாமல் உரிய நேரத்தில் நேர்த்தியாக அச்சடித்து புத்தகத்தை வழங்கியமைக்கு பதியம் ஜெபக்கனி அவர்களுக்கும் நன்றி.

Dr. Chinnaraj Joseph Jaikumar
Editor

## பொருளடக்கம்


| எண் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| | கலை கையேடு அறிமுகம் | 1 |
| 1 | வரைதலும் வண்ணமிடுதலும் | 4 |
| 2 | நீங்களும் கதை எழுதலாம் | 15 |
| 3 | பேசும் படம் எடுப்போம் | 28 |
| 4 | கவிதை எழுதலாம் வாங்க | 46 |
| 5 | கையில் கிடைப்பதைக் கொண்டு கலைப் படைப்பினை செய்தல் | 51 |
| 6 | எல்லோரும் கூடிச் சமைப்போம் | 68 |
| 7 | நாடகம் பழகலாம் | 72 |
| 8 | பாட்டுக்குப் பாட்டு! இது நம்ம ஊரு பாட்டு | 88 |
| 9 | விளிம்பிற்கு அப்பால் வாழும் இவர்களைத் தெரியுமா? | 100 |
| 10 | குழந்தைகளும் கொரோனா தடுப்பும் | 104 |
| 11 | நாட்குறிப்பு எழுதுதல் | 112 |

# கலை கையேடு அறிமுகம்

கொரோனா ஊரடங்கு, பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை எல்லோரையும் வீட்டிலேயே கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக முடங்க வைத்துவிட்டது. முழு அடைப்பு தளர்த்தப்பட்டாலும், நிலைமை இயல்பு நிலைக்கு திரும்பவில்லை. குழந்தைகளாகிய உங்களை பொறுத்தவரையில் வீட்டில் இருப்பதே பாதுகாப்பானது என்று உங்களுக்குப் போதிக்கப்படுகிறது. அதை மீறி வெளியே சென்றால் சிறிது நேரத்தில் உங்களை அறியாத அச்சம் அல்லது இனம் புரியாத ஒரு பதற்றம் உங்களை பற்றிக் கொள்ளலாம். மேலும் பெரியவர்களது கண்டிப்பிற்கும் கோபத்திற்கும் ஆளாகலாம். இத்தருவாயில் குழந்தைகள் வெளியில் செல்வது பாதுகாப்பற்றதுதான்.

மேலும், பள்ளிக்கூடங்கள் திறப்பை பற்றி தெளிவான முடிவுகள் எதுவும் இதுவரை அறிவிக்கப்படவில்லை. நாங்களும் பள்ளி முடிந்து தினமும் மாலை நேரங்களில் உங்களை நம்முடைய குழந்தைகள் வள மையங்களில் (Children's Resource Centre) சந்திக்கும் வாய்ப்பை இழந்து நிற்கிறோம். வரைதல், வண்ணமிடுதல், நாடகம், கதை சொல்லுதல், ஆடல் பாடல், புகைப்படம் எடுத்தல், குழந்தைகள் திரைப்படங்கள் பார்த்தல் என்ற **மாற்று கல்வி அனுபவங்கள்** அனைத்தும் நின்று போனதில் எங்களுக்கும் ஒரு ஏமாற்றம். இந்த 'கொரோனா அடைப்பு' அல்லது கட்டாய விடுப்பு காலங்களில்தான், நீங்கள் பங்கேற்று வந்த மாற்று கல்வி மிக மிக அதிகமாகத் தேவைப்படுகிறது என்று நாங்கள் கருதுகிறோம். அத்தகைய கருத்தை நீங்களும் எங்கள் களப்பணியார்கள் உங்களை சந்தித்த போது கூறியதை அறிவோம்.

'நேரடி குழந்தைகள் வள மைய பயிற்சிகள்' நிகழ்த்தப்பட முடியாத சூழலில், எங்கள் மனதில் எழுந்த பதில்கள் இரண்டே. முதலாவதாக எழுந்தது, இன்றைக்கு மிக ஆர்பரிப்புடனும் வேகமாகவும் செயல்படுத்தப்பட்டு வரும் "ஆன்லைன்" பயிற்சி வகுப்புகளை நடத்துவது என்பது. ஆனால் கருத்தளவில் எழுந்த மாத்திரத்திலேயே அதை நாங்கள் நிராகரித்து விட்டோம். நமது குழந்தைகளில் 90 சதவீதத்தினரை செல்போனில் கூட தொடர்பு கொள்ள முடியாத சூழ்நிலையில், அது அர்த்தமற்ற ஒன்றாகத் தோன்றியது. இரண்டாவதாக கிடைத்த பதில், **அச்சுப் பதிவில் "குழந்தைகள் கலை கையேடு"** ஒன்றினை புத்தகமாக உருவாக்கி அதை உங்கள் ஒவ்வொருவரின் கையிலும் கொடுப்பது என்பது. உடனடியாக இந்த கருத்தை செயல் வடிவமாக்க முடிவு செய்தோம். இதில் இரண்டு கூடுதல்

பலன்களையும் எங்களால் பார்க்க முடிந்தது. முதலாவதாக இக் கையேடு நீங்கள் பெற்ற ஒரு சிறப்பு வெகுமதியாக நிரந்தரமாக உங்கள் கைகளில் இருக்கும். இரண்டாவதாக, நீங்கள் உபயோகிப்பது மட்டுமல்லாமல், வீட்டிலுள்ள மற்ற குழந்தைகளோடும் மற்ற பெரியவர்களுடனும் கூட பகிர்ந்து கொள்ளுவதற்கான வாய்ப்பும் உருவாகிறது என்பது.

முடிவற்றதாகத் தோன்றும் கொரோனா முடக்கம், நீங்கள் அறிந்தும் அறியாமலும் உங்களுக்கு அச்சத்தையும், கோபத்தையும், இயலாமையையும், சலிப்பையும், ஏன் குடும்பத்தினர் மீது வெறுப்பையும் கூட கொண்டு வரலாம். அதை மிக ஆரோக்கியமான மன நிலையோடும், கலை இலக்கிய யுக்திகளை கையாண்டும், படைப்பாற்றல் கொண்டும் எதிர்கொள்வதற்காகவே இந்த கையேடு எழுதப்பட்டிருக்கிறது.

இனிமேல் வருகின்ற அடுத்த 30 அல்லது 40 நாட்களுக்கு எந்த சமூக இடைவெளி விதிகளையும் மீறாமல் மிகவும் உற்சாகத்தோடு, ஆட்டம், பாட்டம், வரைவது, வண்ணம் தீட்டுவது, கதை, கவிதை, கட்டுரை எழுதுவது, அழகான புகைப்படங்கள் எடுப்பது, பிடித்த உணவை குடும்பத்தாரோடு சேர்ந்து சமைத்து சாப்பிட்டு மகிழ்வது என்று செயல்படப் போகிறீர்கள்.

இந்தக் கையேட்டை குழந்தைகளால் தங்களுக்கு முழுவதுமாக பயனுள்ள வகையில் கையாள முடியுமா என்ற கேள்வி எங்கள் முன் வைக்கப்பட்டது. குழந்தைகள் என்று இங்கு நாம் பேசுவது 6ல் இருந்து 18 வயது வரையானவர்களைத்தான். இந்தக் கையேடு குழந்தைகள் தாங்களாகவே குறிப்புகளை வாசித்து புரிந்து கற்றுக்கொள்ளும் (self-directed learning) அணுகு முறையை ஊக்குவிக்கும் வகையில் எழுதப்பட்டிருந்தாலும், 6ல் இருந்து 10 வயது வரையிலான குழந்தைகள், சில பகுதிகளை வாசித்து புரிந்து கொள்வதில் சிரமம் ஏற்படலாம். அந்தச் சூழ்நிலைகளில் பெற்றோர்கள் அல்லது மூத்த குழந்தைகளின் உதவி இளைய வயதினருக்கு கண்டிப்பாகத் தேவைப்படலாம். இதை நாங்கள் குறையாக பார்க்காமல், குடும்பத்தில் ஏற்படக்கூடிய ஒரு கூட்டுப் படைப்பிற்கும் (collaborative learning), அனுபவப் பகிர்விற்குமான வாய்ப்பாகவே பார்க்கிறோம். தாங்களாகப் பயிலக்கூடிய குழந்தைகளும் கூட தங்கள் அனுபவங்களை பெற்றோருடனும் மற்ற குடும்ப அங்கத்தினர்களுடனும் பகிர்ந்து மகிழ்வது வலியுறுத்தப்படுகிறது. பெற்றோர்களுக்கும் குழந்தைகளுக்கும் இடையில் நெருக்கமான இனிமையான உறவுகள்

ஏற்படுவதற்கு ஆதாரமாக இந்தக் கையேடு அமைந்தால் எங்கள் கனவின் ஒரு பகுதி நிறைவேறி விடும்.

கொரோனா கட்டாய விடுமுறை காலங்களை குழதைகள் மன ஆரோக்கியத்துடனும் ஆக்கப்பூர்வமாகவும் உபயோகிப்பதற்கான வழிகாட்டியாக மட்டும் இந்தக் கையேடு நின்று விடாது. பள்ளி செல்லும் காலங்களில், கொரோனா தடுப்பு நடவடிக்கைகளில் முழு பங்காளர்களாவதற்கான மன வலிமையையும், வரவிருக்கும் 'புதிய இயல்பு நிலையை' (the new normal) படைப்பாற்றலுடன் எதிர் கொள்வதற்கான திறன்களையும் குழந்தைகளுக்கு வளர்த்து தரக் கூடியதாகவும் இக் கையேடு அமையும்.

# 1. வரைதலும், வண்ணமிடுதலும்



இந்த தலைப்பை நான், உங்களுக்காகவே தேர்ந்தெடுத்திருக்கிறேன். இப்போ உங்கள ஒரு ஓவியம் வரைங்கன்னு சொன்னா, நான் ஓவியர் இல்ல, எனக்கு ஓவியம் வரையத் தெரியாது, பயிற்சி இல்லைன்னு சொல்லிருவீங்க. ஆனால் அதே சமயம், வாங்க நாம இப்போ வரையலாம், வண்ணமிடலாம்னு சொன்னா நம்ம வீட்டுல இருக்குற பாப்பா கூட உடனே பென்சிலையும் பேப்பரையும் எடுத்துக்கிட்டு வந்து கிறுக்க ஆரம்பிச்சிரும். அப்படின்னா இப்ப உங்க கைல இருக்கிற பென்சில், ப்ரஷ், க்ரையான், பேஸ்டல், ஆர்ட் பேப்பர் எல்லாத்தையும் வச்சிக்கிட்டு நீங்க சில அற்புதங்களை படைக்கலாமே!

## இந்தக் கையேட்டில இத ஏன் முதல் பயிற்சியா வச்சிருக்கோம் தெரியுமா?

வரைதலும், வண்ணமிடுதலும் குழந்தைகளுக்கு உடனே ஒரு ஆரோக்கியமான மன மகிழ்ச்சியை தரக்கூடியதுங்குறதுனாலதான். இந்த விசயத்தை நான் மட்டுமல்ல, உளவியல் நிபுணர்களும் கல்வியாளர்களும் ஆதாரப்பூர்வமாக சொல்றாங்க.

இரண்டாவது என்னன்னா, இந்த வரைதல், வண்ணமிடுதல் செயல்பாடு என்பது ஒரு முழுமையான மூளை வளர்ச்சி பெற, வளரும் பருவத்தில் உணர்ச்சிகள் பக்குவப்பட, ஏன் மூளை படைப்பாற்றலை நோக்கி செயல்பட வரைதலும், வண்ணமிடுதலும் மிக அவசியம்னு நரம்பியல் நிபுணர்கள் சொல்றாங்க.

மூணாவது, வரைதல், வண்ணமிடுதல் மூலமா நீங்க மற்ற பாடங்களையும் சிறப்பா படிக்கிறதுக்கான ஆற்றலும் கூடும். வலது பக்க மூளை, உங்கள

வரைஞ்சு, வண்ணம் தீட்ட, பாட, ஆட, பேச, நடிக்க வச்சுதுன்னா, இடது பக்க மூளை உங்களை கணக்கு, அறிவியல், மொழிப்பாடம் ஆகியவற்றை மிகச் சிறப்பா செய்ய வைக்கும். இரண்டும் ஒண்ணுக்கு ஒண்ணு துணையா நின்னுதான் வேலை செய்யும். எப்படி இரண்டு கையையும் உபயோகிக்கிறது பலமோ அது மாதிரிதான் வலது மூளையையும்(கலை) இடது மூளையையும் (விஞ்ஞானம் /கணிதம் /மொழி) சமமா உபயோகிக்கப் பழகுவதுதான் பலம். ஒண்ணுக்கொண்னு எதுவும் குறைஞ்சதில்லை. நான் மேல வரைஞ்சுருக்கிற மனித மூளை படத்தை நீங்க நல்லா உற்று பார்த்தீங்கன்னா இது உங்களுக்கு புரியும்.

நாலாவது, "ஓவியம்கிறது பிறப்பிலேயே வரணும்"னு நிறைய பேரு சொல்றது பெரிய பொய். அத நம்பாதீங்க. அதுனால நீங்க தொடர்ந்து வரைஞ்சு, வண்ணமிட்டு பாருங்க. உங்களுக்குள்ள ஒளிஞ்சிக்கிட்டு இருக்கிற ஓவியன் குதிச்சி வெளியே வந்திருவான். உங்க மனசுல படரத வரைங்க, வண்ணமிடுங்க. அது ஒரு பெரிய ஓவியர் வரையுற மாதிரி இருக்க வேண்டியதில்ல. அதே போல நான் வரையர மாதிரி கூட இருக்க வேண்டியதில்ல. நீங்க வரையுறது, வண்ணமிடுறது உங்களுக்கு மகிழ்ச்சி தரணும் முதல்ல! அவ்ளோதான். சரியா!

**மொத்தம் ஐந்து பயிற்சிகள்**


1. **பென்சில் டிராயிங்**
2. **வாட்டர் கலர்**
3. **போஸ்டர் கலர்**
4. **கலர் பென்சில் ஆர்ட்**
5. **வானவில் வரைதல்**

## 1.பென்சில் டிராயிங் (சூரியகாந்தி)


வரைதல், வண்ணமிடுதல் நம்மளோட மூளை வளர்ச்சிக்கும், படிக்கும் திறனை வளர்ப்பதற்கும் எவ்ளோ உதவியா இருக்குதுன்னு பார்த்தோம். அந்த வகையில நாம இப்போ பார்க்கப் போறது பென்சில் டிராயிங். இத எப்படி வரையணும்னு ஸ்டெப்-பை-ஸ்டெப்ஆ பார்ப்போம். இது உங்களுக்கு ரொம்ப ஈசியா செய்ய முடியும்.

கொஞ்சம் இங்கே கவனிங்க, நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிற டிராயிங் சீட்ல, நமக்கு பிடிச்ச மாதிரி ஒரு படத்த முதல்ல வரைஞ்சுக்கனும். இப்போ எனக்கு பிடிச்ச ஒரு சூரியகாந்தி பூ வரைஞ்சுருக்கேன். அத பாருங்களேன். சூரியகாந்தி பூ இருக்குதா, பார்க்க முடியுதா. இதே மாதிரி நீங்க உங்களுக்கு பிடிச்ச ஒன்றை டிராயிங் சீட்ல வரைந்து கொள்ளுங்கள்.


முதலாவதாக நீங்க தெரிந்து கொள்ள வேண்டியது என்னென்னா, நீங்க வரையும் போது உங்க டிராயிங் சீட்ட ரொம்ப அழுத்தி வரையக் கூடாது, அதே மாதிரி அடிக்கடி "ரப்பர்" வச்சு தேய்க்கக் கூடாது. அப்படி செஞ்சீங்கன்னா டிராயிங் சீட் அழுக்காகிடும், இல்ல கிழிஞ்சு போறதுக்கும் வாய்ப்பிருக்கு. எனவே உங்க பென்சிலை கொண்டு நீங்க வரைய நினைக்கிறதை முதல்ல மெல்லிய கோடுகளாக "ஸ்கெட்ச்" பண்ணிக்கோங்க. இந்த படம் மாதிரி சரியா!



இரண்டாவதாக, நாம போட்டு வைச்ச "ஸ்கெட்ச்"ல [நீங்க "உதாரணத்திற்கு" க்கு பயன்படுத்தும் படத்தில] எங்கெங்கு வெளிச்சம் உள்ளதோ அதை விட்டு விட்டு, பின் " shade " இருக்கும் இடத்தை மட்டும் இந்த படத்தில் உள்ளமாதிரி உங்க பென்சிலை வச்சு "shade"பண்ணிக்கோங்க.



மூன்றாவதாக நாம் செய்ய வேண்டியது என்னன்னா, இந்த உதாரணத்திற்கு கொடுக்கப்பட்டுள்ள படத்தில் எங்கெல்லாம் டார்க் "shade" இருக்கிறதோ, அங்கெல்லாம் இந்த படத்தில இருக்குறது மாதிரி நீங்களும் டார்க் "shade" செய்ங்க.




மேற் சொன்ன மூன்று செய்முறைகளையும் நாம சிறப்பா செஞ்சு முடிச்சுட்டோம். அதுனால இப்போ நமக்கு ஒரு அழகான சூரியகாந்தி பூ பென்சில் டிராயிங் கிடைச்சாச்சு. என்ன இப்போ மகிழ்ச்சியா இருக்குதா. வரைஞ்ச பூவை உங்க வீட்ல இருக்குறவங்ககிட்ட காட்டுங்க, ரொம்ப சந்தோசப்படுவாங்க.

## 2. வாட்டர் கலர் (சிட்டுக்குருவி)

இப்போ நம்ம வாட்டர் கலர் ஆர்ட் எப்படி வரையரதுன்னு பார்ப்போம். "வாட்டர் கலர்"னா தமிழ்ல "நீர் வண்ண ஓவியம்"னு அர்த்தம். அதாவது நமக்கு பிடிச்ச கலர்ல தண்ணீரை நிறைய கலந்து வரையறது.

**முதல் ஸ்டெப்**

உங்களுக்கு பிடிச்ச படம் எது வேணும்னாலும் வரையலாம். இங்க நான் ஒரு அழகான சிட்டுக்குருவிய உதாரணமா எடுத்துருக்கேன். இந்த சிட்டுக்குருவி படத்தை நல்லா கவனிச்சு பாருங்க. நல்லா பார்த்தாச்சா, சரி. அப்போ, நாம இந்த படத்திற்கு கீழே இங்கே கொடுத்துருக்குற இரண்டாவது ஸ்டெப்குள்ள போகலாம்.



## இரண்டாவது ஸ்டெப்

உதாரணத்திற்கு கொடுக்கப்பட்டுள்ள படத்துல என்னென்ன கலர் இருக்கோ அந்தந்த கலரை எடுத்துக்கோங்க. அதுக்கப்புறம், தேவையான கலர்ல உங்க ப்ரஷ் மூலம் நெறைய தண்ணீர் தொட்டு முதல் கோட்டிங்கை லைட்டா குடுக்கணும்.

இந்த படத்தை பார்த்து கவனமாக வரைங்க.....



## மூன்றாவது ஸ்டெப்

நீங்க லைட் கோட்டிங் கொடுத்து முடிச்ச பின்னாடி இந்த படத்துல இருக்கிற மாதிரி எங்க எல்லாம் “டார்க்” shade இருக்கோ அங்கெல்லாம் அதே கலர் எடுத்து அப்ளை பண்ணுங்க. கலர் அப்ளை பண்ணி முடிச்சாச்சா, இப்போ பாருங்க நீங்க ஒரு அழகான ஒரு சிட்டுக்குருவிய உங்க கையாலே வரைஞ்சு முடிச்சிட்டீங்க. எப்படி ரொம்ப ஈசியா இருந்துச்சா, ஈசியாத்தான் இருக்கும் இதே மாதிரி நீங்க உங்களுக்கு பிடிச்சத வரைஞ்சு பாருங்க.




## 3. போஸ்டர் கலர் (பிளவர் வாஸ்)

இன்னிக்கு நாம வரைய போறது "போஸ்டர் கலர்" ஆர்ட். இது வாட்டர் கலர் போல் தண்ணீர் நெறைய தொட்டு வரையற முறை கிடையாது. கொஞ்சமா தொட்டு அத வச்சு வரையனும். இங்கே கீழே கொடுக்கப்பட்டுள்ள விளக்கப் படங்களை முதல்ல நீங்க பார்த்து தெரிஞ்சுக்கிட்டு, அப்புறம் நீங்க கவனமா வரையனும். சரியா? சரி. இப்போ இத எப்படி வரையரதுன்னு நாம ஸ்டெப்-பை-ஸ்டெப்பா பார்ப்போம்.

### முதல் ஸ்டெப்

வரைதலை பொறுத்த மட்டும் உங்களுக்கு பிடிச்ச எந்த உருவத்தையும், படத்தையும் வரையலாம். இதைத்தான் வரையணும்னு கட்டாயமெல்லாம் கிடையாது. நாம வரையறது என்பது நம்மோளோட மகிழ்ச்சிக்காகத்தான், அப்புறம் நம்ம படத்தை பார்க்குறவங்களையும் மகிழ்ச்சி படுத்தட்டும். என்ன சரிதானே? இங்கே நான் இன்னிக்கு பூக்களையும், ஜாடியையும் வரையப் போறேன்.



## இரண்டாவது ஸ்டெப்

படத்தை நல்லா கவனமா பாருங்க, என்னென்ன கலர் இருக்கு, நல்லா பாருங்க , கலர் கண்டுபிடிச்சிட்டீங்களா? அப்டின்னா படத்துல இருக்குறதை வரையத் தேவையான கலரை எடுத்துக்கோங்க. கலரை எடுத்த பின்னாடி தேவையான இடங்களில் அந்த கலர்களை கொண்டு லைட்டா அப்ளை பண்ணனும்.



## மூன்றாவது ஸ்டெப்

இப்போ இந்த படத்துல இருக்கிற மாதிரி எங்க எல்லாம் “டார்க்” shade இருக்கோ, அந்தந்த இடங்களில், அங்க அதே கலர் எடுத்து அப்ளை பண்ணுங்க. இப்போ பாருங்க, நமக்கு ஒரு அழகான பூ ஜாடி கொண்ட போஸ்டர் கலர் ஆர்ட் ரெடி!




## 4. கலர் பென்சில் ஆர்ட்

கலர் பென்சில் ஆர்ட் என்பது பென்சில் டிராயிங் மாதிரி தான். பென்சில் டிராயிங்கில் நாம் பின்பற்றிய வழிமுறைகள் கலர் பென்சில் ஆர்ட்டிற்கும் பொருந்தும். அதுனால நமக்கு இது ரொம்ப ஈஸி. கலர் பென்சில் ஆர்ட் வரைவதற்கு தயாரா இருக்கீங்களா?. அப்படின்னா இப்போ, கலர் பென்சில் ஆர்ட் எப்படி வரையுறதுன்னு நாம ஸ்டெப்–பை- ஸ்டெப் ஆக பார்ப்போம்.


### முதல் ஸ்டெப்

நான் ஏற்கனவே உங்களுக்கு சொல்லியிருக்கேன் நீங்க உங்களுக்கு பிடிச்ச எதை வேண்டுமானாலும் வரையலாம். அதுனால உங்களுக்கு பிடிச்ச ஒரு படத்த வரைஞ்சுக்கோங்க. நான் இங்கே இப்போ ஒரு ஆப்பிள் படம் வரையப் போறேன். முதலில் நீங்கள் ஒரு பென்சிலை கொண்டு கீழே கொடுக்கப்பட்டிருக்கும் ஆப்பிள் பழம் படம் ஒன்றை வரையுங்கள்.



### இரண்டாவது ஸ்டெப்

படத்தில் எங்கெங்கு வெளிச்சம் உள்ளதோ (படத்தினுள் கலர் இல்லாத பகுதி) அதை விட்டு விட்டு, பின் “shade ” இருக்கும் இடத்தை மட்டும் படத்தில் உள்ளவாறு கலர் பென்சிலை கொண்டு “shade” செய்யுங்கள். [பென்சில் டிராயிங் போலவே]



**மூன்றாவது ஸ்டெப்**

இப்போ நல்லா கவனிங்க, நமக்கு உதாரணத்திற்காக கொடுக்கப்பட்டுள்ள படத்தில் எப்படி டார்க் shade கொடுத்துருக்காங்களோ அதே மாதிரி நீங்க ஏற்கனவே வரைஞ்சு வச்சுருக்குற உங்க ஆப்பிள் படத்துக்கு, இந்த படத்துல தெரியிற ஆப்பிள் மாதிரியே நீங்க டார்க் " shade " செய்ங்க. அப்படி நீங்க டார்க் "shade" கொடுத்து முடிச்சதுக்கப்புறம் இப்போ பாருங்க, உங்க கையில ஒரு அழகான கலர் பென்சில் ஆர்ட் ஆப்பிள் படம் ரெடியா இருக்குது.



## 5. வானவில் வரைதல் (ஆயில் பேஸ்டல்)

இன்றைக்கு நாம் ஆயில் பேஸ்டல் கொண்டு ஒரு அழகான வானவில் படத்தை வரையப் போறோம். உங்க எல்லோருக்குமே வானவில் ரொம்ப பிடிக்கும்னு தெரியும். வானவில் பிடிக்காதவர்கள் என்று இந்த உலகத்தில்

யாருமே இருக்க முடியாது அவ்ளோ அழகு. அதை பார்க்கும் போது மனதுக்கு அவ்ளோ இதமா இருக்கும். ஒரு துள்ளல் போன்ற உணர்வு ஏற்படும்.

ஆனால், இப்போல்லாம் நாம வானவில்லை பார்க்க முடியறது இல்லை. மழை தண்ணி இல்லை, இயற்கையை எல்லாம் அழிச்சாச்சு, மரத்தையெல்லாம் வெட்டி, காடெல்லாம் அழிச்சு பிளாட் போட்டு வித்தாச்சு. அப்புறம் எப்படி மழை பெய்யும், நாம வானவில்லை பார்க்க முடியும். இனிமேலாவது மரத்தை வெட்ட விடாமல் பாதுகாக்கணும். எதிர்கால குழந்தைகளின் நலன் கருதி காடுகளை அழிப்பதை பெரியவர்கள் நிறுத்த வேண்டும்.

சரி, நேர்ல பார்க்க முடியாத அந்த வானவில்லை நாம இப்போ இங்கே நம்ம கையிலேயே பார்க்கலாம். என்ன தயாரா இருக்கீங்களா, வரைவோமா? எப்படி வரையுறதுன்னு ஸ்டெப்-பை-ஸ்டெப்பா பார்க்கலாம்.

### முதல் ஸ்டெப்

முதலில் நமக்கு பிடிச்ச கலர்களை எடுத்துக்கிட்டு இந்த படத்துல இருக்குற மாதிரியோ அல்லது எப்படி வேண்டுமானாலும் கலரை அப்ளை பண்ணிக்கணும்.



### இரண்டாவது ஸ்டெப்

கலர் அப்பளை செஞ்சு முடிச்சதுக்கப்புறம் இந்த படத்துல இருக்கிற மாதிரி நாமே ஏற்கனவே கலர் செஞ்சு வச்சு இருக்கிறது மேல் கருப்பு fabric கலர் எடுத்து இப்படி மொத்தமா அப்ளை பண்ணிக்கணும்.



### மூன்றாவது ஸ்டெப்:

Fabric கலர் அப்ளை பண்ணிட்டு நல்லா காய வைக்கணும், அந்த கலர் நல்லா காய்ஞ்சதுக்கு அப்புறம் நீங்க ஒரு சின்ன குச்சி எடுத்துகிட்டு அந்த கலர் மேல மெதுவா உங்களுக்கு தோணுற மாதிரி மெதுவா கிறுக்கனும், ரொம்ப அழுத்தி கிறுக்கக் கூடாது. அழுத்தி கிறுக்குனா பேப்பர் கிழிஞ்சுடும்.

இப்போ பாருங்க உங்க கையில ஒரு அழகான வானவில் ஆர்ட் ரெடி..!



# 2. நீங்களும் கதை எழுதலாம்



## பகுதி-1

இரண்டு காலால நடக்கிற பிராணி யாருன்னு கேட்டா, யார சொல்லுவீங்க?

“மனுசன்” அப்படீன்னு உடனே சொல்லிருவீங்க. இல்லையா? அதே மாதிரி கதை சொல்லுற பிராணி யாருன்னு கேட்டா யாருன்னு சொல்லுவீங்க?

அதுக்கும் பதில் “மனுசன்” தான். அவன் தான், தோன்றுன காலத்தில இருந்து இன்னைக்கு வரைக்கும் பல மாதிரியா மட்டுமில்ல, பல கதைகளையும் சொல்லித்தான் இந்த சமுதாயத்தை கட்டமைச்சிருக்கான். மனுசன் சாமானியமான ஆளு கிடையாது. தான் எழுதுற கதைல அவன் மற்ற மிருகங்கள கூட அவன மாதிரியே பேச, ஏன் கதை கூட சொல்ல வைப்பான்.

**உங்களுக்கு தெரிஞ்ச ஒரு கதைய நான் திருப்பி சொல்லப் போறேன்!**

ஒரு ஊர்ல ஒரு பாட்டி இருந்துச்சாம். அதுக்கு வேற யாரும் கிடையாதாம். காட்டு வேலைக்கோ, வீட்டு வேலைக்கோ போக முடியாதாம். என்ன பண்றது? “வடை சுட்டு விப்போம்... பசிக்கு இல்லன்னாலும் விளையாட்டுக்காவது இரண்டு வடைய வாங்கி சாப்பிடமாட்டானுகளா என்ன?”ன்னு சொல்லிகிட்டு கடையப் போட ஒரு இடத்த தேடிச்சாம் அந்த பாட்டி. கடைத் தெருவுலயா பாட்டிக்கு இடம் கிடைக்கும்? வாடகை யாரு குடுப்பா? அதுனால ஊருக்கு வெளிய இருந்த ஆலமரத்துக்கு அடியில போயி கடைய போடலாம்னு ஐடியா பண்ணிச்சாம்.



அந்த ஆலமரத்துக்கு, பாட்டி பிறக்கும் போதே 200 வயசாம். அப்படீன்னு பாட்டியோட பாட்டி, பாட்டி சின்னப் பிள்ளையா இருக்கும் போது அடிக்கடி சொல்லுவாங்களாம். மன்னர் திருமலை நாயக்கர் கூட வேட்டையாடி களைச்சு போயி அந்த மரத்துக்கு கீழ கூடாரத்த போட சொல்லி படுத்துத் தூங்குவாருன்னு அந்த பெரிய பாட்டி சொல்லுவாங்களாம். அப்பவே அது 100 வயசு மரம்னு மன்னர் எழுதி வச்சிருக்காராம். அப்ப அது ராசியான இடமாத்தானே இருக்கனும். அது மட்டுமில்ல. பொழுது போகாத ஆசாமிகள் எல்லாம் வெட்டி கதையடிக்க, பல்லாங்குழி ஆட, படுத்து தூங்கன்னு அங்கதான வருவாங்க. பாட்டி கடைய போட்டதலிருந்து நல்ல வியாபாரம்.

அந்த மரத்தில வித விதமா, ஏராளமான பறவைகள் கூடு கட்டி வாழ்ந்துச்சுங்க. காக்கா கூட்டம் தான் அதிகம். காக்காக்கள் உட்பட எல்லா பறவைகளும் காலையில பாட்டி வர்றதுக்கு முன்னாலேயே போயிரும். பாட்டி கடைய காலி பண்ணி வீட்டுக்குப் போன பிறகுதான் எல்லாம் வந்து அவுங்க அவுங்க கூடுகள்ல அடையும். ஆனா காக்கா கூட்டத்தில ஒரு காக்கா மட்டும் எங்கேயும் போகாம மரத்துலயே இருக்கும். ஒரு நாளு அந்த காக்கா பாட்டி கண்ணுல பட்டிருச்சு. பாட்டிக்கு சந்தேகம். "நம்ம அசரும் போது இது வடையல்ல தூக்கும்" னு சொல்லிகிட்டே " சீ சனியனே போ" ன்னு சொல்லி கைல கெடச்ச ஒரு கட்டைய தூக்கி எறிஞ்சிச்சு. அந்த காக்கா பறந்து போறதுக்கு பதிலா, தரைய நோக்கி பறந்து வந்து பாட்டி பக்கத்துல உக்காந்திச்சு.

"பாட்டி, பாட்டி, என்ன நினைச்சுகிட்டு என்ன விரட்டற? பிறக்கும் போதே எனக்கு என்னோட வலது ரெக்கை சரியா வேலை செய்யாது. அதுனால ரொம்ப தூரம் பறந்து ஊருக்குள்ள போயி இறை தேட முடியாது. அதுமட்டுமில்ல... எங்க சனத்தபத்தி எல்லாரைப் போல நீயும் தப்பா நினச்சு வச்சிருக்க. அதுகளுக்கு கிளியப் போல மாம்பழமும், மயிலப் போல சோளக் காட்டுல சோளக் கதிருமா கிடைக்குது? நாங்க ஊருக்குள்ள வந்து நீங்க தூக்கிப் போடுற கெட்டுப்போன

சோத்தையும், தெருவில செத்து கிடக்கிற எலியையும் சாப்பிடுறோம். இன்னும் சொல்லப்போனா, ஊரையே சுத்தம் பண்றோம்."

"ம்... ம்... சொல்லு கேக்குறேன்"னு பாட்டி சொல்லுச்சி.

"எப்பமோ ஒரு காக்கா நீங்க மறந்து வச்சிட்டு போற தேங்கா சில்ல பசியில தூக்கிட்டு போகும். அதுக்கு என்ன எங்கள சும்மா விடுறீங்களா. திருட்டு பட்டம் கட்டி திருட்டு காக்கானுல்ல சொல்றீங்க... நாசமா போனதுங்கிறீங்க... ஆனா ஒங்க தோட்டத்த காலி பண்ற மயில அழகுன்னா அழகுங்குறீங்க, சாமிங்கிறீங்க. கிளிக்கு பழம் கொடுத்து மகிழ்றீங்க. அது மட்டுமில்லாம அது மாதிரியே கொஞ்சுறீங்க."

"அடிப்பாவி... இதெல்லாமா நீ தெரிஞ்சு வச்சிருக்க?" ன்னு பாட்டி ஆச்சரியமா கேட்டுச்சு.

"அது இருக்கட்டும் பாட்டி... மரத்தடியில தூங்கற எத்தன பொறுப்பில்லாத பயலுக ஒங்கிட்ட கடனுக்கு வடைய வாங்கித் தின்னுட்டு ஏமாத்திட்டு போயிருக்கானுக? நீயும், போனாப் போறானுக... ஏன் சாதி சனம், தின்னா தின்னுட்டு போட்டும்னு சும்மா விட்டு வச்சிருக்க இல்லையா? ஆனா சும்மா பசியில இருக்கிற என்ன வெரட்டுற. ஒண்ணு சொல்லுறேன்... மனுசங்களான நீங்கதான் பறவை கூட்டத்துக்குள்ளேயும், பெரியவன் சின்னவன், விரும்பத்தக்கவன், விரும்பத்தகாதவன், ஒதுக்கபட வேண்டியவன்னு பிரிவினைய உண்டாக்கி விட்டிருக்கீங்க"ன்னு மழை பேஞ்சா மாதிரி கொட்டி தீர்த்துடுச்சு காக்கா.

பாட்டிக்கு வாயடச்சுப் போச்சு. அதுமட்டுமில்ல, பாட்டிக்கு அழுகையும் வந்திருச்சு. "சரி இனி மேல் நீ எங்கேயும் போக வேண்டாம். பசிக்கும் போதெல்லாம் வா... நான் பசியாத்த வடை தருவேன்... பயப்படாதன்னு சொல்லி பாட்டி ஒரு வடைய குடுக்க அத கொத்திக்கிட்டு தள்ளிப் போய் சந்தடியில்லாத இன்னொரு கிளையில உக்காந்திச்சு. அப்பதான் பாத்திச்சி காக்கா, கீழ ஒரு குட்டி நரி உக்காந்து கண் கொட்டாம தன்னையே பாத்துக்கிட்டு இருக்கிறதை.

இது என்னடா வம்பா போச்சுன்னு காக்கா கவனமா வடைய காலுக்கடியில வச்சி மிதிச்சு பிடிச்சிகிட்டு, " ஏய் குட்டிப்பய நரியே, என்ன சமாச்சாரம்?" ன்னு கேட்டுச்சு. "ஒண்ணுமில்ல... ரொம்ப பசிக்குது" ன்னு சொல்லுச்சு நரி. "வடை

தின்ற நரிய இப்பதான் பாக்குறேன் நான்" ன்னு காக்கா சிரிச்சிச்சு. "கறி தின்ற நரியா இருந்தா நான் ஏன் வடைய கேக்குறேன்... எனக்கு தந்திரம் பத்தலைன்னு எங்க கூட்டம் என்ன வேட்டையாட கூட்டிட்டு போகாம விரட்டீருச்சு... நான் இப்படியே பிச்சை எடுத்து சாப்பிடுறேன்... பசிக்குது" ன்னு சொல்லி பாவமா பாத்திச்சு நரி. "சரி இதுக்கெல்லாம் வருத்தப்படாத... வடையப் போடுறேன்... மண்ணுல விழாம பிடிச்சுக்க" ன்னு சொல்லி காக்கா வடைய போட்டிச்சு. நரி சந்தோஷமா வடைய எடுத்துக்கிட்டு ஓடியே போயிடுச்சு.

## பகுதி-2

கதையை நல்லா வாசிச்சீங்களா?
அப்ப நாம கொஞ்சம் அதப்பத்தி யோசிக்கலாம். ஒவ்வொரு கேள்விக்கும் கட்டத்தில பதில் எழுதுங்க பார்ப்போம்!

1. இந்தக் கதை முதல்ல உங்களுக்கு புடிச்சிருக்கா? ஆம்/ இல்லை [√ குறி இடவும்]

ஆமான்னாலும் சரி இல்லேன்னாலும் சரி, ஏன்னு அதற்கான காரணத்தை கட்டத்துக்குள்ள 4 வரி எழுதுங்க பார்ப்போம்.

2. இந்தக் கதையில வர்ற முதன்மையான பாத்திரம் (நாயகன் அல்லது நாயகி) யாரு?

3. இந்தக் கதையில நேரடியாக வரும் பாத்திரங்கள் யார் யார்? கதையின் பின்னணியில மறைந்திருக்கும் பாத்திரங்கள் யார் யார்?

| நேரடி பாத்திரங்கள் | மறைமுக பாத்திரங்கள் |
|---|---|
| 1.<br>2.<br>3.<br>4. | 1.<br>2.<br>3.<br>4. |

4. கதையில் தமிழகத்தின் எந்த மாவட்டத்தில அல்லது எந்த பகுதியில பாட்டியின் கிராமம் அமைக்கப்பட்டிருக்கிறது? அதற்கான சான்று அல்லது தடயத்தை உங்களால இந்த கதையில எங்க பார்க்க முடிகிறது?

| மாவட்டம் அல்லது பகுதி | கதையில் கிடைக்கும் ஆதாரம் |
|---|---|
| | |

5. இந்த கதையில் வரும் ஆலமரம், இன்றைக்கு உயிரோடு இருந்தால் அதன் வயது என்ன? √ குறி இடவும்.

| | |
|---|---|
| 300 ____<br>400 ____<br>500 ____<br>600 ____ | கதையில் கிடைக்கும் ஆதாரம் என்ன? |

6. கதையின்படி, அந்த பாட்டி எத்தனை ஆண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்திருக்கலாம்?

| | |
|---|---|
| 300 ____<br>400 ____<br>500 ____<br>600 ____ | கதையில் கிடைக்கும் ஆதாரம் என்ன? |

7. கதையில பாட்டி வடை சுட்டு விற்க முடிவு எடுத்ததில் இருந்து, நரி வடையை காக்காகிட்ட கடைசியா வாங்கின வரைக்கும் பல முக்கிய நிகழ்வுகள் சொல்லப்பட்டிருக்கிறது . அந்த நிகழ்வுகளை அப்படியே கதையில் வரும் வரிசையில் எழுதவும்.

1. பாட்டி வடை சுட்டு விற்க முடிவு
2. கடை வைக்க இடம் தேடல்
3. ______________________________
4. ______________________________
5. ______________________________
6. ______________________________
7. ______________________________
8. ______________________________
9. ______________________________
10. காக்கா வடையை நரிக்கு போடுதல்
11. நரி வடையை எடுத்துக் கொண்டு போதல்

8. ஒரு கதைன்னா, சில விஷயங்கள் நம்புற மாதிரி இருக்கும் பல விஷயங்கள் நம்ப முடியாதபடி கற்பனையா இருக்கும். பாட்டி-காக்கா கதைல உங்களுக்கு எதெல்லாம் உண்மையா தோணுச்சு, எதெல்லாம் கற்பனையில நடக்கக் கூடியதா இருந்துச்சு, எதெல்லாம் கற்பனையில கூட நடக்கக் கூடாததாக இருந்துச்சு?

| **உண்மை நிகழ்வு** | **நிகழக் கூடிய கற்பனை** | **நிகழக் கூடாத கற்பனை** |
|---|---|---|
| உம்:<br>திருமலை நாயக்கர் அரசாண்டது<br>கீழே மூன்று உதாரணங்கள் தரவும்:<br>1.<br>2.<br>3. | வேட்டைக்குச் சென்றது<br>1.<br>2.<br>3. | பறவைகள் அவரிடம் பேசின என்று சொல்வது<br>1.<br>2.<br>3. |

9. கதையில எதிர்பாராத அல்லது சுவராசியமான திருப்பங்கள் எங்கெல்லாம் பாத்தீங்க?

| 1. | 2. | 3. | 4. | 5. |
|---|---|---|---|---|
| | | | | |

10. கதையிலிருந்து வாழ்க்கைக்குத் தேவையான கருத்துக்களாக நீங்க எடுத்துக் கொள்ளக் கூடியவை ?

| |
|---|
| |

## பகுதி -3

## கதை எழுதுவது எப்படி ?

இரண்டாவது பகுதியில இருக்கிற பயிற்சிய செஞ்சு முடிச்சீங்களா? இல்லைன்னா, அதை போய் முடிச்சிட்டு இந்த பகுதிக்கு வாங்க! இல்லைன்னா இந்த பகுதி புரியாது. கதையும் எழுத முடியாது.

நாம இங்க கத்துக்கப் போறது எழுத்து வடிவ கதையத்தான்!

அப்படின்னா வேற வேற வடிவத்தில கதை இருக்கா?

ஆமா நான் தான் சொன்னேனே... ஆரம்பத்தில இருந்து இன்னைக்கு வரைக்கும் மனித சமுகம் கதை சொல்றத மிக மிக முக்கியமா கருதுறவங்கன்னு . அத வச்சுத்தான இந்த சமுதாயத்தில பல உண்மையையும் பொய்யாக்கியிருக்காங்க, பல பொய்யையும் உண்மையாக்கிருக்காங்க. அதுல நல்ல கதையும் இருக்கு, சீரழிக்கிற கதையும் இருக்கு. அதே மாதிரி அவுங்க சொல்ற கதை அவுங்க உபயோகிக்கிற ஊடகத்துக்கு தகுந்த மாதிரி மாறவும் செய்யும்.

கொஞ்சம் விளக்கமா உங்களுக்கு புரியுற மாதிரி இங்க கட்டம் கட்டி சொல்றேனே!

| காலம் | ஊடகம் அல்லது மீடியம் | உதாரணம் |
|---|---|---|
| சுமார் 40000 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிலிருந்து | ஓவியம் | குகை ஓவியங்கள் |
| சுமார் 40000 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிலிருந்து | ஆடி கதைப்படுத்துதல் (உடல் அசைவு) | குகை ஓவியங்களில் காணப்படும் நடனங்கள் முதல்<br>இன்றுள்ள பல நடன வடிவங்கள் வரை |
| சுமார் 5000 ஆண்டுகள் தொட்டு | பாடி கதை சொல்லுதல் | தமிழ்நாட்டில் பாணர்கள் கதை சொன்ன விதம் இதிகாசங்கள் பாடப்பட்டது. இன்றைக்கும் பாடி கதை சொல்லுதல் நம்மிடையே இருந்து வருகிறது. |
| சுமார் 3000 ஆண்டுகள் தொட்டு | எழுத்து வடிவில் கதைகள்/ ஓலைச் சுவடுகள்/பைப்ரஸ் | இதிகாசங்கள், நாடகங்கள் |

| | | |
|---|---|---|
| சுமார் 200 ஆண்டுகளாக | அச்சு பதிப்பு | சிறுகதை, நாவல், நாடகம் |
| 1895 முதல் | திரைப்படம் | திரைப்பட கதை |
| 1904 முதல் | ரேடியோ | ரேடியோ கதை |
| 1936 முதல் | டெலிவிஷன் | டெலிவிஷன் கதை |
| 1970 முதல் | வீடியோ | வீடியோ படக் கதை |
| 1990 முதல் | கணினியோடு தொடர்புடைய எண் முறை தகவல் தொடர்பு, இணைய தளம் | குறும்படங்கள், யூ-டியூப் |
| 2015 முதல் | கணினியோடு தொடர்புடைய எண் முறை தகவல் தொடர்பு, இணைய தளம் | வெப் சீரீஸ் |

**கதைகள் பல வகை படும்**

கதை ஆசிரியர் எந்த பொருளை எடுத்துக்கிறாரு, எந்த வகையான ஊடகத்தின் வழியா கதைய சொல்லப்போறாரு, எந்த மாதிரி நிகழ்வுகள் முரண்பாடுகளை முக்கியப் படுத்தி பின்னிப் பின்னி, எத நோக்கி நகருவாரு, பாத்திரப் படைப்புகள் எப்படி இருக்கும், அவருடைய கற்பனைத் தன்மை என்ன, ஆகியவற்றை வச்சித் தான் ஒரு கதை மற்றொரு கதையில இருந்து வேறுபடும்.

**உதாரணத்துக்கு பாட்டி-காக்கா கதைய எடுத்துகிட்டோம்னா...**

**என்ன பொருள்?** சமூக நீதி (வலிமையில்லாதவுங்க பாதிப்புக்குள்ளாவது, அன்பு, இரக்கம் ஆகியவற்றின் அவசியம்)
**என்ன ஊடகம்?** வாய்மொழி வழியாக
**முக்கியப்படுதப்பட்ட நிகழ்வுகள் என்ன?** சாமானியர்களுடைய வாழ்வாதாரப் பிரச்சனை
**என்ன முரண்பாடு?** வலிமையானவர்கள் - வலிமையற்றவர்கள் முரண்பாடு
**பாத்திரப் படைப்புகள்?** மனித பண்புகளை கொண்ட மிருகங்கள், சாமானியர் (பாட்டி)

**எப்படிப்பட்ட கற்பனை?** நிகழக் கூடாத கற்பனை அதிகமாக உபயோகம் (மிருக பாத்திரங்கள்)

**எப்படி கதை நகர்ந்தது?** சுமூகமான தீர்வை நோக்கி கதை நகர்ந்து மகிழ்ச்சியான முடிவை அடைதல்

இப்ப புரியுதா நான் என்ன சொன்னேன்னு? இனிமே நாம கதைன்னா என்னன்னு சொல்லிடலாம்! சொல்லிடலாமா?

**கதை என்றால் என்ன?**

- கதை, ஒரு **உண்மையான அல்லது கற்பனையான** நிகழ்வைப் பற்றிய விவரங்களை கூறும்
- கதை, உண்மையான அல்லது கற்பனையான நிகழ்வுகளையும் அதோடு தொடர்பு கொண்ட இடங்களையும் ஒரு **கால வரிசையில்** கட்டமைக்கும் (கதைப்பின்னல்)
- **கதைப் பின்னல்** கதையை அர்த்தப்படுத்தும், சுவாரசியப்படுத்தும்
- கதைக்குள் நாம் வைக்கும் **பாத்திரங்கள்** உயிரோட்டமாக நடமாடும், பேசும்.




**கதையை எவ்வாறு எழுதுவது?**

I. **முதல் படி**

விருப்பமுள்ள ஒரு தலைப்பை தேர்ந்தெடுங்கள். குறிப்பாக அது நீங்கள் **தீர்வு காண** விரும்பும் அல்லது மற்றவர்களுக்கு **சொல்ல விரும்பும்** ஒரு பிரச்னையை, செய்தியை சார்ந்து இருக்கலாம். ஏதாவது காரணத்திற்காக அது உங்களை **கவர்ந்திருக்க வேண்டும்.**

**உங்கள் கதையின் தலைப்பு**

## II. இரண்டாம் படி

நீங்கள் அமைக்கப் போகும் கதை உலகம், **எந்த இடத்தில்** அல்லது **இடங்களில்** நிகழப் போகிறது என்று தீர்மானிக்கவும். கதை உலகம் உண்மையான ஊராக இருக்கலாம். அல்லது கற்பனையான இடமாக இருக்கலாம். இந்த பிரபஞ்சத்தின் எந்த ஒரு மூலையாகக் கூட இருக்கலாம். சந்திரனிலும் இருக்கலாம், வெள்ளி கிரகத்திலும் இருக்கலாம். பிரபஞ்சத்தையும் தாண்டி யாரும் இதுவரை கற்பனை கூட பண்ணாத உலகமாகக் கூட இருக்கலாம்.

உங்கள் கதையில் வரப்போகும் ஊர்/இடம் அல்லது ஊர்களின்/இடங்களின் பெயர்கள் என்ன? (முழுவதும் கற்பனையான ஊர்களாக அல்லது இடங்களாக இருக்கலாம்). அவை எங்கு இருக்கின்றன? அவ்வூர்கள்/இடங்கள் காண்பதற்கு எவ்வாறு இருக்கும்? அவைகளின் சிறப்பு அம்சங்கள் யாவை? நீங்கள் ஏன் அந்த இடங்களை தேர்ந்தெடுத்தீர்கள்?

### III. மூன்றாம் படி

நிஜ உலகத்தை போல், கதை உலகமும் ஒரு கால வரையறைக்குள் தான் இயங்கும். உங்கள் கதை எந்த காலத்தில் தொடங்கி எந்த காலத்தில் முடிகிறது என்று தீர்மானிக்கவும். உங்கள் கதை ஒரு மணி நேர நிகழ்வாக இருக்கலாம், ஒரு நாள் காலை ஆரம்பித்து அன்று மாலை முடியலாம். அல்லது பல ஆண்டுகள் தொடர்ந்து நடக்கும் நிகழ்வுகளை கொண்டதாக இருக்கலாம்.

உங்கள் கதை உலகம் எப்போது ஆரம்பித்து எப்போது முடிகிறது? மொத்தம் எவ்வளவு காலம் கதை நிகழ்கிறது என்று எழுதவும்?

### IV. நான்காம் படி

கதை உலகம் கதா பாத்திரங்கள் இல்லாமல் இயங்காது. உங்கள் **கதா பாத்திரங்கள் யார், யார்**? மனிதர்களா? மிருகங்களா? வேறு உலகத்தில் இருந்து பூவுலகிற்கு நீங்கள் கொண்டு வரும் புதிய பாத்திரங்களா?

நீங்கள் படைக்கப் போகும் பாத்திரங்களின் விவரங்களை எழுதவும்.

1. முக்கிய பாத்திரம்: பெயர்:__________________ முக்கிய பண்பு________________________
2. துணைப் பாத்திரங்கள்
3. சிறு பாத்திரங்கள்: (பெயர்கள் மட்டும்)

V. **ஆச்சரியம்!, எதிர்பாராதவை!, திகைப்பு !**

ஒரு கதை வாசிப்பவர்களை சுவராசியப்படுத்த வேண்டுமென்றால் உங்கள் கதை **எதிர்பாராத திருப்பங்களை** கொண்டிருக்க வேண்டும். அந்த திருப்பங்கள் கதைக்கு ஏற்ற, இறக்கங்களை தர வேண்டும். உதாரணமாக நம் கதையில் காகம் தரையில் வந்து பேசும் என்று யாரும் நினைத்திருக்க மாட்டீர்கள். அதே போல் பாட்டி தானாகவே காக்காவுக்கு வடை கொடுக்க முன் வருவது ஒரு எதிர்பாராத திருப்பம். நீங்களும் இது போல பல திருப்பங்களை உங்கள் கதையில் வைக்க வேண்டும். அப்போது கதையின் அர்த்தம் ஆழப்படவும் செய்யும்.

உங்கள் கதையில் வரப் போகும், எதிர்பாராத விதமாக திசை திருப்பும் 3 நிகழ்வுகளை குறிப்பிடவும்

1. ______________________________
2. ______________________________
3. ______________________________


VI. **முடிவு**

ஒரு கதைக்கு நீங்கள் தரப்போகிற முடிவு மிக அவசியமானது. அது சோகமாக முடியலாம், வேடிக்கையாக முடியலாம், வெற்றியாக முடியலாம், அர்ப்பணிப்பும், தியாகமுமாகக் கூட முடியலாம். மேலும் ஒரு புதிய புதிரை வைப்பதாக முடியலாம். எல்லோருக்கும் மகிழ்ச்சியை தரக்கூடிய முடிவாகவும் இருக்கலாம். முடிவு கதையின் அர்த்தத்தை முழுக்க மாற்றி அமைக்கும்.

நீங்கள் எழுதப் போகும் கதையின் முடிவு எப்படி இருக்கப் போகிறது? ஒரு வாக்கியத்தில்

மேற்கண்ட பயிற்சியை முடித்த பின்பு தான் நீங்கள் உங்களது கதை எழுதும் நோட்டை எடுத்து, கதையை எழுதத் தொடங்க வேண்டும்.

# 3. பேசும் படம் எடுப்போம்!




உலகின் மிகப் பெரிய கேமரா 1900ம் ஆண்டு

## பகுதி-1

## படங்கள் கதை சொல்லும்

குழந்தைகளே, உங்கள எப்பவுமே மகிழ வைக்கனும்னு எனக்கு ஆசை. உங்களுக்கு ஒரு கதை சொல்லி மகிழ வைக்கலாம்னா, அட கதை தான... எங்களுக்குத் தெரியுமேன்னு உங்கள்ள சில பேர் உடனே சொல்லிடுறீங்க. அதுனால நான் உங்கள பேனாவை எடு, பேப்பர எடு, எழுதுன்னு சொல்லப் போறதில்ல!

இன்னிக்கு உங்களுக்கு சுவாரசியமான ஒரு விசயத்தை சொல்லலாம்னு இருக்கேன். என்ன சொல்லலாமா, சரி கவனிங்க. முதன் முதல்ல மனித குலம் கதை சொல்ல ஆரம்பிச்சது எப்படின்னு உங்களுக்கு தெரியுமா? ஓவியங்களை வச்சுதான் கதை சொல்லியிருக்காங்க. இங்க பாருங்களேன். கீழ இருக்கிற படத்துல நீங்க பாக்கிறது பல்கேரியா நாட்டுல இருக்கிற ஒரு குகையில 10,000 வருஷத்துக்கு முன்னால வரைஞ்ச ஓவியம். அந்த படத்த நல்லா பாருங்களேன். இப்போ கூட ஏதோ விசயத்தை இந்த படம் நமக்கு சொல்லுது. உங்களுக்கு ஏதாவது தோணுதா?



சரி இந்த குகை ஓவியம் என்ன மாதிரி ஒரு கதைய சொல்லுதுன்னு நாலஞ்சு வரியில எழுதுறீங்களா?

**இப்போ நாம ஃபோட்டோ எடுக்கிற கேமராவுக்கு வருவோம்!**

1825ல கேமரா கண்டுபிடிச்சாங்க. அதுக்கப்புறம் அந்த கேமராவ வச்சு எப்படியெல்லாம் கதை சொல்லியிருக்காங்க தெரியுமா? இப்போ, இங்கே நீங்க மூணு ஃபோட்டோவ பார்க்கப் போறீங்க.


படம்-1



1890

மேலே உள்ள படத்த நல்லா நல்லா பார்த்திட்டு அந்த படத்தில இருந்து உங்களுக்கு என்னென்ன தோணுதுன்னு எழுதுங்களேன்!

படம்-2



மேலே உள்ள இந்த படத்த நல்லா பார்த்திட்டு உங்களுக்கு என்னென்ன தோணுதுன்னு கட்டத்துக்குள்ள எழுதுங்களேன்!

படம்-3



மேலே உள்ள படத்த நல்லா பார்த்திட்டு உங்களுக்கு என்னென்ன தோணுதுன்னு எழுதுங்களேன்

நீங்களும் இப்படி ஃபோட்டோ எடுத்து கதை சொல்லலாமே!

## பகுதி-2

**கைக்கு அடக்கமான ஒரு ஃபோட்டோ எடுக்கும் கருவி**

புகைப்பட கருவி கண்டுபுடிச்சு கிட்டத்தட்ட 200 வருஷமாச்சு. நல்லா யோசிச்சு பாருங்களேன். இந்த டிஜிட்டல் டெக்னாலஜி வரலைன்னா என்ன ஆயிருக்கும்? செல்போன்ல ஃபோட்டா எடுக்க முடியுமா? ஏன்,1975ம் வருஷம் கண்டுபுடிச்ச முதல் டிஜிட்டல் கேமரா கிட்டத்தட்ட 4 கிலோ எடை. உங்களால தூக்கக்கூட முடியாது. அப்புறம் அத வச்சு படம் எப்படி எடுக்குறது? அதுமட்டுமில்ல...

அன்னைக்கெல்லாம்,கேமராங்கிறது பெரிய பெரிய பணக்காரங்க கையிலதான் இருந்திச்சு.

செல்போன வச்சு போட்டா எடுக்க முதல்ல அந்த செல்போன சரியா பயன்படுத்த தெரிஞ்சுக்கனும். இப்போ அதபத்தி கொஞ்சம் பேசலாம். முதல்ல நீங்கெல்லாம் ரொம்ப கொடுத்து வச்சவங்க. செலவே இல்லாம எத்தன போட்டா எடுக்கலாம்! ஒரு கிளிக்கில ஒரு கதைன்னா, 100 கதை எழுதலாமே! ஏன் செல்போன வச்சி கதை எழுதனும்? ஒரு வகையில அது ஒரு பொழுதுபோக்கு. அதுக்கு மேல?...

**நான் சொல்லட்டுமா?..**

1. இந்த உலகத்த நீங்க கண்ணால பார்க்கும் போது, பார்க்குற ஒன்னொன்னும் அது உங்க மனசில சினிமா மாதிரி ஓடுது இல்லையா? அதுல சில காட்சிகள படம் புடிச்சு பாருங்களேன். முதல்ல, உங்களுக்கே அது ஆச்சரியமா இருக்கும்.

2. அப்படிப்பட்ட ஒரு காட்சியை நீங்க உங்க அப்பா, அம்மா, நண்பர்கள்கிட்ட காட்டுங்க. அந்த பகிர்வு மகிழ்ச்சியா இருக்கிறது மட்டுமில்லாம, அது நீங்க சொல்லாத சில விஷயத்தையும் சேர்த்து சொல்லும். அதத்தான் நாம புகைப்படம் கதை சொல்லுதுன்னு சொல்றோம். நாம ரசிக்கிற அல்லது நமக்கு கதை சொல்ற படங்கள யாரு எடுத்தாங்கன்னுகூட நமக்கு தெரியறது இல்ல. 100 இல்ல 200 வருஷங்கள் கழிச்சு கூட அது தனியா நின்னு கதை சொல்லும். நீங்க எடுக்கப்போற போட்டோ கூட அப்படி அமையலாமே!

3. மூணாவது, இந்த செல்போன வச்சிக்கிட்டு ஒரு சரித்திரமே எழுதலாம். நல்லா யோசிச்சு பாருங்களேன். பத்து வருஷம் நீங்க எடுக்கிற போட்டாக்களை சேத்துவைங்க. உங்க சுய சரிதை மட்டுமில்ல, உங்க

குடும்ப வரலாறு, உங்க ஊர் வரலாறு ஏன் உங்க நாட்டோட சரித்திரமே இதுல இருந்து உருவாகுமே!

4. நீங்க மட்டும் எத, எப்படி, எதுக்காக எடுக்கனும்னு தெரிஞ்சிக்கிட்டீங்கன்னா, ஒரு செல்போன வச்சிக்கிட்டு கதை மட்டுமில்ல, குழந்தைகள் பார்வையிலான ஒரு சரித்திரத்தையே எழுதலாம்!

முதல்ல உங்க அப்பாகிட்ட, இல்ல அம்மாகிட்ட இந்த விஷயத்த சொல்லி ஆண்ட்ராய்ட் போன கொஞ்ச நேரம் பொறுப்பா கடன் வாங்குங்க.

- அப்புறம் கேமராவ ஓப்பன் பண்ணி, கீழ காமிச்சிருக்கிற மாதிரி சரியா பிடிக்கப் பழகுங்க.



- உங்க புகைப்படம் தெளிவா வருவதற்கு உங்க ஸ்க்ரீன்ல தெரிற போக்கஸ் பாக்சுக்குள்ள நீங்க எடுக்க நினைக்கும் உருவத்தையோ அல்லது நீங்க எடுக்க நினைக்கும் எந்த பொருளையோ சரியா போக்கஸ்குள்ள கொண்டுவாங்க. (pictorial representation)



- எக்ஸ்போஸரை (வெளிச்சத்தை) சரி பார்க்கணும். போக்கஸ் பட்டனை ஒட்டி ஒரு ஸ்கேல் இருக்கும். அதை கீழே இறக்கினால் வெளிச்சம் குறையும், மேலே ஏற்றினால் வெளிச்சம் அதிகமாகும். அதனால்

போட்டோ எடுக்க நமக்கு தேவையான வெளிச்சத்த முதல்ல கரெக்டா வச்சுக்கிற தெரிஞ்சிக்கிடணும்

கீழே எட்டு தலைப்புகள் உங்களுக்கு தந்திருக்கேன். நீங்க ஒவ்வொரு தலைப்பின் அடிப்படையிலும் நீங்க பத்து முதல் பதினைந்து போட்டா எடுக்கப் போறீங்க.

1. என் குடும்பம்
2. சுய உருவகம்
3. நான் வசிக்கும் இடம்
4. என்னுடைய ஊர் மனிதர்கள்
5. என் ஊரில் வசிக்கும் விலங்குகள், பறவைகள் மற்றும் பூச்சிகள்
6. என் ஊரில் இருக்கும் மரம், செடி, கொடிகள்
7. வெளிச்சத்துடன் ஒரு விளையாட்டு
8. கொரோனா வருகை

## பகுதி-3
## என் குடும்பம்



நம்ம குடும்பத்தை பற்றிய கதைய நம்ம எல்லாருக்குமே எழுதனும்னு ஆசையிருக்கு. அதை இப்போ நாம நம்ம செல்போன வச்சு மிக அருமையா எழுதியிரலாம்.

ஒரு நல்ல ஃபோட்டோகிராஃபர பொறுத்தவரையில குடும்பம்ங்கிறது அப்பா+ அம்மா+ குழந்தைகள்+ தாத்தா+ பாட்டிங்கிற ஒரு கூட்டம் இல்ல. இதை புரிஞ்சிக்காததுனாலதான் நம்ம வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் குடும்பத்தாரை காமிரா முன்னால நிறுத்தி ஒரு கட்டத்துக்குள்ள அடச்சு, கட்டாயமா போஸ் குடுக்கச் சொல்லி, ஃபோட்டோ எடுக்கிற வழக்கத்த உண்டாக்கியிருக்கோம். இதுனாலதான் குடும்ப ஃபோட்டோக்கள் ரொம்ப செயற்கையா இருப்பதற்கு காரணம். நம்ம பக்கத்து வீட்டு மாரி அக்கா வீட்டு குடும்ப ஃபோட்டாவும் நம்ம வீட்டு குடும்ப ஃபோட்டாவும் ஒரே மாதிரி இருக்கு.

நான் இங்கே குடும்ப ஃபோட்டான்னு சொல்ல வருவது வேற. குடும்பம்ங்கிறது மிக அடிப்படையான மற்றும் ஒரு தனித்துவமான உறவு. உங்க குடும்பத்துல நீங்க அற்புதமா, அழகா, ஆச்சரியமா, அன்பா பாக்கிற ஒவ்வொரு விசயத்தையும் நீங்க உங்க உறவினர்கள்கிட்ட, நண்பர்கள்கிட்ட பகிர்ந்து கொள்வதுண்டு... ஆமா தானே!

எங்க அம்மா **இப்படி அன்பா** பேசுவாங்க, எங்க அப்பா **கடினமா** உழைக்கிறவரு, கண்டிப்பு காமிச்சாருன்னா **இப்படி முகம்** மாறும், தம்பி பாப்பா எப்பவும் **குறும்புதான்**. என்னமோ தெரியல, தாத்தா இன்னைக்கு ஏதோ **சோகமா** இருக்காரு, பாட்டி சிரிக்கும்போது **அன்பு கொட்டும்**, பாப்பா பிறந்த நாள் கொண்டாடும்போது எங்க குடும்பத்தில சந்தோஷம் **பொங்கி வழிஞ்சிச்சு** அப்படின்னு, பல்வேறு நினைவுகளை மிக எளிதா நீங்க மத்தவங்ககிட்ட வார்த்தைகளா சொல்லிருவீங்க. இப்படி நீங்க சொல்றதைத்தான் நான் ஒரு குடும்பம்னா **உறவுகளால் அமைக்கப் பட்டிருக்குன்னு** சொல்றேன். இது மனசுக்கு தெரியுது, ஆனா கண்ணுக்கு தெரியலன்னு சொல்லிருவோம். அப்படி இல்ல. அது கண்ணுக்கும் தெரியும். நல்ல போட்டோகிராஃபருக்கு இது முதல்ல நல்லாவே கண்ணுக்கு தெரியணும்.

இப்போ நான் உங்களுக்கு ஒரு பயிற்சி கொடுக்கப் போறேன். ஒரு நிமிஷம் கண்ண மூடிக்கோங்க. நான் அடிக்கோடிட்டிருக்கிற ஒவ்வொரு குடும்ப உறவுகள் வெளிப்படுத்தும் உணர்வுகளையும் நீங்க ஒன்னொண்ணா உங்க மனக் கண் முன்னால கொண்டு வந்து நிறுத்துங்க. அப்போ கீழ்க்கண்ட விஷயங்களை உங்களால திட்ட வட்டமா பாக்க முடியும்.

1. **நிகழ்வு:** அந்த உணர்வை வெளிக் கொண்டுவந்த சம்பவம் (அண்ணன் மற்றும் அப்பா ரொம்ப கோபமா கண்டித்த நிகழ்வும் அவரது கடுகடு முகமும்)

2. **முகம்:** (முகக் குறிகள்: வாய் கோணியது, புருவம் ஏறியது, கண் கூர்மையானது, முகம் சுருங்கியது etc.)
3. **உடல்:** (உடல் மொழி: நின்ற விதம், திருப்பிய தலை, ஓங்கிய அல்லது வீசிய கை, குறுகிய தோள்கள் etc.)
4. **உடை:** (அந்த நிகழ்வின் போது அணிந்திருந்த உடை, விதம் etc.)

5. **இடம்:** (தாத்தா உட்காரும் திண்ணை, அப்பா தூங்கும் இடம், விளையாடும் முற்றம், கால்நடைகள் கட்டி வைக்கும் தொழுவம் etc.)

6. **வீட்டுப் பொருட்கள்:** (அம்மாவின் தட்டு முட்டு சாமான்கள், வீட்டு பீரோ, சாமி படம், அம்மாவின் மூக்குத்தி, அப்பாவிற்கு பிரியமான துண்டு, அன்றாடம் வீட்டில் உபயோகிக்கும் ஒவ்வொரு பொருட்களும் ஒவ்வொருவரின் உணர்வுகளோடு தொடர்பு கொண்டிருக்கும்)

7. **காலம்:** (அதிகாலை, காலை, மதியம், மாலை, இரவு: குடும்ப நிகழ்வுகள் தினந்தோறும் இந்த காலச் சுழற்சியில் உலா வருவது மட்டுமின்றி வெவ்வேறு குடும்ப நிகழ்வுகளையும், நடவடிக்கைகளையும், அவை சார்ந்த உணர்வுகளையும் வெளிப்படுத்திக் கொண்டே இருக்கும். அம்மா காலையில் சுறுசுறுப்பு, அப்பா மாலையில் களைப்பு, குழந்தைகள் எப்பொழுதும் விளையாட்டு).

## இப்போது செயலுக்கு வருவோம்

### I. ஆராய்ச்சி

முதல்ல நீங்க செய்ய வேண்டியது என்னென்னா, முதல் இரண்டு, மூன்று நாட்கள் உங்கள் வீட்ல காலை முதல் இரவு உறங்கச் செல்லும் வரை நடக்குற ஒவ்வொன்றையும் நன்றாக கவனியுங்கள். யார், யார் என்னென்ன பணிகளில் ஈடுபடுகிறார்கள், எப்படி, எந்தெந்த தருணங்களில், தங்கள் குணாதிசயங்களை வெளிபடுத்திக் கொள்ளுகிறார்கள் என்று பாருங்கள். அதில் உள்ள பாசம், பரிவு, அன்பு, சோகம், இயலாமை, கோபம் எல்லாவற்றையும் கவனியுங்கள். அதில் நீங்கள் மிகவும் சுவராசியமாக பார்த்தவை, மிகவும் அர்த்தமுள்ளவை, மகிழ வைப்பவை என்ற தருணங்கள் யாவை என்று முதலில் உங்கள் மனதில் பதிவு செய்து கொள்ளுங்கள்.

## II. சிறப்புத் தருணங்களை பதிவு செய்தல்

மூன்றாவது நாள், உங்கள் குடும்ப இயக்க நிலை உங்களுக்கு நன்றாக புரிந்த பின், நீங்கள் எந்தெந்த தருணங்களை பதிவு செய்ய விரும்புகிறீர்கள் என்று முடிவு செய்து வைத்திருக்கிறீர்களோ, அந்த தருணத்திற்காக நீங்கள் காத்திருக்க வேண்டும். அத்தருணம் வரும் போது அதை அப்படியே உங்கள் செல்போனில் ஃபோட்டோவாக பதிவு செய்யுங்கள். ஒவ்வொரு தருணத்தையும் எத்தனை முறையும் பதிவு செய்யலாம். யாரையும் எதற்காகவும் கட்டாயப்படுத்தி போஸ் கொடுக்கச் சொல்லாதீர்கள். குடும்பத்தாராக இருந்தாலும், நீங்கள் அவர்களை படம் எடுப்பது, அவர்களுக்கு கண்டிப்பாக தெரிந்திருக்க வேண்டும். யாராக இருந்தாலும் அவர்களின் அனுமதியை பெற்று இயல்பாக இருக்கும் நிலையில் படம் எடுக்க வேண்டும்.

## III. பகிர்தல்

யாரை படம் பிடித்திருக்கிறீர்களோ அவர்களிடம் முதலில் அந்த படங்களை காண்பியுங்கள். அவர்கள் ஆட்சேபனை செய்தால் ஏற்றுக் கொள்ளுங்கள். நீங்கள் பார்க்காத சில விஷயங்களை மற்றவர்கள் எவ்வாறு காண்கிறார்கள் என்று பாருங்கள். அவர்கள் ஆலோசனைகளை மற்றும் விமர்சனங்களை ஏற்றுக் கொள்ளுங்கள்.

## IV. திருத்தங்கள் வழியாக திறமையை வளர்த்துக் கொள்ளல்

நீங்கள் செய்கின்ற ஒவ்வொரு செயலிலிருந்தும் கிடைக்கிற படிப்பினைகளை கொண்டு உங்கள் செயல்பாட்டில் திருத்தங்கள் செய்து மீண்டும், மீண்டும் திருத்தங்களை ஏற்று செய்வதன் மூலம் உங்கள் திறமைகள் வளரும். 10ல் இருந்து 15 குடும்ப போட்டோக்களை எடுங்கள். நல்ல புகைப்படங்களை தேர்வு செய்து பாதுகாத்து உங்கள் ஆல்பத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

## போட்டோ எடுக்கலாமா!

1. முதல்ல போட்டோனு சொன்ன உடனே உங்களுக்கு என்ன ஞாபகம் வருது, எங்கெல்லாம் நீங்க போட்டோக்களை பாத்து இருக்கீங்க அதுல என்னென்ன பாத்துருக்கீங்க.
(நியூஸ் பேப்பர், நோட் புக், சினிமா போஸ்டர், ரயில் வண்டி, அம்மா அப்பா கல்யாண ஆல்பம், குட்டி பாப்பா காலண்டர், கிரிக்கெட்,

கால்பந்து, சூரியன், சந்திரன் பறவைகள், விலங்குகள் மரம், செடி, கடை, விளம்பரம் இன்னும் பிற)

2. சூப்பர், நீங்க யோசிச்சு பார்த்தது எல்லாமே சரிதான் ஆனா அதுமட்டும் இல்ல. போட்டோவை நாம அன்றாட வாழ்க்கையில எல்லா எடத்துலயும் பாக்கலாம் அப்படி நாம பாக்குற போட்டோக்களை நாம எப்படி எடுக்குறதுன்னு தான் பார்க்கப் போறோம்
3. நாம பார்க்குற, எடுக்குற போட்டோ எல்லாமே நம்ம கிட்ட ஒரு கதை சொல்லனும். கதையா? என்ன கதைன்னு யோசிக்கிறீங்களா?
4. இப்போ நம்மகிட்ட யாராவது கதை சொன்னா நம்ம என்ன செய்வோம்! கதைக்கு ஏத்த மாறி கற்பனையா ஒரு எடத்த யோசிப்போம். அதே மாதிரி தான் நாம எடுக்குற போட்டாக்குள்ளேயும் ஒரு கதை இருக்கனும்.
5. அப்ப, கதை இல்லைன்னா அது போட்டோ இல்லையான்னு உங்களுக்கு கேள்வி கேக்க தோணும். அனால் அப்படி இல்லை, போட்டோகிராபில பல வகைகள் இருக்கு.
6. நாம அதுல எடுத்து பழக போற முதல் போட்டோகிராபி நம்ம இருக்குற இடத்தையும் நம்மல சுத்தி இருக்குற மனிதர்களையும் பற்றிதான். என்ன சந்தோசமா?
7. அதுக்கு பேரு தான் **PORTRAIT PHOTOGRAPHY** மற்றும் **STREET PHOTOGRAPHY** சரியா.

சரி இப்ப நீங்க போட்டோ எடுக்கத் தயாரா இருக்கீங்களா?

போட்டோ எடுக்குறதுக்கு முன்னாடி நாம மனசுல இருக்க வேண்டிய ஒரு சில குறிப்புகள்.

1. நாம எடுக்குற போட்டோ நமக்கு ரொம்ப பிடிச்ச மாதிரி இருக்கணும்.
2. போட்டோ எடுக்குறப்ப நாம யாரையும் தொந்தரவு செய்ய கூடாது .

- ஒவ்வொரு தலைப்பிலும்10-15 புகைப்படங்களை எடுக்கலாம்.

**1. என் குடும்பம்:**

நம்ம குடும்பத்துல இருக்கும் நம்மளோட உறவுகள பற்றி நம்மளுக்கே முழுசா தெரியுமா? தெரிஞ்ச மாதிரி உங்களுக்கு தோணினாலும் அது உண்மை

இல்லை. தெரியாத இன்னும் நல்ல விஷயங்கள் எல்லாம் இருக்கு. அதப்பற்றி தெரிஞ்சுக்கவும் அவங்கள பற்றி பேசுவதற்கும் இது ஒரு நல்ல வாய்ப்பு. உங்க குடும்பத்தில இருக்கிற யாராச்சும் ஒருத்தங்கள நீங்க தேர்ந்து எடுத்துக்கோங்க. அம்மா/அப்பா/அண்ணன்/தங்கை/தம்பி/அக்கா இப்படி யாரா வேணும்னாலும் இருக்கலாம். அவங்க காலையில் இருந்து இரவு வரை என்னவெல்லாம் பண்றாங்க என்பதை ஒரு10 இல் இருந்து 15 புகைப்படங்கள் எடுங்க . ஆனா ஒரு முக்கியமான குறிப்பு என்னன்னா யாரையும் நீங்க போஸ் குடுக்க சொல்லக்கூடாது . அவங்கள ஒரு இயல்பு நிலைல போட்டோ எடுக்கனும். என்ன? செய்யலாமா?

உங்களுக்காகவே இந்த தலைப்புல எப்படி எடுக்கலாம்னு ஒரு சில உதாரணங்களும் மேலே கொடுத்துருக்கோம் பாருங்க. பார்த்துட்டீங்களா மேலே இருக்குறது மாதிரி உங்க வீட்ல இருக்குறவங்கள அப்படியே உக்கார வச்சு போட்டோ எடுக்க கூடாது . இது ஒரு உதாரணம் தான். உங்களுக்கு தோன்றதை இயல்பா எடுங்க சரியா.

2. **சுய உருவகம்**

"சுய உருவகம்" அப்டின்னா என்ன?
நம்ம வீட்டிலேயோ, இல்ல வெளியிலேயோ எங்கேயாச்சும் போகையில நம்ம கவனிச்சிருப்போம். நம்மளோட உருவம் நமக்கே திருப்பி தெரியும். பார்த்திருக்கீங்களா. உதாரணத்திற்கு சொல்லனும்னா இப்போ நீங்க ரோட்ல தேங்கி இருக்குற மழை தண்ணிய நீங்க குனிஞ்சு பார்த்தால் உங்க முகம், உங்க உருவம் ஒரு வித்தியாசமான கலர்ல, வேற சைசுல தெரியும், பார்த்திருக்கீங்கதானே? அதே மாதிரி உங்க வீட்டு கண்ணாடி டம்ளர்ல பார்க்கும் போது நம்ம உருவம், முகம், நிழல் எல்லாம் ஒரு வித்தியாசமா தெரியும். அது தான் சுய உருவகம் . இந்த சுய உருவகத்தை வச்சு உங்கள நீங்களே வித்தியாசமா காட்சிப்படுத்தலாம். அதுக்கான உதாரணங்களும் கீழ இருக்கு. நல்லா பாருங்க உங்களுக்கு அது எப்படின்னு நல்லா புரியும் . இந்த பின்னனியில் தெரிகிற உங்கள் முகத்தை அல்லது உருவத்தை நீங்கள் 10 முதல் 15 படங்கள் வரை உங்கள் செல்போனில் படம் எடுங்கள்.

3. **நான் வசிக்கும் இடம்**

இந்த தலைப்புலேயே உங்களுக்கு புரிஞ்சிருக்கும். நாம, நம்ம வாழுற இடத்தை அன்றாடம் பார்த்துட்டு இருக்கோம். ஆனா, கவனிச்சிருக்கமாட்டோம். பார்க்குறதுக்கும், கவனிக்கிறதுக்கும் வித்யாசம் இருக்கு இல்லையா? சரி, விஷயத்துக்கு வருவோம். நீங்க உங்க வீட்டையும் அதன் சுற்றுப்புறத்தையும் கவனிச்சு உங்களுக்கு தோன்றுவதை படம் எடுக்கலாம். உதாரணத்திற்கு எங்க வீட்ல எனக்கு புடிச்ச இடம் இது, இங்கதான் உட்கார்ந்து படிப்பேன், விளையாடுவேன். அதே மாதிரி நான் எங்க வீட்டுக்கு பின்னாடி இருக்குற இந்த இடத்துலதான் விளையாடுவேன், எங்க வீட்டு முழு தோற்றம், எங்க வீட்டு வாசல் தோற்றம் இப்படித்தான் இருக்கும், அப்படின்னு உங்களுக்கு என்னென்ன உங்க இடத்துல பிடிச்சிருக்கோ அதையெல்லாம் உங்க செல்போன் கேமராவுல 10 முதல் 15 படம் எடுங்க. கீழே கொடுக்கப்பட்டிருக்கும் படத்தை பாருங்க, இப்படி இயல்பாக காட்சியளிக்கும் உங்க இருப்பிடத்தை படம் எடுக்கலாம்.


**4. என்னுடைய ஊர் மனிதர்கள்**

உங்கள் ஊரில் உள்ள நீங்கள் அன்றாடம் பார்க்கும் மனிதர்களை ஒரு இயல்பான புகைப்படம் எடுக்கலாம். நீங்கள் தினசரி பார்க்கும் மனிதர்கள், உதாரணத்திற்கு

உங்கள் தெருவில் தின் பண்டங்கள் விற்கும் பாட்டி, திண்ணைப் படியில் உட்க்கார்ந்திருக்கும் தாத்தா, ஓடியாடி விளையாடும் உங்க நண்பர்கள், வீட்டுக்கு வெளியில உட்கார்ந்து பாத்திரம் கழுவும் பெரியவங்க, சைக்கிள் ஓட்டும் உங்க நண்பர்கள் இப்படி யாரை வேண்டுமானாலும் போட்டோ எடுக்கலாம். அனால் மிக முக்கியமான விஷயம் என்னென்னா, நீங்க அவர்களை போட்டோ எடுப்பது அவங்களுக்கு தெரியனும் நீங்க முன்கூட்டியே அவங்ககிட்ட அனுமதி வாங்கணும். அவங்களுக்கு புகைப்படம் எடுப்பதில் விருப்பம் இல்லை என்றால் கட்டாயப்படுத்தக் கூடாது. அவர்களுக்கு தெரியாமலும் போட்டோ எடுக்க கூடாது.





## 5. என் ஊரில் வசிக்கும் விலங்குகள், பறவைகள் மற்றும் பூச்சிகள்

நம்ம ஊருல எத்தனை வகையான பறவைகளும், விலங்குகளும் இருக்குன்னு உங்களுக்கு தெரியுமா? அப்படி நமக்கு முழுசும் தெரியலன்னா இப்போ அத பற்றி தெரிஞ்சுக்கறதுக்கு இது ஒரு வாய்ப்பு. உங்க ஊருல நீங்க அன்றாடம் பார்க்குற





பறவைகளையும், விலங்குகளையும் புகைப்படம் எடுக்கலாம். இதுல ஒரு சுவாரசியமான விஷயம் என்னன்னா, நீங்க பார்க்குற பறவை அது ஒரு காக்கா அல்லது நீங்க பார்க்குற விலங்கு ஒரு ஆட்டுக்குட்டியா கூட இருக்கலாம். ஆனா அவைகளை அப்படியே படம் எடுக்காம, ஒரு வித்தியாசமான நடவடிக்கையை செய்யும் போது அத நல்லா கவனிச்சு அந்த தருணத்திற்காக காத்திருந்து போட்டோ எடுக்கனும். இங்கே பாருங்க! ஒரு சில நல்ல உதாரணங்கள் கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது.






6. **என் ஊரில் இருக்கும் மரம், செடி, கொடி, பூக்கள்**

நாம பள்ளிக்கூடத்துக்கு போகும் போதும், வரும் போதும், இல்ல வெளிய எங்கேயாச்சும் போகும் போதும், வரும் போதும், நிறைய மரங்கள், செடிகள், பூக்கள் இதெல்லாம் பாத்திருப்போம், அதுல சில மரங்கள் /செடிகள் /பூக்களை பார்க்கும் போது நமக்கே ஒரு வியப்பு ஏற்பட்டிருக்கும். உதாரணத்திற்கு சொல்லனும்னா வெயில் அடிக்கும் நேரத்துல மரத்தோட நிழல் பூமியில விழும் காட்சி அல்லது ஒரு மரம் நிறைய பூக்கள் பூத்துக் குலுங்கும் ஒரு காட்சி , வெயில் சாயும் போது மரத்து மேல இருக்குற கொஞ்ச சூரிய வெளிச்சம்னு நிறைய காட்சிகள் பார்த்திருப்போம் அப்படி உங்களுக்கு வித்தியாசமான உணர்வை காட்சியை கொடுக்கும் சூழலை 10 முதல் 15 படங்கள் வரை எடுங்கள். நீங்க பார்த்த அந்த வியப்பை படத்துல கொண்டு வரனு ம் .

### 7. வெளிச்சத்துடன் ஒரு விளையாட்டு

புகைப்படத்துல ஒரு முக்கியமான அம்சம் ஒளி. இந்த ஒளியை நாம எப்படியெல்லாம் உபயோகப்படுத்தலாம்? அந்த ஒளிய வச்சு நாம எப்படி ஒரு சிறப்பான போட்டோவை எடுக்கலாம்னு இங்கே பார்ப்போம். இதோ உங்களுக்காகவே ஒரு சில சுவாரசியமான காட்சிகள்.

- உங்க வீட்டு ஜன்னல் வழியா வர்ற வெளிச்சத்துல உங்க குடும்ப நபரையோ அல்லது உங்கள் தோழி/தோழன், அல்லது உங்களுக்கு பிடித்த பொருட்களையோ வைத்து புகைப்படம் எடுக்கலாம்.
- அல்லது ஒளியோடு அல்லது ஒளியின் பின்னணியில் தெரிகின்ற ஒரு பொருளையோ, மனிதர்களையோ, மரத்தையோ, இயற்கை சூழலையோ அல்லது உங்களுக்கு பிடித்தவற்றையோ மிக அழகாக படம் எடுக்கலாம்.

- சில்ஹௌட் (Silhouette), அப்டின்னா என்ன? உங்களுக்கு தெரியுமே , நீங்க புகைப்படம் எடுக்கும் பொருள் (subject)க்கு அல்லது உருவத்துக்கு பின்னால ஒரு வெளிச்சம் இருக்கும். இந்த கோணத்தில நீங்க புகைப்படம் எடுக்கும் போது அந்த பொருளின் உருவம் மட்டும் தான் தெரியும். இந்த வகையான போட்டோவை நீங்க எந்த நேரத்திலும் எடுக்க முடியும், இரவு, பகல், மதியம், மாலை, அப்படின்னு எந்த நேரமாக இருந்தாலும் இந்த போட்டோக்களை எடுக்கலாம். ஆனால், நீங்கள் முக்கியமாக மனதில் கொள்ள வேண்டியது என்னன்னா, நீங்க போட்டோ எடுக்கும் போது அந்த வெளிச்சம் நீங்கள் போட்டோ எடுக்க போகும் அந்த பொருளுக்கு அல்லது உருவத்திற்கு பின்னால் இருக்க வேண்டும். அதை முதலில் தெளிவாக பார்த்து கொள்ளுங்கள். கீழே கொடுக்கப் பட்டிருக்கும் போட்டோவை நன்றாக உற்று கவனியுங்கள் வெளிச்சம் உருவத்திற்கு பின்னால் இருப்பதை நீங்கள் பார்க்க முடியும் .

## 8. கொரோனாவின் பாதிப்பும் உங்கள் அனுபவமும்

இந்த தலைப்பு கொஞ்சம் வித்தியாசமானதுதான். கொரோனா உங்களை எப்படி எல்லாம் பாதிச்சிருக்குன்னு நாங்க சொல்றத விட நீங்க சொல்றது தான் சரியா இருக்கும். அப்படித்தானே? சரி இந்த பாதிப்பை குறித்து எப்படி புகைப்படம் எடுப்பது? கொஞ்சம் நீங்களே யோசிச்சு பாருங்களேன். உங்களுக்கே விடை கிடைக்கும். உதாரணத்திற்கு இப்படி வச்சுக்குவோம், நீங்க பாருங்க கொஞ்ச நாளா எல்லாரும் அவங்க முகத்தில் முகமூடி போட்டு இருக்காங்க, நீங்க ஓடி ஆடி விளையாடிகிட்டு இருந்த இடம், உங்க பள்ளிக்கூடம் எல்லாமே இப்போ வெறிச்சோடி கிடக்கு. சரிதானே, ஏன் நம்ம குழந்தைகள் வள மையம் கூட அப்டித்தான் இருக்கு. இப்படி நீங்கள் கொரானவால் இழந்த அல்லது உங்களுக்கு எது மாதிரியான பாதிப்பெல்லாம் இந்த கொரோனா காலத்துல ஏற்ப்பட்டிருக்கு என்பதை நீங்க வசிக்கிற பகுதியிலே போட்டோவா எடுங்கள். இன்னும் உதாரணத்திற்கு சொல்லனும்னா வீட்ட விட்டு வெளிய போக முடியாம வீட்டுக்குள்ளேயே எப்படி அடைஞ்சு கிடக்கீங்கன்னு கூட போட்டோ எடுக்கலாம்.



## 4. கவிதை எழுதலாம் வாங்க!

இன்றைக்கு நாம் ஒரு கவிதை எழுதலாம்!

**சரி, கவிதைன்னா என்ன?**

நம்ம பேசுறது மாதிரி இல்ல. வழக்கமா வகுப்பறையில எழுதுறது மாதிரியும் கிடையாது. கவிதை பொதுவா அம்சங்களை கொண்டிருக்கும் :

1. ஒரு கவிதை, நமக்கு ரொம்ப ரொம்ப **பிடிச்ச ஒரு விஷயத்தை** மிக உணர்வுப் பூர்வமா சொல்லும்.
2. நாம கவிதையில உபயோகிக்கிற வார்த்தைகள், நம்ம காதுல ஒரு **இசையா மாறி** ஒலிக்கும்.
3. அதே மாதிரி, அந்த வார்த்தைகள் ஒன்னொண்ணும் ஃபோட்டோ மாதிரி வாசிக்கிறவுங்க கண்ணு முன்னால ஒரு பொருளா **காட்சிப்படுத்தும்.**
4. கவிதைல **மனுசங்கள மட்டுமில்ல,** மரம், காடு, பறவைகள், கடல், வானம், பட்டாம்பூச்சின்னு எல்லாமே பேசும், சிரிக்கும், ஏன் அழக்கூட செய்யும்.

| | |
|---|---|
| பிடித்த பொருள் | வார்த்தைகள் இசைத்தல் |
| வார்த்தைகள் காட்சிப் படல் | அனைத்து உயிர்களுக்கும், பொருட்களுக்கும் உணர்வுகளை அளித்தல் |

வார்த்தைகளைக் கொண்டு இத செய்ய பழகிட்டோம்னா ஒரு கவிதை நம்ம கைக்கு வந்துடும்!

I. **முதல் படி** (உரைநடை வடிவில் சிந்தனைகளை முதலில் பதிவு செய்தல்)

இப்போ, கவிதை எழுதுறதுக்கு ஒரு பொருள எப்படி தேர்ந்தெடுக்கலாம்னு யோசிக்கலாமா?

ரொம்ப நாளா வெயில் வாட்டி எடுக்கிறது எல்லோருக்கும் தெரியும். தண்ணீர் பஞ்சம், குடிக்கக் கூட தண்ணீர் இல்லை. ஒரு நாள் திடீர்னு மழை கொட்டோ, கொட்டுன்னு கொட்டுது. காய்ஞ்சு போன உங்க மனசு குளுந்து போகுது. செடி, கொடி கூட மகிழ்ச்சில அங்கும், இங்கும் ஆடுது. மழைகிட்ட அவையெல்லாம் மகிழ்ச்சியா பேசுற மாதிரி இருக்கு. மண் வாசனை காத்தோடு கலந்து வீசுது. மழை விழ, விழ உங்க மனசுக்குள்ள ஒரு விதமான துள்ளல். **அந்த மழைய நமக்கு இப்ப ரொம்ப பிடிச்சு போகுது.** அந்த மழையைப் பத்தி எதாவது சொல்லனும்னு மனசோட ஆழத்தில இருந்து ஒரு குரல் கேட்க தொடங்குது. அங்கேதான் கவிதை ஆரம்பிக்கிது.

II. **இரண்டாம் படி**

மழையைப் பற்றி யோசிக்கும் போது உடனே கவிதை வராது. சில வார்த்தைகள் மட்டும் அழுத்தமா நம்ம மனசுல திரும்பத் திரும்ப மிதந்து மேல வரும். அதை கீழ்கண்டவாறு ஒரு கட்டத்திற்குள் எழுதலாமா?

**கடுமையான வெயில்**

**தாகம்**

**தண்ணீர் பாக்கெட் விற்பனை**

**மாலை வெயில்**

**இருண்ட வானம்**

**கொட்டும் மழை**

**வெள்ளம்**

**மன மகிழ்ச்சி**

திரும்பத் திரும்ப இந்த வார்த்தைகளோடு நாம பேசும் போது, முதல்ல நம்ம எழுதின வார்த்தைகள் உருமாறியும் போகும். மேலும் புது வார்த்தைகளை கூட்டிகிட்டும் வரும். இதை நம்ம கவனமா நம்ம மனக் கண்ணுல பாக்கணும். பிறகு, அது உங்க மனசுக்குள்ள ஒரு ராகத்தோடு வரி, வரியா சேரப் பார்க்கும். இது எல்லாம் நடக்குறதுக்கு பொதுவா நிறைய நேரம் எடுக்கலாம். அவசரப்படக் கூடாது. அம்மா இட்லி செய்ய எவ்வளவு நேரம் எடுக்குது?, அரிசிய அளவா தேர்வு செஞ்சு எடுத்துக்கனும், உளுந்தோட குறிப்பிட்ட மணி நேரம் ஊற வைக்கனும், பிறகு அறைக்கனும், மாவு புளிச்சி பொங்கி வரனும், இட்லி தட்டுல ஊத்தி வச்சு வேக வைக்கனும். இப்படி ஒவ்வொரு செய்முறைய தாண்டும் போதும் காத்திருக்கிறோமில்லையா? அது மாதிரி, கவிதையையும் படிப்படியா காத்திருந்து எழுதினா நல்லா வரும். பழக, பழகத்தான் வேகமா கவிதை எழுத முடியும்.

**கவிதைங்கிறது வார்தைகளை கொண்டு சமைக்கிறதுதான். செஞ்சி ருசிச்சு பாருங்களேன்!.**

### III. மூன்றாம் படி

மழை... இப்போ மேல, கட்டத்துக்குள்ள நம்ம ஏற்கனவே போட்டிருக்கிற வார்த்தைகள வச்சி அத இப்படி, அப்படின்னு மாத்தி, இன்னும் சில வார்த்தைகள சேர்த்து கோர்வை படுத்தி, மழையப்பத்தி ஒரு கவிதை எழுதிப் பார்க்கலாமா?

**மழை...**

வாட்டியெடுத்த வெயிலில..
சுக்கா காஞ்சோம் பகலுல
வரண்டு போன நாக்குக்கு தாகம் தீர்க்க போனா...
5 ரூபா கேட்டா முக்கு கட மீனா..
ஒரு பாக்கெட் தண்ணிக்கு.

மஞ்சள் வெயில் மங்கி,
இருண்டு வந்த மேகம்
சுமந்து வந்து உன்ன
கொட்டி தீர்த்தாள் எங்கள் மேல்!
ஆறு குளம் நீ நிரப்பி, வாழ வைத்த
உன் அன்பிற்கு, விலை ஒன்றும் - நீ
கேட்டு வாங்கவில்லையே!

**இப்போது நீங்களா ஒரு கவிதை எழுதலாம்!**

**I. முதல்படி**

உங்களுக்கு பிடித்த உணர்வுப் பூர்வமான தலைப்பில் சில வாக்கியங்களை அமைத்தல். (நிதானமாக யோசித்து கட்டத்திற்குள் எழுதவும்)

| **தலைப்பு:** |
|---|
| **உரைநடை வடிவில் உங்கள் உணர்வுகள்:** |

**II. இரண்டாம் படி**

நீங்கள் மேலே எழுதியுள்ள வாக்கியங்களில் இருந்து, உங்களுக்கு மிகவும் பிடித்த வார்த்தைகள், மேலும் வார்த்தை தொடர்களை தேர்வு செய்து கட்டத்தில் எழுதவும். அவ்வாறு எழுதும் போது, புதிதாக மனதில் தோன்றும் வார்த்தைகளையும், தொடர்களையும், சேர்த்துக் கொள்ளலாம்.

**உணர்வுகளை உதிர்க்கும் வார்த்தைகள், வார்த்தைத் தொடர்கள்:**

## III. மூன்றாம்படி

நேரடித் தொடர்பு இல்லாமல் மேல் கட்டத்தில் சிதறிக் கிடக்கும் வார்த்தைகளை இசை நயத்தோடு உங்களுக்கு பிடித்த வகையில் கவிதை வடிவத்தில் மாற்றி அமைக்கவும்

| **கவிதை** |
| --- |
| |

இந்த மாதிரியை பின்பற்றி, நீங்களாகவே மேலும் பல கவிதைகள் எழுதலாம்.

# 5. கையில் கிடைப்பதைக் கொண்டு கலைப் படைப்பினை செய்வோம்!

கடையில இருந்து நிறைய விளையாட்டுப் பொருட்களை குழந்தைகள் அடம் பிடிச்சி வாங்குறாங்க. ஏன், நீங்க கூட அதே மாதிரி செஞ்சிருக்கலாம் ஆமாவா, இல்லையா? ஏன்  இன்னும் செஞ்சிகிட்டு கூட இருக்கலாம். எவ்வளவு வேகமா நீங்க வாங்குறீங்களோ அவ்வளவு வேகமா நிறைய விளையாட்டுப் பொருட்கள் உடைஞ்சு குப்பைத் தொட்டிக்கும் போயிரும். நம்ம பணமும் விரயம் ஆகும். அப்படித்தானே!

அதனாலதான் இப்போ, இங்கே நான் உங்களுக்கு ஒரு புதிய கலையைப் பற்றி சொல்லித்தரப் போறேன். அது என்னன்னா உங்களுக்கு கையில கிடைக்கிற சாதாரணமான அல்லது உபயோகமற்ற பொருட்கள வச்சு, அழகாகவும், மனசுக்கு மகிழ்ச்சி தருகிற மாதிரியும் எப்படி கலைப் பொருட்களை உருவாக்கிறதுன்னுதான். சரி எப்படின்னு பார்க்கலாமா.


சும்மா கிடைக்கிற அட்டை பெட்டி, பேப்பர், கலர் பாட்டில்கள், உபயோகமில்லாத கழிவுகள்னு சொல்லுற பெயர் சொல்ல முடியாத பல பொருட்களை வச்சி ஆச்சரியப்படுற மாதிரி பல உபயோகமான கலை, மட்டும் விளையாட்டு பொருட்களை  செஞ்சு மகிழலாம். அது உங்களை நல்ல படைப்பாளியாகவும் ஆக்கும். உங்களைச் சுற்றி இருக்குறவங்களை நீங்க மகிழவும் வைக்கலாம்.

## 1. ஓரிகாமியில் " வண்ணத்துப்பூச்சி " செய்தல்


இப்ப நாம ஓரிகாமியில் வண்ணத்துப்பூச்சி எப்படி செய்றதுன்னு பார்ப்போம். "ஒரு A4 கலர் சீட்" எடுத்துக்கோங்க. அத இப்ப நான் மடிக்கிற மாதிரி மடிச்சு கட் பண்ணிக்கோங்க.

முதல் ஸ்டெப் :

1a.




1b.



படத்தில் அம்புக் குறியிட்ட பகுதியை கட் பண்ண வேண்டும்


இரண்டாவது ஸ்டெப் :

**2a.** கட் பண்ண பின்னாடி இந்த சீட் மட்டும் எடுத்துக்கோங்க.



**இரண்டாவது ஸ்டெப் தொடர்ச்சி...**

**2b.**




இந்த படத்தில் உள்ளவாறு ஒரு பகுதியை மடிக்கவும்.

2c.




இது போல இரு புறமும் மடித்துக் கொள்ள வேண்டும்



**மூன்றாவது ஸ்டெப் :**




உள்ளே அழுத்தவும்.




இது போன்று முக்கோணமாக வரும்.

[ படத்தில் கண்டவாறு கவனமாக செய்யவும்.]

**நான்காவது ஸ்டெப் :**






படத்தில் உள்ளவாறு இரு பக்கங்களையும் மடிக்கவும்.


**ஐந்தாவது ஸ்டெப்:**

நான்காவது ஸ்டெப்பில் கிடைக்கும் வடிவத்தை அப்படியே திருப்பிக் கொள்ளவும்.



இந்த இடத்தில் மடித்துக் கொள்ளவும். அதன் பின் கீழே உள்ள பகுதியை முன் பக்கமாக அழுத்தி மடக்கவும்.

இது போல ஒரு வடிவம் கிடைக்கும். அதை அப்படியே திருப்பிக் கொள்ளவும்.





இப்போது வண்ணத்துப்பூச்சி "ஓரிகாமி" ரெடி!

## 2. கொலாஜ் ஆர்ட்

கொலாஜ் ஆர்ட் என்பது மிகவும் எளிமையானது. இதற்காக நாம் கலர் பேப்பர் அல்லது பழைய செய்தித்தாள்களை எடுத்துக் கொள்ள வேண்டும்.

பின் அதை நாம் விரும்பும் படத்தின் தன்மைக்கேற்ப வெட்டி எடுத்துக் கொள்ள வேண்டும்.



**2a.** முதலில் வெட்டி வைத்த பேப்பர்களை ஒரு அட்டையிலோ அல்லது தடிமனான பேப்ப்பரில் ஒட்டி வைத்துக் கொள்ள வேண்டும்.



**2b.** அதன் மேல் நமக்கு பிடித்த படத்தை ஸ்கெட்ச் பண்ணிக் கொள்ள வேண்டும்.



**2c**. பின் நாம் செய்த ஸ்கெட்ச் செய்த படத்தினுள் அந்த வடிவத்திற்கேற்ப நீங்கள் விரும்பும் கலரில் பேப்பரை ஒட்டுங்கள் அல்லது அதற்கேற்றார் போன்று கலர் பேப்பரை செய்தித்தாள்களில் இருந்து கட் செய்து ஒட்டுங்கள். இங்கே கொடுக்கப்பட்டிருக்கும் படத்தில் உள்ள டீ கப்பிற்கு நான் ப்ளு கலர் கொடுத்துள்ளேன். உங்களுக்கு என்ன கலர் பிடிக்குமோ அதற்கேற்றார் போல கலர் பேப்பர் ஒட்டுங்கள். மேலும் இதை அழகுபடுத்த இங்கு ப்ளு கலரில் கொடுத்தது போல நீங்களும் சுற்றிலும் கலர் கொடுங்கள் .



ஒட்டி முடித்தால், உங்கள் கொலாஜ் ஆர்ட் ரெடி!

# 3.பாட்டில் ஆர்ட்

**3a.** உங்க அம்மா, அப்பாகிட்ட கேட்டு நம்ம வீட்டில் உபயோகமற்றதாக இருக்கும் பாட்டில் ஐ எடுத்துக் கொள்ள வேண்டும். பின் வீட்டிலிருக்கும் பழைய பேப்பர்களை  வெட்டி எடுத்து பாட்டில் முழுவதும் ஒட்டிக் கொள்ள வேண்டும்.





3b. பின் அதில் நமக்கு பிடித்தமான ஒரு படத்தை வரைந்து அதில் நமக்கு பிடித்த கலர்களை அப்ளை செய்ய வேண்டும்.





3c. பின் பூக்களுக்கு இங்கே கொடுக்கப்பட்டிருக்கும் படத்தில் உள்ளவாறு நீங்கள் கலர் செய்தால், ஒரு அழகான பாட்டில் ஆர்ட் ரெடி !!



## 4.தேங்காய் நாரில் சிங்கம்

4a. நம் வீட்டில் தேங்காயிலிருந்து உரித்து உபயோகமற்றதாக இருக்கும் தேங்காய் நார்களை எடுத்துக் கொள்ள வேண்டும்.

படத்தில் காட்டியவாறு ஒரு அட்டை பெட்டி அல்லது நோட்டு புத்தக அட்டையை எடுத்துக் கொள்ளுங்கள். பின்பு தேங்காய் நார்களை கசக்கி அதிலிருந்து கிடைக்கும் தூள்களை எடுத்துக் கொள்ள வேண்டும்.





4b. அந்த அட்டையில் சிங்கத்தின் முகத்தை வரைந்து அதன் மேல் பெவிக்கால் கொண்டு முழுவதுமாக தடவி, அதில் தேங்காய் தூள்களை போட்டு அழுத்தி, நன்றாக காய விட வேண்டும்.





4c. தூள்கள் நன்றாக காய்ந்த பின் தேங்காய் நார்களை சிங்க படத்தைச் சுற்றி ஒட்ட வேண்டும்.





4d. சிங்கத்தின் உருவம் கிடைத்தவுடன், இந்த படத்தில் இருப்பதைப் போல சிங்கத்தின் முகத்திற்கு மஞ்சள், பிரவுன் கலர்களை தேங்காய் நார்களின் மீது கலர் செய்ய வேண்டும்.





இப்போது நமக்கு ஒரு தேங்காய் நார் கொண்டு செய்த சிங்க ஓவியம் கிடைத்து விட்டது!


[ விளக்கப் படத்தை பார்த்து கவனமாக செய்து பார்க்கவும்.]

## 5. பிளவர் வாஸ் (பூத்தொட்டி)


தேவையான பொருட்கள் :



5a. நமக்கு பிடித்த கலர் சீட் ஒன்றை எடுத்து, அதில் 5 வட்டங்களை போட்டு தனியாக வெட்டி எடுத்துக் கொள்ள வேண்டும்.



5b. வெட்டி எடுத்த பேப்பர்களை நான்கு பகுதியாக மடித்து, படத்தில் உள்ளது போல் வெட்டிக் கொள்ள வேண்டும். [இது போல் மற்ற பேப்பர்களையும் வெட்டிக் கொள்ள வேண்டும்.]






5c. இந்த படத்தில் இருப்பது போல் வெட்டி, ஒன்றன் பின் ஒன்றாக ஒட்டி, நடுவில் நமக்கு பிடித்த கலரில் கலர் செய்து கொள்ள வேண்டும். நமக்கு பூ கிடைத்து விடும்.






5d. பின்பு ஒரு குச்சியும், பச்சை கலர் சீட்டும் எடுத்து, குச்சியின் ஒரு முனையிலிருந்து முழுவதுமாக சுருட்டி, பசையைக் கொண்டு ஒட்ட வேண்டும். பின்னர் பச்சை கலரில் இலையை வரைந்து அந்த குச்சியோடு ஒட்ட வேண்டும்.











5e. படத்தில் உள்ளது போல் பாட்டிலின் குறுக்கே வெட்டி கீழ் பகுதியை எடுத்து, வெட்டிக் கொள்ள வேண்டும்.



5f. செய்த பூக்களை எடுத்து பாட்டிலில் போட்டால், அழகான பிளவர் வாஷ் (பூத்தொட்டி) ரெடி!



## 6. அட்டையில் வீடு

6a. நம் வீட்டில் வீணாக இருக்கும் நோட்டு புத்தக அட்டை அல்லது ஏதாவது ஒரு அட்டை பெட்டியை எடுத்துக் கொள்ள வேண்டும்.



6b. எந்த மாதிரி பொருள் செய்யப் போறோமோ அதை ஒரு A4 சீட்டில் வரைந்து அதை மாதிரியாக வைத்து அட்டையில் வரைந்து கொள்ள வேண்டும்.

அட்டையில் வரைந்த அளவுகளை கத்தரிக்கோலால் வெட்டிக் கொள்ள வேண்டும்.

[ கவனமாக, பெற்றோரின் உதவியுடன் செய்ய வேண்டும்.]







6c. வெட்டிய அட்டைகளை படத்தில் உள்ளவாறு பசை கொண்டு ஒட்ட வேண்டும்.

6d. ஒட்டி முடித்தவுடன் “அட்டை வீடு” முழுவதும் போஸ்டர் கலரில் (வெள்ளை) வீடு முழுவதும் தடவி காய விட வேண்டும்.





6e. பின்பு படத்தில் இருப்பது போல் வீட்டின் ஒவ்வொரு பகுதிக்கும் உங்களுக்குப் பிடித்த கலர்களை அப்ளை பண்ணுங்க.



6f. ஒட்டிய பின்னர் கதவு, ஜன்னல்களை வரைந்து, அதையும் வீட்டில் ஒட்டிக் கொள்ள வேண்டும்.



அழகிய வண்ணமயமான வீடு தயார் !

# 6. எல்லோரும் கூடிச் சமைப்போம்!



நமது வீடுகளில் பொதுவாக சமைப்பதுன்னா உடனே ஞாபகத்துக்கு வருவது நம்ம அம்மா, பாட்டி மற்றும் அக்கா! ஆனால் அதை சாப்பிடுவதென்றால் ஞாபகத்துக்கு வருவது ஆண்களாகிய நம்ம தாத்தா, அப்பா, அண்ணன் மற்றும் தம்பி.

சமைப்பது என்பது ஏதோ பெண்களுக்கு மட்டுமே ஆன கடமை என்கிற சிந்தனை ஆண் பிள்ளைகளிடம் அதிகம். இந்த நிலைமை உருவாவதற்கு அப்பாவும் காரணம், அம்மாவும் காரணம். அப்பாவை பெரும்பான்மை வீடுகளில் அடுப்படியில் பார்க்கவே முடியாது. ஆண் பிள்ளையாக இருந்தால், "பொம்பளை பிள்ளை மாதிரி அடுப்படிய ஏன்டா சுத்தி சுத்தி வர்ற? ன்னு அம்மா கேட்பாங்க. நம்மிடையே சமையல் வேலை செய்வது என்பது ஒரு குறைவான மதிப்பீடு. அது 'பெண்களின் வேலை மட்டுமே' என்று கருதுவது சரியல்ல!

இதை எப்படி மாற்றுவது என்றால், அதற்கு ஒரே வழி ஆண் பிள்ளைகள் சிறு வயதிலிருந்தே சமைக்கப் பழகுவதுதான்!

கீழ்கண்ட இரண்டு சமையல் குறிப்புகளையும் பெண் பிள்ளைகள் படிக்கவில்லை என்றாலும் பரவாயில்லை. ஆனால் ஆண் பிள்ளைகள் கண்டிப்பாக படிக்க வேண்டும். அம்மாவுடனோ, அப்பாவுடனோ, அக்காவுடனோ, அண்ணனுடனோ சேர்ந்து சமையல் செய்தும் பார்க்க வேண்டும்.

சமைப்பது என்பது திட்டவட்டமாக ஒரு கூட்டுச் செயல்பாடாக இருக்க வேண்டும். இதில் ஆண் பெண் என்கிற வித்தியாசம் அல்லது பாகுபாடு இருக்க கூடாது. நமக்கு பிடித்த உணவை நம்மிடம் இருப்பதைக் கொண்டு அனைவரும்

சேர்ந்து மகிழ்ச்சியாக சமைத்து சாப்பிடும் போது, நமக்குள் ஒரு இனம் புரியாத அன்பு உருவாகுவதுடன், குடும்பத்தில் ஒரு மகிழ்ச்சிப் பகிர்வும் ஏற்படும். இந்த ஊரடங்கு காலத்தில், பல்வேறு துயரமான சம்பவங்கள் நடந்திருந்தாலும் நம்முடைய வீட்டில் மகிழ்ச்சி குறையாமல் பார்த்துக் கொள்வதற்க்கு இது போன்ற கூட்டுச் செயல்பாடுகள் மிக அவசியம்.

அதனால், இப்போ நம்மகிட்ட இருக்கிற சத்துமாவு, அரிசி, கோதுமை மாவு, சுண்டல் பயிரை கொண்டு நாம் நமக்கு பிடித்ததை சேர்ந்து சமைத்து அந்த மகிழ்ச்சியை கொண்டாடுவோம். இங்கு சத்துமாவு லட்டு எப்படி தயார் செய்யலாம் என்று ஒரு நண்பர் சொல்லியிருக்கிறார். வாசித்துப் பாருங்கள். அம்மாவுக்கும் அப்பாவுக்கும் வாசிச்சு காட்டுங்க. உங்களுக்கு பிடித்த மாதிரி கொஞ்சம் மாத்திகூட செஞ்சு பாருங்க. சத்துமாவு லட்டு மட்டுமில்ல, உங்க வீட்ல இருக்குற பொருட்களைக் கொண்டு அப்பாவைக் கூப்பிட்டு, அம்மாவைக் கூப்பிட்டு, அண்ணனைக் கூப்பிட்டு, தம்பியைக் கூப்பிட்டு, அக்காவைக் கூப்பிட்டு, தங்கையை கூப்பிட்டு சேர்ந்து சமைச்சு சாப்பிடலாமே. எப்பவுமே ஒரு எதிர்பாராத பிரச்சனைதான் ஒரு எதிர்பாராத கண்டுபிடிப்பையும் கொண்டு வரும். குடும்பத்தில் பாகுபாடின்றி கூடிச் சமைக்கிற பழக்கம் கொரோனா முடக்கம் தாண்டி உருவான கண்டுபிடிப்பா இருக்கட்டுமே! எல்லாக் குடும்பங்களிலும் அது நிரந்தரமா வேரூன்றிப் போச்சுன்னா எத்தனையோ குடும்பப் பிரச்சனைகளுக்கு இது தீர்வா அமையும்! இதுல ஒரு சமூக மாற்றத்திற்கான சாத்தியக்கூறே அடங்கியிருக்கிறது.

**சத்துமாவு லட்டு செய்து பார்!**

**தேவையான பொருட்கள்**

1. சத்துமாவு - 1 கப்
2. இடித்து பொடியாக்கிய வெல்லம்/ சர்க்கரை - 1/2 கப்
3. முந்திரி பருப்பு - 10
4. பாதாம் பருப்பு - 10
5. கிஸ்மிஸ் - 1/4 கப்
6. உருக்கிய நெய் - தேவைக்கேற்ப

**செய்முறை:**

ஒரு கப் சத்துமாவை எடுத்து அதில் பொடியாக்கிய வெல்லத்தை சேர்க்கவும், முந்திரி, பாதாம் சேர்த்துக் கொள்ளவும். ஒரு தேக்கரண்டி நெய்யை வடசட்டியில் ஊற்றி நெய் காய்ந்தவுடன், அதில் கிஸ்மிஸ் பழம் சேர்த்து கிண்டவும். கலந்து

வைத்த சத்துமாவு, முந்திரி, பாதாம் மற்றும் பொடியாக்கிய வெல்லத்தை சேர்க்கவும். நன்றாக சேர்த்து மிக்ஸ் செய்யவும்.

நெய்யைக் காய்ச்சி பதத்தில் சத்துமாவு மிக்சுடன் சேர்க்கவும். லட்டு பிடிக்கவும். லட்டு பிடிக்கும் பதம் வந்தவுடன், நெய் சேர்ப்பதை நிறுத்தவும். தேவைக்கேற்ப லட்டு பிடிக்கும் பதத்திற்கு சிறிது சிறிதாக சேர்த்து பிடிக்கலாம்.

சுவையான, சத்தான சத்துமாவு லட்டு 15 நிமிடத்தில் தயார்!

**குறிப்பு:**

நெய் மிக மிதமான சூட்டில் இருக்க வேண்டும். சூடான நெய்யை அறவே தவிர்க்கவும். முந்திரி, பாதாம் ஆகியவற்றை எண்ணெய் சேர்க்காமல் வறுக்கவும். வறுத்த முந்திரி பாதாம் பருப்புகளை சிறிய துண்டுகளாக நறுக்கி எடுத்து கொள்ளுங்கள்.

பிடித்து வைத்த சத்துமாவு லட்டை, ஈரப்பதம் இல்லாத பாத்திரம் மற்றும் கரண்டி உபயோகித்து, காற்றுப்பதம் இல்லாத டப்பாவில் சேர்த்து வைக்கவும். லட்டை எடுப்பதற்கு ஈரமில்லாத கரண்டியை பயன்படுத்தவும் – லட்டு 15 முதல் 20 நாட்கள் வரை பதமாயிருக்கும். ஆனால் நீங்கள் இரண்டு மூன்று நாட்களுக்குத் தேவையான அளவுக்கு செய்து கொள்ளுங்கள். 15-20 நாட்கள் வைத்து சாப்பிட வேண்டாம்.

**சத்துமாவு கொழுக்கட்டை பிடி!**

தேவையான பொருட்கள்

1. சத்துமாவு - 3/4 கப்
2. அரிசி மாவு - 1/4 கப்
3. வெல்லம் - 1/2 கப்
4. தண்ணீர் - 1/3 கப்
5. துருவிய தேங்காய் - 1/3 கப்

**செய்முறை:**

3/4 கப்பு சத்துமாவு எடுத்து 1/4 கப் அரிசி மாவுடன் கலந்து கடாயில் மிதமான சூட்டில் 2 நிமிடம் வறுக்கவும். மாவை தொட்டால் மிதமான சூடுபதத்தில் இருக்க வேண்டும்.

வறுத்த மாவை ஒரு பாத்திரத்தில் மாற்றி ஆற விடவும்...

1/2 வெல்லம் 1/3 கப் தண்ணீருடன் கரையும் வரை கொதிக்க விடவும்.
1/2 தேக்கரண்டி நெய் ஊற்றி துருவிய தேங்காய் 1/3 கப் ஒரு நிமிடம் வறுக்கவும்.

நெய்யில் வறுத்த தேங்காய் துருவலை பாத்திரத்தில் கொதித்த வெல்லம் கலந்த தண்ணீரை (வெல்ல பாகு மிக கெட்டியாக இருக்க கூடாது. மிகவும் தண்ணீராகவும் இல்லாமல் மிதமான தண்ணீர் அளவில் பாகு இருக்க வேண்டும்) வெல்லம் கலந்த கொதித்த தண்ணீரை வடி கட்டி பாத்திரத்தில் 3/4 கப் சத்துமாவு மற்றும் தேங்காய்த் துருவல் சேர்த்து தேக்கரண்டியினால் கிளறவும்.

சிறிது தண்ணீர் விட்டு நன்றாக மாவை நமக்கு பிடித்த விதத்தில் கொழுக்கட்டை பிடிக்கவும். 2-3 முறை பிடித்து பார்த்த பின்னர், உங்களுக்கு விரும்பிய வடிவத்தில் கொழுக்கட்டை பிடிக்கவும். மாவு அனைத்தையும் கொழுக்கட்டை பிடிக்கவும். மிதுவான கொழுக்கட்டை வேண்டுமென்றால் கொஞ்சம் சுடு தண்ணீர் தெளித்து மாவை சேர்த்துப் பிடிக்கவும்.

இட்லி கொப்பரையில் 15 நிமிடங்கள் நீராவியில் வேக வைக்கவும். சூடான சத்துமாவு கொழுக்கட்டை தயார்!

மாவுடன் இடித்த ஏலக்காய் சேர்த்தால் நன்றாக மணக்கும், சுவையாகவும் இருக்கும்!

பல தானிய மாவையும் சேர்த்தால் இன்னும் சுவையாக இருக்கும்.

# 7. நாடகம் பழகலாம் !



**நாடகக் கலை என்றால் என்ன?**

ஒரு கதையை அல்லது ஒரு கருத்தை, **உடல் மொழியையும், பேச்சு மொழியையும்** கொண்டு பார்வையாளர்களுக்கு எளிமையாகவும், சுவாரசியமாகவும், மனதில் பதியும் வகையிலும் கூறும் தகவல் பரிமாற்ற முறையை நாடகம் என்று கூறலாம். உதாரணமாக பள்ளி சென்றவுடன் மிக முக்கியமாக மாணவர்களிடையே சென்றடைய வேண்டிய செய்தி 'கொரோனா தொற்று பரவாமல் தடுப்பதில் குழந்தைகளின் பங்கு.' இதை கீழ்கண்ட வகையில் செய்யலாம்:

- செய்திப் பலகையில் எழுதிப் போடுவது
- ஆசிரியர் வகுப்பறையில் பேசுவது
- கட்டுரைகள் எழுதி வாசிப்பது
- பேச்சுப் போட்டிகள் வைத்து அனைத்து மாணவர்களையும் கேட்க வைப்பது
- கவிதை வாசிப்பது
- நாடகம் எழுதி நடிப்பது

**எது சுவாரசியமாகவும், கேளிக்கை நிறைந்ததாகவும், கூட்டுச் செயபாடுகள் நிறைந்ததாகவும் இருக்கும்?**

நாடகம்தான்!

**ஏன் நாடகத்தை கலைன்னு சொல்றாங்க?**

கதையை அல்லது ஒரு செய்தியை **காட்சிப் படுத்தி சொல்றதுக்கு,** நிறைய படைப்பாற்றல் கொண்ட கற்பனை தேவைப்படுது. வேற மாதிரி சொல்றதுன்னா, நீங்க போடுற ஒவ்வொரு நாடகத்துக்கும் ஒரு தனித்தன்மை அல்லது ஒரிஜினாலிட்டி இருக்கணும். அது ஒரு விசயத்த வகுப்புல இருக்கிற 50 பேரும், ஒரே மாதிரி பரீட்சைக்கு மனப்பாடம் பண்ணி ஒப்பிக்கிற சராசரி வேலை இல்லை. கொரோனா தடுப்புங்கிற ஒரே தலைப்பை பள்ளிக்கூடத்தில இருக்கிற பத்து வகுப்புகளும், பத்து டிராமாவா போட்டாலும், பத்தும் ஒண்ண ஒண்ணு மிஞ்சி களிப்பூட்டி விஷயத்த ஆழப்படுத்தணும். அது மட்டுமில்ல, அந்த பத்தையும் பத்து தடவ பார்த்தாலும் அது சலிப்பு தட்டாம இருக்கணும். இது நடந்தா கலை உருவாயிருச்சுன்னு சொல்லலாம். இதை படைப்பாற்றல் கொண்டுதான் செய்யமுடியும்.

அது மட்டுமல்ல, நாடகம் ஒரு **கூட்டுக் கலையும், கூட்டுப் படைப்பும் கூட!**

ஒரு நாடகம் அரங்கேற்றம் செய்ய என்னென்ன கலைத்திறனும் கலைஞர்களும் தேவைப் படுறாங்கன்னு ஒரு பட்டியல் போட்டு பார்ப்போமா? அப்படி போட்டாத்தான் கூட்டுக் கலையும் கூட்டுப் படைப்பும்கிறது விளங்கும்.

| எண் | அம்சம் அல்லது கூறு | கலை கூறு /அம்சம் | கலைஞன் |
|---|---|---|---|
| 1. | கதை | வாய்மொழி கதை அல்லது எழுத்து வடிவ கதை (இலக்கியம்) | நிகழ்த்துக் கலைஞன் அல்லது இலக்கியவாதி |
| 2. | நாடகப் பிரதி | எழுத்துக் கலை | நாடக எழுத்தாளன் / இலக்கியவாதி |
| 3. | பாத்திரம் | நடிப்பு | நடிகன் |
| 4. | அரங்கு, காட்சியமைப்பு | ஆர்ட் டைரக்சன் / ஸ்டேஜ் டைரக்சன் | ஆர்ட் டைரக்டர் |

| | | | |
|---|---|---|---|
| 5. | ஆடை | காஸ்ட்யூம் டிசைன் அல்லது உடை அலங்காரம் | காஸ்ட்யூம் டிசைனர் அல்லது உடை அலங்கார கலைஞர் |
| 6. | முக அலங்காரம் | முக அலங்கார கலை | முக அலங்கார கலைஞர் |
| 7. | சிகை அலங்காரம் | சிகை அலங்கார கலை | சிகை அலங்கார கலைஞர் |
| 8. | இசை | இசை | இசையமைப்பாளர் |
| 9. | ஒலி | ஒலி அமைப்பு | ஒலி அமைப்பாளர் |
| 10. | ஒளி | ஒளி அமைப்பு | ஒளி அமைப்பாளர் |
| 11. | பாட்டு | பாடற்கலை | பாடகர்கள்/ பாடகர் குழு |
| 12. | இயக்கம் | படைப்பாசிரிய தலைமை | இயக்குனர் |

### இத்தனையும் எல்லா நாடகத்துக்கும் தேவைப்படுமா?

மேற்கண்ட பட்டியல் மேடை நாடகத்தை மனதில் வைத்துப் போடப்பட்டிருக்கு. சாதாரணமா ஒரு தெரு நாடகத்துக்கு இத்தனையும் அவசியப்படாதுன்னு உங்களுக்குத் தெரியுமே! இது ஒரு அடிப்படை. கூட்டுக் கலைங்கிறதையும், கூடிச் செயல்படுறதுங்கிறதையும் இந்த பட்டியல் வலியுறுத்திக் காட்டுது.

### நாடகம் பல வகைப்படுமா?

இது எல்லோரையும் குழப்புற விஷயம். கொஞ்சம் கவனமா இத புரிஞ்சுக்க முயற்சி பண்ணனும். எந்த வகைல நாடகத்தை வகைப் படுத்துறாங்கங்கிறத பாக்கணும். எந்த கலாச்சார பாரம்பரியத்தில இருந்து ஒரு நாடக வடிவம் வந்தது, அது எந்த விஷயத்த நாடகமாக்க பார்த்துச்சு, எந்த நோக்கத்துக்காக, யாரை அது ரசிகர்களாக பார்துச்சுன்னு பாக்கணும். இப்ப நம்ம மத்தியில நடமாடிகிட்டு இருக்கிற நாடக வடிவங்கள வகைப் படுத்தி பார்ப்போமே!

| நாடக பாரம்பரியம் | கதை/ பொருள் | தோற்றம் | ரசிகர்/ஆதர வாளர்கள் | நோக்கம் |
|---|---|---|---|---|
| **தெருக்கூத்து**<br>(பாட்டு நாடகம்) | பாரம்பரிய கதைள்/ புராணக் கதைகள் | தமிழ்நாடு | சாமானியர்கள் | வழிபாடு, திருவிழா கொண்டாட்டங்கள்<br>பாரம்பரியம் காத்தல் |
| **கதக்களி**<br>(நாட்டிய நாடகம்) | மகாபாரதக் கதைகள் | கேரளம் | மேட்டுக்குடி<br>(ஆரம்ப காலங்களில்) | திருவிழா கொண்டாட்டங்கள்<br>பாரம்பரியம் காத்தல் |
| **மேடை நாடகம்**<br>(இயல்பான நடிப்பும் பேச்சும்) | புராண, சரித்திர அல்லது சமூக, சமகால அரசியல் தர்க்கங்களை கொண்ட கதைகள் | கிரேக்கம். இந்தியாவிற்கு 19ம் நூற்றாண்டில் | பொதுவாக படித்த மேட்டுக்குடி மக்களுக்காக | பொழுதுபோக்கு, சமூக, அரசியல், கலை கலாச்ச்சார விமர்சனம் |
| **தெரு நாடகம்**<br>(நடிப்பில் அதிகமாக அடையாள மொழி) | சமகால சமூக,பொருளா தார, அரசியல் சார்ந்த தலைப்புகள் | ஐரோப்பா இந்தியாவிற்கு 20ம் நூற்றாண்டில் | சாமானிய குடிமக்கள் | சமூக அரசியல் விமர்சனம் / மாற்றம்<br>(பார்வையாளர்களின் நேரடி பங்கேற்பு) |

**பார்வையாளர்கள் மனதில் என்ன மாதிரியான உணர்வுகளை வெளிக்கொண்டு வருதுங்கிற அடிப்படையில் வகைப்படுத்துதல்.**

| வகை | நாடகப்படுத்தப்படும் விதம் |
|---|---|
| நகைச்சுவை நாடகம் (Comedy) | மகிழ்ச்சியான நிகழ்வுகள் நிறைந்து, மகிழ்ச்சியாகவே முடியும். |
| சோக நாடகம் Tragedy | மரணம், கொலை, தோல்வி போன்ற துயரச் சம்பவங்களுடன் முடியக் கூடியதாக இருக்கும். முக்கிய பாத்திரங்களின் பண்புகளில் உள்ள குறைகள் வீழ்ச்சிக்கு காரணமாக சித்தரிக்கப்படும். |
| மகிழ்ச்சியாக முடியும் சோக நாடகம் (Tragicomedy) | நகைச்சுவையும் சோகமும் கலந்து வடிவமைக்கப் பட்டிருக்கும். பல துயரச் சம்பவங்கள் நிகழ்ந்தாலும், மகிழ்ச்சியாகவே இந்த நாடகங்கள் முடியும். |
| உணர்ச்சிமிக்க இன்ப முடிவு நாடகம் (Melodrama) | மகிழ்ச்சியான நிகழ்சிகளை மையமாக வைப்பதுமின்றி, அனைத்தையும் மிகைப்படுத்தி கூறி மகிழ்ச்சியான முடிவுக்கு மட்டுமே வரும். பார்வையாளர்களின் உணர்சிகளை மட்டுமே மையங்கொள்ளும், சிந்தனையை அல்ல. |

## நாடகம் அரங்கேறுவதில் உள்ள படி நிலைகள்

- கதையைத் தேர்ந்தெடுத்தல்
- கதைச் சுருக்கம் எழுதுதல்
- காட்சிகள் பிரித்தல்
- பாத்திரங்கள் படைத்தல்
- வசனம் எழுதி காட்சிகளை தெளிவாக எழுதுதல்
- நடிகர்களைத் தேர்வு செய்தல்
- நடிப்பு பயிற்சி
- உடைகளைத் தேர்ந்தெடுத்தல்
- கலைப் பொருட்களை (ப்ராப்) சேகரித்தல்
- மேடை அமைத்தல்
- அரங்கேற்றல்

## படிப்படியாக செயல்படுதல்

| படி<br>Steps | செயல்பாடு | கருத்தில் கொள்ள வேண்டியவை | பொறுப்பு |
|---|---|---|---|
| 1. | கதைத் தேர்வு | கதை வேறு, நாடகப் பிரதி வேறு.<br><br>நாடகத்திற்கான கருப்பொருள், புராணம், நாட்டுப்புறக்கதை, நீதிக்கதை, வாழ்கை வரலாறு, நாவல், சிறுகதை என்று எதிலிருந்தும் எடுக்கலாம். நாடகத்திற்கென்றே நீங்கள் எழுதும் உங்கள் சொந்த கதையாகவும் இருக்கலாம். | **நாடகாசிரியர்** |
| 2. | கதைச் சுருக்கம் எழுதுதல் | எவ்வளவு பெரிய கதையாக இருந்தாலும் இரண்டு மூன்று பக்கத்தில் கதைச் சுருக்கம் எழுதவும். இதில் கதைப்பின்னல், அதாவது கதை நிகழ்வுகளை எந்த வரிசையில் கோர்வை படுத்தி **சுவாரசியத்தையும் அர்த்தப்படுத்தலையும்** கொண்டுவரப் போகிறீர்கள் என்பதில் கவனம் செலுத்த வேண்டும். (Plot வைப்பது). | **நாடகாசிரியர்** |
| 3. | காட்சிகள் பிரித்தல் | எத்தனை காட்சிகள், எந்தெந்த நிகழ்சிகளை எவ்வாறு காட்சிப்படுத்தப் போகிறீர்கள் மற்றும் எந்த வரிசையில் என்று விரிவாக எழுதுங்கள் | **நாடகாசிரியர்** |
| 4. | பாத்திரங்கள் படைத்தல் | கதைக்கு ஏற்றவாறு, தலைமைப் பாத்திரம், முக்கிய பாத்திரங்கள் மற்றும் துணைப் பாத்திரங்கள் யாவை என்று, தேர்வு செய்யுங்கள். | **நாடகாசிரியர்** |

| | | | |
|---|---|---|---|
| 5. | வசனம் எழுதி காட்சிகளை தெளிவாக்குதல் | பாத்திரங்கள் உயிர் பெறுவது இரண்டு நடவடிக்கைகளின் மூலம்: பாத்திரங்களின் செய்கை (actions), உரையாடல் (வசனம்).<br><br>வசனங்ககளை, பாத்திரத்திற்கும் கதைக்கும் தகுந்தவாறு எழுதுங்கள். | **நாடகாசிரியர்** |
| 6. | நடிகர்களை தேர்வு செய்தல் | பாத்திரங்களுக்கு ஏற்றவாறு நடிகர்களை தேர்வு செய்தல்: தோற்றம், குரல், ஆளுமை பண்புகள், நடிக்கும் திறன் ஆகியவற்றை கணக்கில் எடுங்கள். | **இயக்குனர்** |
| 7. | நடிப்பு பயிற்சி | பயிற்சி மிக மிக அவசியம். | **இயக்குனர்** |
| 8. | உடைகளை தேர்வு செய்தல் | நாடக வடிவத்தை பொருத்து மாறும். மேடை நாடகத்திற்கு தேவையானது தெரு நாடகத்திற்கு அவசியம் இல்லை. | **உடை அலங்கார கலைஞர்** |
| 9. | கலை பொருட்களை சேகரித்தல் | ஆடைத் தேர்வை போன்றே, நாடக வடிவத்திற்கு தகுந்தார் போல் மாறும். | **கலை பொருட்கள் பொறுப்பாளர்** |
| 10. | மேடை அமைத்தல் | இதுவும் அவ்வாறே. மேடையே இல்லாமல் தரையில் நிகழத்தலாம், வட்டமாக சுற்றி அமர்ந்து பார்க்கக்கூடிய மேடையாக இருக்கலாம், ஆடிட்டோரியத்தில் இருக்கும் போர்ஸினியம் மேடையாக இருக்கலாம், திறந்த வெளி திருவிழா மேடையாகவும் இருக்கலாம். | **ஆர்ட் டைரக்டர்** |
| 11. | அரங்கேற்றம் | இறுதியாக பார்வையாளர்கள் முன் நேர்த்தியாக நாடகத்தை நிகழ்த்திக் காட்டுவது. | **இயக்குனர்** |

# நாடகம் எழுதுதல்: உதாரணத்துடனான விளக்கமும் செய்முறை பயிற்சியும்

## 1. மூலக்கதை தேர்வு:

நோக்கம்: கொரோனா விழிப்புணர்வு

மூலக்கதை: சொந்தமாக உருவாக்கம், தழுவல் அல்ல.

## 2. கதைச் சுருக்கம்

கொரோனா பாதிப்பிலிருந்து ஒவ்வொரு ஊரும் மெதுவாக இயல்பு நிலைக்கு திரும்பி கொண்டிருந்தது. புளியங்குடி கிராமமும் அப்படித்தான். புளியங்குடி கிராமத்தை பொறுத்த வரையில், அந்த கிராமம் பக்கத்தில் உள்ள அனைத்து கிராமங்களுக்கும் முன் மாதிரியாகத் திகழ்ந்தது. காரணம், அரசின் எல்லா நலத்திட்டங்களையும் மிகச் சரியாக செயல்படுத்தி வரும் கிராமம். இப்போதும் கூட கொரோனா காலத்தில் அரசின் விதிமுறைகளை மிகச்சரியாக கடைபிடித்த கிராமம் என்று கலெக்டர் அவர்கள் பாராட்டி பேசியிருந்தார்.

உதாரணமாக, ஊரடங்கு சமயத்தில் புளியங்குடி கிராம இளைஞர்கள் மக்கள் அனைவருக்கும் கபசுர குடிநீர் கொடுத்தார்கள், கிராம பஞ்சாயத்து சார்பில் சமுதாய சமையலறை என்ற பெயரில் ஓர் இடத்தில் சமையல் செய்யப்பட்டு அந்த கிராமத்தில் உள்ள ஏழை மக்களுக்கு உணவு வழங்கப்பட்டது. சுய உதவிக்குழு பெண்கள் தன் சுத்தம் குறித்த விழிப்புணர்வு வாசகங்களை எழுதி ஒவ்வொரு வீட்டு வாசலிலும் ஒட்டினார்கள்.

அப்போதுதான் ஒரு நாள், கொரோனா பாதுகாப்பு பணியில் சிறப்பாக செயல்பட்டு திரும்பிய தங்கள் ஊர்க் காவலர் கணேசனுக்கும், செவிலியர் பத்மாவுக்கும் கிராமத்தின் சார்பில் பாராட்டு விழா நடத்தப்பட்டது. பாராட்டு விழா ஊர்த்தலைவர் பரஞ்சோதி முன்னிலையில் நடைபெற்றது. அந்த பாராட்டு விழாவில் மக்கள் அனைவரும் மாஸ்க் அணிந்து சமூக இடைவெளி விட்டு பங்கு பெற்றது குறிப்பிடத்தக்கது.

அந்த பாராட்டு விழா சிறப்பாக நடந்து கொண்டிருக்கும் வேளையில், கிராமக் காவலர் மணியன் ஐந்து சிறுவர்களை இழுத்துக் கொண்டு வந்து பஞ்சாயத்து தலைவர் முன் நிறுத்தினார். ஊர்த்தலைவர் பரஞ்சோதி “ஏன் இப்படி இழுத்துட்டு வார...என்ன செஞ்சாங்க இவுங்க?” என்று கேட்க, அய்யா இவுங்க பூட்டி இருக்க நம்ம பள்ளிக்கூட சுவர் ஏறி குதித்து விளையாடிக்கிட்டு இருந்தாங்க. அதனாலதான் பிடிச்சிட்டு வந்தேன்னு சொல்ல, தலைவர் அவர்கள் நம் கிராமத்திற்கு இவ்வளவு நல்ல பெயர் இருக்க ஏன் இப்படி செய்கிறீர்கள் என்று கூறி அவர்களைத் திட்டினார். பரமன், ரமேஷ், சேகர், பிரதீப் மற்றும் லக்ஷ்மன் உட்பட ஐந்து பேரும் தலை குனிந்து நின்றார்கள்.

அப்போது சைக்கிளில் அங்கு வந்த சீனிவாசன் வாத்தியார், இந்த ஐந்து பேரையும் பாத்ததும், என்ன ஆச்சு, இவுங்கள கூப்பிட்டு நிப்பாட்டி வச்சுருக்கீங்க என்று கேட்க, வாங்க சார்.. உங்ககிட்ட படிச்ச பசங்கதான் என்ன செஞ்சாங்க தெரியுமா? பள்ளிக்கூடத்து சுவர் ஏறி குதிச்சு போயி விளையாடிருக்காங்கனு ஊர்த்தலைவரின் உதவியாளர் காத்தமுத்து சொல்ல, சரிதான்..நிறுத்துங்கன்னு சத்தம் போட்டார் வாத்தியார்.

அவுங்க ஒன்னும் விளையாட போகல. நான் தான் இவுங்க அஞ்சு பேரையும் வரச் சொன்னேன். ஏன் தெரியுமா? பள்ளிகூடத்துல நட்டு வச்ச மரம் எல்லாம் காஞ்சு போயிருக்கும். தண்ணி ஊத்தணும், கொஞ்சம் உதவிக்கு வாங்கனு சொல்லி இருந்தேன்.

வர்ற வழியில என் சைக்கிள் பஞ்சர் ஆகி போச்சு.. வர கொஞ்சம் லேட் ஆகிருச்சு.. சரி, சார் வரல நாமலே ஊத்துவோம்னு ஏறி குதிச்சுருப்பாங்க.. ஒடனே காத்தமுத்து நா நெனச்சே.. நம்ம ஊரு பயலுகதான் நல்ல பசங்க ஆச்சேனு சொல்ல..

காத்தமுத்து மொதல்ல நிறுத்து.. ஏம்பா நீங்களாச்சும்..சொல்லிருக்க கூடாதா.. நல்ல விஷயம் தானப்பா செஞ்சுருக்கீங்க. இல்லங்க அய்யா நாங்க செஞ்சது தப்புதான்னு அஞ்சு பேரும் சொல்ல.. அதான பார்த்தேன் புளியங்குடி கிராமத்துல ஒரு புல்லு கூட தப்பு பண்ணாதப்ப.. அப்பறம்

எப்படி இந்த பிள்ளைங்க தப்பு பண்ணும்னு காத்தமுத்து சொல்ல... எல்லாரும் கைதட்டி சிரித்தார்கள்.

**காட்சிகள் பிரித்தல்**

| | |
|---|---|
| காட்சி-1 | தண்டோராகாரர், பாராட்டு விழா குறித்து மக்களுக்கு தெரிவிப்பது |
| காட்சி-2 | மக்கள், பாராட்டு விழா குறித்து தங்களுக்குள் உரையாடிக் கொள்வது. |
| காட்சி-3 | விழா நடைபெறும் இடத்திற்கு ஊர்த்தலைவர் வருவது. |
| காட்சி-4 | காவலர், செவிலியரின் சேவையை ஊர்த்தலைவர் பாரட்டி பேசுவது. |
| காட்சி-5 | காவலர் மற்றும் செவிலியரை கௌரவிப்பது. |
| காட்சி-6 | மணியன் சிறுவர்களை இழுத்துக் கொண்டு வருவது . |
| காட்சி-7 | ஊர்த்தலைவர் காரணம் கேட்பது. |
| காட்சி-8 | காத்தமுத்து காரணத்தை விளக்குவது. |
| காட்சி-9 | பள்ளிக்கூட ஆசிரியர் வருவது. |
| காட்சி-10 | மாணவர்களை வைத்திருப்பது குறித்து காரணம் கேட்பது. |
| காட்சி-11 | ஆசிரியருக்கு காரணத்தை காத்தமுத்து விளக்குவது. |
| காட்சி-12 | ஆசிரியர் மாணவர்களை அழைத்ததை குறித்து விளக்கம் அளிப்பது. |
| காட்சி-13 | ஊர்த்தலைவர் வருத்தம் தெரிவிப்பது. |
| காட்சி-14 | மக்கள் அனைவரும் மாணவர்களை பாராட்டுவது. |

**4. பாத்திரங்கள் படைத்தல்**

**(கதைச் சுருக்கத்தை திரும்பத் திரும்ப படித்து விட்டு ஒவ்வொரு பாத்திரத்தின் தோற்றம் மற்றும் முக்கிய பண்பு பற்றி கற்பனை செய்து எழுதவும்)**

| எண் | பாத்திரப் பெயர் | பாத்திரம் | தோற்றம் | முக்கிய பண்பு |
|---|---|---|---|---|
| 1. | கணேசன் | காவலர் | | |
| 2. | பத்மா | செவிலியர் | | |
| 3. | பரஞ்சோதி | ஊர்த்தலைவர் | | |
| 4. | மணியன் | காவல்காரன் | | |
| 5. | பரமன் | மாணவன்-1 | | |
| 6. | ரமேஷ் | மாணவன்-2 | | |
| 7. | மோகன் | மாணவன்-3 | | |
| 8. | பிரதீப் | மாணவன்-4 | | |
| 9. | விக்ரமன் | மாணவன்-5 | | |
| 10. | காத்தமுத்து | ஊர்க்காரர் | | |
| 11. | பெயர் இல்லை | பொதுமக்கள் 50-60 பேர் | | |

## 5. வசனம் எழுதி காட்சிகளை தெளிவாக்குதல்

### காட்சி -1

**இடம்:** புளியங்குடி, மாரியம்மன் கோயில் தெரு
**நேரம்:**காலை

மாரியம்மன் கோவில் தெரு காலையில் பிசியாக இருக்கிறது. சிலர் வீட்டுக்கு வெளியே அங்கும் இங்குமாக நடமாடிக் கொண்டிருக்கிறார்கள். பலரும் மாஸ்க் அணிந்திருக்கிறார்கள். வெளித் திண்ணையில் ஒருவர் செய்தித்தாள் வாசித்த

வண்ணம் குடும்பத்தினரோடு பேசிக் கொண்டு... தண்டோரா சத்தம் டம், டம், டம் என்று தெரு முனையிலிருந்து கேட்கத் துவங்கி திண்ணையில் இருப்பவர்களை நோக்கி வருகிறது.

**தண்டோரா போடுபவர்**

இதனால புளியங்குடி மக்களுக்கு அறிவிக்கிறது என்னன்னா... (டம் டம் டம்..) கொரோனா நோய தடுக்கிறதுல ரொம்பச் சிறப்பா செயல்பட்ட நம்ம ஊரு நர்ஸ் அம்மாவுக்கும், நம்ம ஊரு போலீஸ்காரர்க்கும் பாராட்டு விழா நடக்க இருக்கு. விழாவுக்கு நம்ம ஊரு பஞ்சாயத்து தலைவர் அய்யா அவுங்க தலைமை தாங்குறாங்க... நாளைக்கு மாலை நாலு மணிக்கி... ஊருசனம் எல்லாரும் மறக்காம மாஸ்க் மாட்டிட்டு வாங்க (டம்... டம்... டம்...)

**ஊர்க்கார ஆண்**

(திண்ணையில் அமர்ந்தவாறு மனைவியிடம்)

நல்ல விஷயம் தான்.. நான் வீட்டுல இருக்கேன்.. நாளைக்கு நீ போய்ட்டு வந்துரு.

**அவர் மனைவி**

(கணவனிடம்)

என்னங்க இப்படி சொல்றீங்க.. பஞ்சாயத்து கூட்டம் எல்லாம் ஆம்பளைங்க சமாச்சாரம் தான.. பொம்பளைங்க எதுக்கு?

**ஊர்க்கார ஆண்**

இப்படித்தான் காலம் காலமா பொம்பளைகள பூட்டியே வச்சிருக்காங்க.. நாலு எடம் போயி வந்தாத்தான் நல்லது கெட்டது தெரிஞ்சுக்க முடியும்..போயிட்டு வான்னு சொல்றேன்ல..

--காட்சி நிறைவு—

**செய்முறைப் பயிற்சி:**

காட்சி-2லிருந்து காட்சி-14 வரை கதைச் சுருக்கத்தை திரும்பத் திரும்ப படித்து பின் வசனங்களை எழுதவும்.

## 6. நடிகர்களை தேர்வு செய்தல்

நடிக்க விரும்புவர்களை, நடிக்க விரும்பும் பாத்திரத்தை ஏற்று நடிக்கச் சொல்லி தேர்வு செய்யலாம். கீழ்கண்ட காரணிகளின் அடிப்படையில் மதிப்பீடு செய்து தேர்வு செய்யலாம்..

| நபர் | தோற்றப் பொருத்தம் | குறிப்பிட்ட பாத்திரத்தின் பண்புகளை வெளிக்கொண்டு வரும் திறன் | குரல் வளம் | முன் அனுபவம் |
|---|---|---|---|---|
| நபர்-1 | | | | |
| நபர்-2 | | | | |
| நபர்-3 | | | | |

## 7. நடிப்பு பயிற்சி

- உடல் மொழி பயிற்சி, குரல் வள பயிற்சி, வசனம் பேசுதல், மேடையில் நகர்வு ஆகியவற்றிற்கான பயிற்சிகளை திட்டமிடுதல்.
- யாரை கொண்டு பயிற்சி அளிக்கப் போகிறீர்கள்?
- பயிற்சி அட்டவணையை தயார் செய்தல்
- ஒத்திகை

## 8. உடைகள் தேர்வு செய்தல்

| எண் | பாத்திரப் பெயர் | பாத்திரம் | பாத்திரத்திற்கான உடை |
|---|---|---|---|
| 1. | கணேசன் | காவலர் | காக்கி பான்ட், ஷூ, வெள்ளை ஸ்லாக், மாஸ்க் |
| 2. | பத்மா | செவிலியர் | |
| 3. | பரஞ்சோதி | ஊர்த்தலைவர் | |
| 4. | மணியன் | காவல்காரன் | |
| 5. | பரமன் | மாணவன்-1 | |


இது போல் அனைத்து பாத்திரங்களுக்கும் தேவையான உடையை எழுதுவது மிக அவசியம்

## 9. கலைப் பொருட்களை சேகரித்தல்


| | | |
|---|---|---|
| காட்சி-1 | **தண்டோராகாரர், பாராட்டு விழா குறித்து மக்களுக்கு தெரிவிப்பது** | **தண்டோரா, செய்தித்தாள்** |
| காட்சி-2 | | |
| காட்சி-3 | | |
| காட்சி-4 | | |

இது போல் 14 காட்சிகளுக்கும் தேவையான உடையை எழுதுவது மிக அவசியம்


## 10. மேடை அமைத்தல்





அரேனா மேடை



ஷேக்ஸ்பியர் மேடை




புரோசீனியம்



திறந்த வெளி வட்ட மேடை



பிளாட்பார்ம் மேடை

நீங்கள் எந்த வகை மேடையை அமைக்கப் போகிறீர்கள்?

உங்கள் நாடகத்திற்கு மேடை அவசியம்தானா?

### மேடை வடிவமைப்பு

- பார்வையாளர்களுக்கும் கதையுலகத்திற்கும் உள்ள தொடர்பை வலியுறுத்தும்.
- நாடக நிகழ்வில் பார்வையாளர்களின் பங்கேற்பை நிர்ணயிக்கும்.
- கதையுலக கற்பனையை மாற்றியமைக்கும்.

முழுமையாக ஒரு நாடகத்தை இவ்விடுமுறையில் எழுதி

பள்ளி திறந்த பின் அரங்கேற்றுங்கள்!

# 8. பாட்டுக்குப் பாட்டு! இது நம்ம ஊரு பாட்டு!!



நாம இன்னிக்கு ஒரு பாட்டுக்குப் பாட்டு பாடலாமா , பாட்டு பாடிட்டு, நாமளே ஒரு பாட்டும் எழுதலாமா? பாட்டு பாடுறதும், பாட்டு எழுதுறதும் ரொம்ப ஈஸி!.

பாட்டு பாடும் போது உங்களுக்கு எப்படி இருக்கும், கொஞ்சம் சொல்லுங்க கேட்போம்! என்ன மாதிரியான உணர்வுகள் ஏற்படும் ?

ஐய், ஜாலி, மகிழ்ச்சி , கொண்டாட்டம், குதூகலம், அதே நேரத்துல சில சமயம் நாம சோக பாட்ட பாடும் போது நமக்கும் சோகமான உணர்வு ஏற்படும். அந்த பாட்ட கேக்குறவங்களுக்கும் சோகமாத்தான் இருக்கும் அப்படித்தானே! ஆமாவா? இல்லையா?

ஆக, ஒரு பாட்டு என்பது எல்லோருக்கும் ஒரு விதமான உணர்வை ஏற்படுத்தும், அதுதான் பாட்டு. அது பாட்டு பாடுறவங்களாக இருக்கட்டும் அல்லது பாட்ட கேக்குறவங்களாக இருக்கட்டும், எல்லோருக்குமே உடலில், மனதில் ஒரு விதமான உணர்வை நிச்சயம் ஏற்படுத்தும் அதுதான் பாட்டுக்கு இருக்குற வலிமை .

பொதுவா, குழந்தைகள் நீங்க எப்போ முதன் முதல்ல பாட்டு கேட்டிருக்கீங்க, ஞாபகம் இருக்கா? கொஞ்சம் யோசிச்சு பாருங்க, நல்லா ஞாபகப்படுத்தி பார்த்தீங்கன்னா உங்களுக்குத் தெரியும் .

முதன் முதலா நீங்க எல்லோருமே உங்க அம்மா பாடும் பாட்ட கேட்டிருப்பீங்க அல்லது அப்பா, உங்க பாட்டி, சித்தி, அத்தை பாடி கேட்டிருப்பீங்க. உங்கள தொட்டில்ல தூங்க வைக்க அவுங்க பாடி இருப்பாங்க. இப்போ கூட நீங்க உங்க பக்கத்து வீட்ல அல்லது உங்க சொந்தாகாரங்க வீட்ல இருக்குறவங்க, சின்ன

குழந்தைய தூங்க வைக்க, குழந்தைய தொட்டில்ல போட்டு தூங்க வைக்கும் போது பாடி கேட்டிருப்பீங்க சரியா! இப்போ எல்லாம் வெறும் சினிமா பாட்டையே பாடி தூங்க வச்சுடுறாங்க.

ஆனால் கொஞ்சம் காலத்துக்கு முன்னாடி இப்படித்தான் பாடுவாங்க ..

**ஆராரோ , ஆரிராரோ.....**

**என் கண்ணே நீ உறங்கு......**

**தானான்னே , தானனன்னே**

**என் தங்கமே நீ உறங்கு ....**

இந்த பாட்டுச் சத்தம் கேட்டிருக்கா, நம்ம பிறந்ததில இருந்து பாட்டு நம்ம வாழ்க்கையில ரொம்ப முக்கியம் வாய்ந்ததா இருந்திருக்கு, இப்போவும் இருக்கு சரியா? நாம சும்மா இருக்கும் போது கூட நம்மளையே அறியாம, நம்ம வாய்க்குள்ள ஏதோ ஒரு ராகத்துல முணங்கிட்டு இருப்போம், இல்லை நமக்கு தெரிஞ்ச சினிமா பாட்டையோ அல்லது பக்தி பாட்டையோ பாடிட்டு இருந்திருப்போம். அப்படித்தானே

பாட்டு பிடிக்காதவங்கன்னு யாரும் இருக்க முடியாது. சிலருக்கு பாட்டு மட்டுமே வாழ்க்கை நம்ம இசைஞானி இளையராஜா, ஏ.ஆர்.ரஹ்மான், அனிருத், டி.இமான், ஜி.வி.பிரகாஷ் ன்னு இப்படி நிறைய இசை கலைஞர்கள் சினிமா பாடல்களை உருவாக்கி நம்மையெல்லாம் மகிழ்ச்சி படுத்திட்டு இருக்காங்க.

### முதல் படி- 1. ஒரு பாட்டுக்கு அவசியமா என்னெல்லாம் தேவைன்னு நினைக்கிறீங்க

ஒரு பாட்டுக்கு இதெல்லாம் இருக்கனும்னு தானே நினைக்கீறீங்க. எங்க கொஞ்சம் அது என்னன்னு பார்க்கலாம், முதல்ல ஒரு பாட்டுக்கு ஒரு கருப் பொருள் இருக்கனும், அதே நேரத்துல வெறும் அர்த்தமே இல்லாத பாட்டுனால எந்த பயனுமே இல்லை, அப்படித்தானே!

நாமளே பல நேரத்துல, சில சினிமா பாடல்களை கேட்கும் போது என்ன அர்த்தமே புரியல, இது என்ன பாட்டுன்னு பல தடவை சொல்லியிருப்போம்

அப்படித்தானே! அதுனால நாம எழுத போற பாட்டு அர்த்தமுடையதாக இருக்ககணும் எல்லோரும் எளிமையா பாடுற மாதிரி இருக்கணும் சரிதானே.

சரி, அப்போ ஒரு நல்ல பாட்டை எப்படி எழுதனும்னு இங்கே பார்ப்போம்!. பாட்டு எழுத தேவையானதை முதல்ல இங்க கட்டத்துக்குள்ள எழுதுவோம்.

| | |
|---|---|
| **கருப் பொருள்** | **தலைப்பு** |
| **அர்த்தமுள்ள வார்த்தைகள்** | **ராகம், மெட்டு** |
| **வார்த்தை கோர்வைகள்** | **தாளம், இசை** |
| **பாட்டு வடிவம் - வரிகள் 3 முதல் 4 வார்த்தைகள் (பல்லவி , சரணம் )** | |

கீழே இங்கே கொடுக்கப்பட்டிருக்கும் பாட்ட கொஞ்சம் பாருங்க, இந்த பாட்டுக்கு ஒரு தலைப்பு கொடுத்திருக்காங்க என்ன தலைப்பு “**நல்லா படிக்கனும், லட்சியம் வெல்லனும்**”. தலைப்பே ஒரு செய்திய சொல்லுதுல்ல, அதுமாதிரி நம்ம தலைப்பு இருக்கணும் சரியா? உங்க பாட்டோட கருப்பொருளை மையமா வச்சு ஒரு சின்ன தலைப்பைக் கொடுங்கள்.

அதே மாதிரி பாட்டுக்கு ஒரு பல்லவியும் இருக்கு, சரணமும் இருக்கு. இதுதான் ஒரு பாட்டோட அமைப்பு அல்லது வடிவம் சரியா, ஓ.கே.

**சரி பாட்டு எழுதறதுக்கு முன்னாடி , இப்போ இந்த மகிழ்ச்சியான பாட்டை பாடுவோம் !**

இந்த பாட்டு உங்களுக்கு நல்லாத் தெரியும், நீங்க ஏற்கனவே பாடியிருக்கீங்க அதுனால உங்களுக்கு இந்த பாட்ட பாடுறது ரொம்ப ஈஸி. இந்த பாட்டோட ராகம் உங்களுக்கு நல்லாத் தெரியும். ராகம் உங்களுக்கு மறந்து

போயிருச்சுன்னா உங்க வள மைய அக்கா கிட்ட கேட்டு தெரிஞ்சுகிட்டு இந்த பாட்ட நல்லா வாய திறந்து நல்ல உச்சரிப்போட பாட்ட பாடுங்க.

முதல் முறை நீங்க பாடி முடித்து விட்டு, இரண்டாவது முறை பாடும் போது பாட்டை உங்க வீட்ல இருக்குறவங்ககிட்ட பாடி காட்டுங்க.

## பட்டாம் பூச்சி

**பல்லவி**

பட்டாம்பூச்சி புடிச்சுகிட்டு பல கதைகளை பேசிக்கிட்டு
பள்ளிக்கூடம் போறீங்களே துள்ளி குதிச்சு - அண்ணே
ஜெயக்குமார் பாட்டுகள காது கொடுத்து கேட்டுபுட்டு
ஒசர வேண்டும் நீயும் நல்ல நாள் குறிச்சு

உன்னை நீயும் மதிக்கவேண்டும் தம்பிகளா
புது வரலாறு படைக்க முடியும் தங்கைகளா
அசராமல் படிக்க வேண்டும் தங்கைகளா
புது உலகை நீயும் படைக்க முடியும் தம்பிகளா (2)
**(பட்டாம் பூச்சி)**

**சரணம்**

நாளு பூரா உழைச்சாலும் வறுமை இன்னும் தீரல - நம்ம
தாய் தகப்பன் படும் பாடு கொஞ்ச நஞ்சமில்லை - நாலு (2)
ஏடு எடுத்து படிக்கனும் வெறிகொண்டு உழைக்கனும் (2)
ஏழ்மையை மாத்தனும் வாழ்க்கையில் நீ ஜெயிக்கனும் (2)
**(உன்னை நீயும் மதிக்க)**

**சரணம்**

சாதி மத பேய்களெல்லாம் சனத்தை புடிச்சு ஆட்டுது - நம்ம
சக்தி எல்லாம் விரயமாக்கி நெஞ்சம் கொதிக்கிது– சாதி (2)
மேற்படிப்பு படிக்கனும் சாதனை படைக்கனும் (2)
பேதத்தை ஒழிக்கனும் வாழ்க்கையில் நீ ஜெயிக்கனும் (2)–

**(உன்னை நீயும் மதிக்க )**

**சரணம்**

ஆடு மாடு மேய்க்கச் சொல்லி அதிகாரம் மிரட்டுது - நம்ம
அடி மனசு கனவு மேல நஞ்சை விதைக்குது - ஆடு... (2)
லட்சியத்தை காக்கணும் துணிச்சலை வளர்க்கனும் (2)
கூச்சத்தை போக்கனும் அடக்குமுறையை ஜெயிக்கனும் (2)

**(பட்டாம் பூச்சி)**

**பாட்டு பாடி முடிச்சாச்சு:**

நம்ம இந்த பாட்ட நல்லா பாடி முடிச்சாச்சு, இப்போ நம்மளே சொந்தமா ஒரு பாட்ட எழுதப் போறோம்! எழுதலாமா? தொடர்ந்து கீழே கொடுக்கப்பட்டிருக்கும் விளக்கத்தை நல்லா வாசிங்க.

**இரண்டாம் படி - 2 :** இப்போ நாம ஒரு பாட்ட எழுத போறோம். அதுக்கு முன்னாடி ஒரு கேள்வி இருக்கு, என்னன்னா இப்போ இந்த பாட்டுல நீங்க முக்கியமா கருதுற, நல்ல அர்த்தம் அல்லது செய்தி சொல்ற வார்த்தைகளை கண்டுபிடிச்சி கீழே இருக்குற கட்டத்துக்குள்ள எழுதி வரிசைப் படுத்துங்க

**எ.கா :** பள்ளிக்கூடம்

| வ.எண் | முக்கிய வார்த்தைகள் | எண் | முக்கிய வார்த்தைகள் |
|---|---|---|---|
| 1. | | 6 | |
| 2. | | 7 | |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| 3. | | 8 | |
| 4. | | 9 | |
| 5. | | 10 | |

**மூன்றாம் படி –3 :**இப்போ நீங்க பாட்டு எழுத தயாராகுங்க, அதுக்கு முன்னாடி நீங்க செய்ய வேண்டியது என்னன்னா, முதல்ல எது குறித்து பாட்டு எழுத போறீங்கன்னு நல்லா யோசிங்க, அவசரம் வேண்டாம், நிறைய நேரம் எடுத்துக்கோங்க, உங்க அம்மா அப்பாகிட்ட கூட கலந்து பேசுங்க.

உங்களுக்கு பிடிச்ச ஒன்றை குறித்தோ அல்லது உங்களை மிகவும் கவர்ந்த ஒன்றை குறித்தோ, அல்லது நீங்கள் மிகவும் வெறுக்கும் ஒன்றை குறித்தோ, அல்லது நீங்கள் மாற்ற நினைக்கும் ஒன்றை குறித்தோ அல்லது இயற்கையை குறித்தோ குழந்தைகள் குறித்தோ, அவர்களின் உரிமைகள் குறித்தோ உங்க பாட்டு இருக்கலாம் .

எ.கா : **நிலா, மேகம்**

**சுற்றுப்புற சூழல், விவசாயம்**

அப்படி உங்களுக்குத் தோன்றும் மிக முக்கியமான 5 தலைப்புகளை இங்கு வரிசை படுத்துங்கள்

| வ.எண் | தலைப்பு அல்லது கருப்பொருள் |
|---|---|
| 1 | |
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |

**நான்காம் படி 4:**

இப்போ நீங்க பாட்டு எழுத தயாராகுங்க, நீங்கள் கொடுத்துள்ள 5 தலைப்புகளில் 1 தலைப்பை தேர்வு செய்து கொள்ளுங்கள். தேர்வு செய்த பின்னர் அந்த தலைப்பின் வழியாக எழுதும் பாட்டிற்கு வார்த்தைகளை உருவாக்குங்கள் . உ.தா. தலைப்பை ஒட்டி அந்த பாட்டு எந்த கருத்தை மையப்படுத்தி எழுதப்பட இருக்கிறதோ அதனை ஒட்டி அதற்கான வார்த்தைகளை தேர்வு செய்து கீழே கொடுக்கப்பட்டிருக்கும் கட்டத்தில் வரிசைப் படுத்துங்கள், அதன் பின்னர் அந்த வார்த்தைகளை கோர்வையாக்கி இன்னும் சில வார்த்தைகளை அதனோடு சேர்த்து பாட்டு வடிவில் எழுதுங்கள்.

| **வார்த்தைகள்** | | | | |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |

நீங்கள் எழுதும் பாட்டு உணர்ச்சியைத் தூண்டும் வகையில், ஒரு கருத்தையோ, செய்தியையோ, நல்ல விஷயங்களையோ சொல்லும்படி யோசித்து எழுதுங்கள். நீங்கள் எழுதிய பாட்டுக்கு ராகம் உருவாக்குங்கள். உருவாக்கிய பின்பு முதலில் நீங்கள் அந்த பாடலை பாடி பாருங்கள், வார்த்தைகள் ராகத்திற்கு, தாளத்திற்கு இடைஞ்சலா இருந்தால் அர்த்தம் மாறாமல் அந்த வார்த்தைக்கு பதிலா வேறு வார்த்தையும் பயன்படுத்தி பாடி பாருங்கள் .

இவ்வாறு, உங்களுக்குள்ளேயே முதலில் பாடி, எழுதி , திருத்தி எழுதி மீண்டும் பாடி ஒரு நல்ல கருத்துள்ள பாட்டை எழுதுங்கள் .

பாட்டுக்குப் பாட்டு! இது நம்ம ஊரு பாட்டு !!

## 1. பட்டாம் பூச்சி

**பல்லவி**

பட்டாம்பூச்சி புடிச்சுகிட்டு பல கதைகளை பேசிக்கிட்டு
பள்ளிக்கூடம் போறீங்களே துள்ளி குதிச்சு - அண்ணே
ஜெயக்குமார் பாட்டுகள காது கொடுத்து கேட்டுபுட்டு
ஒசர வேண்டும் நீயும் நல்ல நாள் குறிச்சு

உன்னை நீயும் மதிக்கவேண்டும் தம்பிகளா
புது வரலாறு படைக்க முடியும் தங்கைகளா
அசராமல் படிக்க வேண்டும் தங்கைகளா
புதுஉலகை நீயும் படைக்க முடியும் தம்பிகளா (2)

**(பட்டாம் பூச்சி)**

**சரணம்**

நாலு பூரா உழைச்சாலும் வறுமை இன்னும் தீரல - நம்ம
தாய் தகப்பன் படும் பாடு கொஞ்ச நஞ்சமில்லை - நாலு (2)
ஏடு எடுத்து படிக்கனும் வெறிகொண்டு உழைக்கனும் (2)
ஏழ்மையை மாத்தனும் வாழ்க்கையில் நீ ஜெயிக்கனும் (2)
**(உன்னை நீயும் மதிக்க)**

**சரணம்**

சாதி மத பேய்களெல்லாம் சனத்தை புடிச்சு ஆட்டுது - நம்ம
சக்தி எல்லாம் விரயமாக்கி நெஞ்சம் கொதிக்கிது– சாதி (2)
மேற்படிப்பு படிக்கனும் சாதனை படைக்கனும் (2)
பேதத்தை ஒழிக்கனும் வாழ்க்கையில் நீ ஜெயிக்கனும் (2)–
**(உன்னை நீயும் மதிக்க )**

**சரணம்**

ஆடு மாடு மேய்க்கச் சொல்லி அதிகாரம் மிரட்டுது - நம்ம
அடி மனசு கனவு மேல நஞ்சை விதைக்குது - ஆடு... (2)
லட்சியத்தை காக்கனும் துணிச்சலை வளர்க்கனும் (2)
கூச்சத்தைப் போக்கனும் அடக்குமுறையை ஜெயிக்கனும் (2)
**(பட்டாம் பூச்சி)**

## 2. ஒயிலாட்டம்

குழந்தைவள மையத்தில கூடி நிற்கும் குழந்தைகளெல்லாம்
கருத்தான பாடல்கள பாடிடுவோம் கூட்டத்திலே
நாங்க பாடுரேங்க பாட்டு, நீங்க சிந்திக்க வேணும் கேட்டு (2)

கூச்சத்தை போக்கிடுவோம், அச்சத்தை நீக்கிடுவோம் (2)
எழுந்ததும் படித்திடுவோம் மாலை முழுதும் விளையாடுவோம்

அம்மா அப்பா அறிவுரையை கேட்டிடுவோம் – நாம (2)
கெட்ட வார்த்தை பேசுவதை தவிர்த்திடுவோம்

கெட்டதைக்கேட்க மாட்டோம் , கேடுகளை பார்க்க மாட்டோம் (2)
ஒற்றுமையா கூடிடுவோம் ஏற்றத்தாழ்வு விரட்டிடுவோம்
குழந்தைகளின் உரிமைகளை, தெரிந்திடுவோம் – நம்ம (2)
அம்மா அப்பா அனைவருக்கும் எடுத்துச் சொல்லுவோம்

சாதிக்க படித்திடுவோம், சமத்துவமாக பழகிடுவோம் (2)
படிப்பதற்கு அஞ்சமாட்டோம், பாகுபாட்டை தவிர்த்திடுவோம்
வரலாற்றை உருவாக்க உறுதி ஏற்போம் – புது
நம்பிக்கை எல்லோருக்கும் உறுதிபடுத்துவோம், நாங்க (2)

### 3. கொரானா விழிப்புணர்வு பாடல்

**பல்லவி**

அண்ணன்மாரே தம்பிமாரே
அம்மாமாரே அக்காமாரே
(திரு) நங்கைமாரே தங்கைமாரே
சொல்லுவதை கவனமாக கேளுங்கள்
கொரோனா நோய ஒழித்துடலாம் பாருங்க.

**சரணம்**

தனிமையா இருந்திடனும் வெளியே செல்வதை தவிர்த்திடனும்
இடைவெளி உணர்ந்திடனும், நம்ம முகக்கவசம் அணிந்திடனும்
அரசாங்கம் சொல்லும அறிவுரை கேட்டு விழிப்போடு இருந்திடுவோம்(2)
கண்ட இடத்தில் எச்சில் துப்புவதை அறவே நிறுத்திடுவோம் (2) -
(அண்ணன்மாரே)

**சரணம்**

சோப்பை எடுத்திடனும், தினமும் கைகளை கழுவிடனும்
சுத்தமாய் இருந்திடனும், கூட்டமாய் இருப்பதை தவிர்த்திடனும்
சுகாதாரத்துறை அறிவுரை கேட்டு நலமாக வாழ்ந்திடுவோம் (2)
விடுமுறை நாளிலே வீட்டிலிருந்து உயிர்களை பாதுகாப்போம் -
(அண்ணன்மாரே)

**சரணம்**

கைக்குட்டை எடுத்திடனும், இருமல் தும்மல் வாய்களை மூடிடனும்
எட்ட நின்னு பேசணும், கைய கொடுப்பத தவிர்த்திடனும்
கண்ணுக்குத் தெரியாத கொரானா கிருமிய அடியோடு அழித்திடுவோம் (2)
உயிர்கொல்லி நோய் நமக்கு வேணாம் உஷாரா இருந்திடுவோம்–
(அண்ணன்மாரே)

**சரணம்**

உங்களுக்கு பசி எடுக்கலையா, தொடர்ந்து இருமல் வருதா
அதிக காய்ச்சல் இருக்கிறதா, மூச்சு திணறல் வருகுதா
உடல்வலி இருக்கிறதா, தொண்டை வறண்டு போகிறதா
இந்த அறிகுறி இருந்தால் (அரசு) மருத்துவமனைக்கு உடனே சென்றிடுங்க(2)
நிச்சயமாகவே கொரோனா கிருமியின்அறிகுறி தானுங்க– (அண்ணன்மாரே)
(3 )

## 4. குருவி தலையில

**பல்லவி**

குருவி தலையில பனங்காயப் பாருங்க
சித்தெறும்பு முதுகுல பாராங்கல்லப் பாருங்க.......
குருவி தலையில பனங்காயப் பாருங்க
சித்தெறும்பு முதுகுல பாராங்கல்லப் பாருங்க

**சரணம்**

பத்து வயசு.. முடியுமுன்னே -2
குடும்ப பாரம் தாங்கல
பிஞ்சுக் கை ஒழைச்சாதான்
மூணு வேள சோறுங்க - 2

**சரணம்**

சாம கோழி கூவுமுன்னே கண் விழிக்க வேணுங்க
சாமத் தூக்கம் வரும் வரைக்கும் பீடி சுத்த வேணுங்க
சாம கோழி கூவுமுன்னே கண் விழிக்க வேணுங்க
சாமத் தூக்கம் வரும் வரைக்கும் வேலை செய்ய வேணுங்க
ஒரு வேளை சோறு தான் நாளு பூராம் வேலை தான்
ஒடம்புக்கு நோவுன்னா அடியும் உதையும் சேர்ந்துதான் தான் – 2 (குருவி)

**சரணம்**

பள்ளிக்கூடம் எந்தப்பக்கம் கனவுல பாக்கல
"ஆ" ஈ ன்னா என்னானு ஓரெழவும் புரியல
சின்னப்பாப்பா கலரு சட்டை வித விதமாய் போடுது – 2
என் சட்டை கிழிஞ்சாக்க யாருட்ட நான் கேட்பது (குருவி )

**சரணம்**

குழந்தைங்க தெய்வமுன்னு பாட்டொன்னு சொல்லுது
என்னப்போல எந்த தெய்வம் கூலி வேலை செய்யுது
வருங்கால தலைவர் கூட நான் தான்னு சொல்லுது – 2
எப்ப வரும் அந்தக் காலம் தெரிஞ்சவங்க சொல்லுங்க – 2 (குருவி)

# 9. விளிம்பிற்கு அப்பால் வாழும் இவர்களைத் தெரியுமா?



இந்தப் படத்தில் நீங்கள் காண்பது மதுரை மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்திற்கு எதிரில் திறந்த வெளியில் குடிசை போட்டு வசிக்கும் ஒரு குடும்பம். இவர்கள் ராஜஸ்தான் மாநிலத்தை சேர்ந்தவர்கள். இவர்களை போன்று நிறைய குடும்பங்கள் மதுரையில் வாழ்கின்றனர். இவர்கள் பாரம்பரியமாக மண் பொம்மைகள் மற்றும் பூத்தொட்டிகள் செய்து பிழைப்பவர்கள். இவர்களது குழந்தைகள் பெற்றோர்களுடன் சேர்ந்து பொம்மைகள் செய்யும் தொழிலில் ஈடுபடுகிறார்கள். பெற்றோர்கள் இவர்களை பள்ளிக்கு அனுப்ப மறுக்கிறார்கள். படத்தில் காணும் குழந்தை பள்ளிக்குச் செல்லவில்லை. கொரோனா முழு அடைப்புச் சூழ்நிலையிலும் கூட சொந்த ஊருக்கு போவதாக இல்லை என்று கூறுகிறார்கள்.

படத்தில் காணும் குழந்தையை பெற்றோர் பள்ளிக்கு அனுப்பாததை பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?




நீங்கள் படத்தில் காண்பது 12 வயதே நிரம்பிய ஜம்லோ மக்டம் என்ற குழந்தை. இவர் ஒரு புலம்பெயர் தொழிலாளியின் மகள். சட்டிஸ்கர் மாநிலத்தை சேர்ந்தவர். வறுமையின் காரணமாக பெறோருடன் சேர்ந்து அண்டை மாநிலமான ஆந்திர மாநிலத்திலுள்ள பூலபள்ளி மாவட்டத்திலுள்ள கன்னைகுடா கிராமத்தில் மிளகாய் தோட்டத்தில் குழந்தைத் தொழிலாளியாக வேலை செய்து வந்தார். முழு அடைப்பின் போது நடந்தே வீடு திரும்பவேண்டிய சூழ்நிலையில், 150 கி.மீ. நடந்த குழந்தை, சொந்த ஊர் சேர்வதற்கு முன்னரே நாவறட்சியினாலும், மிகுந்த உடல் சோர்வினாலும் இறந்துபோனது ஒரு மிகப் பெரிய துயரம். இச்சம்பவம் ஏப்ரல் மாதம் 21ம் தேதி நிகழ்ந்தது.

இந்த துயர் சம்பவத்திற்கு யார் காரணம்? உங்கள் அப்பா மற்றும் அம்மாவிடம் இந்த சம்பவத்தை கூறி இதற்கான விளக்கத்தை கேட்டு அதை பதிவு செய்யுங்கள்.




படத்தில் காண்பது 15 வயதே நிரம்பிய ஜ்யோதி குமாரி. அருகில் இருப்பவர் அவரது தந்தை மோகன் பாஸ்வான். பாஸ்வான், தலை நகர் தில்லி அருகேயுள்ள குருக்ராம் நகரில் சைக்கிள் ரிக்ஷா ஓட்டுனராக வேலை செய்து வந்தார். விபத்தினால் உடல் நலம் குன்றிய பாஸ்வானை மகள் ஜ்யோதிகுமாரி கவனித்துக் கொள்வதற்காக தன் 8ம் வகுப்பு படிப்பினை நிறுத்தி விட்டு, குருகிராம் வந்து தந்தையுடன் தங்கினார். முழு அடைப்பு காலங்களில் வீட்டு வாடகை கொடுக்க முடியாத சூழ்நிலையில், பீகார் மாநிலம் தார்பங்கா மாவட்டத்திலுள்ள தங்கள் சொந்த ஊருக்கு திரும்ப முடிவு செய்தனர். அது குர்க்ராமிளிருந்து 1200 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. ரயில் மற்றும் பஸ் போக்குவரத்து உடனடியாக கிடைக்காத காரணத்தினால், சைக்கிள் ஒன்றை விலைக்கு வாங்கி, நடக்க முடியாத தன் தந்தையை பின்னால் ஏற்றிக்கொண்டு, 7 நாட்கள் கடுமையாக சைக்கிள் பயணம் செய்து தன் தந்தையுடன் ஊர் வந்து சேர்ந்தார் இந்த வீராங்கனை. மே மாதம் 19ம் நாள், உலக கவனத்தை ஈர்த்த இந்த சம்பவம் நாம் அனைவரையும் நெகிழ வைத்தது. தர்பங்கா மாவட்ட ஆட்சியர், உடனடியாக குமாரியை 9ம் வகுப்பில் சேர்க்குமாறு ஆணை பிறப்பித்தார். இந்திய சைக்கிள் விளையாட்டுக் கழகம் ஜ்யோதி குமாரியை, தேசிய சைக்கிள் போட்டி பயிற்சிகளில் பங்கேற்பதற்கான தேர்வுக்கு வருமாறு அழைப்பு விடுத்திருக்கிறது.

1. ஜ்யோதி குமாரியின் இந்த தீரச்செயலை நீங்கள் வாசிக்கும் போது உங்கள் உணர்வுகளை எவ்வாறு தொடுகிறது என்று எழுதுங்கள்.

2. இதுபோன்ற ஒரு நெருக்கடியான சம்பவம் உங்களுக்கு எப்போதாவது நிகழ்ந்ததுண்டா? நீங்கள் என்ன செய்தீர்கள் என்று கட்டத்திற்குள் எழுதவும்.

3. ஜ்யோதி குமாரியிடமிருந்து நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டிய மூன்று அல்லது நான்கு பண்புகளை கட்டத்திற்குள் குறிப்பிடவும்.

# 10. குழந்தைகளும் கொரோனா தடுப்பும்




கொரோனா பெருந் தொற்றின் (Pandemic) விளைவால் ஏற்பட்ட கட்டாய விடுமுறை காலங்களை நீங்கள் படைப்பாற்றல் கொண்டு மகிழ்ச்சியுடனும், மன ஆரோக்கியத்துடனும் எவ்வாறு கழிப்பது என்ற முயற்சியில் இதுவரை ஈடுபட்டோம். பள்ளிகள் திறக்க வேண்டும், நீங்களும் மீண்டும் மகிழ்ச்சியுடன் பள்ளிக்கூடம் போய் திரும்ப வேண்டும் என்பது உங்களுடைய ஆசையாக மட்டுமல்ல, அனைவருடைய விருப்பமாகவும் இருக்கிறது. ஆனால் அரசினுடைய முடிவிற்காக கண்டிப்பாக காத்திருக்க வேண்டும். அது என்று நிகழ்ந்தாலும், குழந்தைகளாகிய நீங்கள் எதிர்கொள்ள வேண்டிய புதிய சவால்கள் சில இருக்கின்றன!

**எதைப்பற்றி?**

அது தான் அப்பப்போ சொல்கிறார்களே... உங்கள் காதுகளிலும் விழுந்திருக்குமே? அது தான்... **"புதிய இயல்பு நிலை."** ஆங்கிலத்தில் "New Normal" என்கிறார்களல்லவா.

அதைப்பற்றி நீங்கள் பயப்படுவதற்கு ஒன்றும் இல்லை. இன்னும் சொல்லப் போனால் நீங்கள் நினைத்தால், எதிர்காலங்களில் சிறப்பாகவும், பொறுப்பாகவும், மற்றவர்களுக்கு வழி காட்டிகளாகவும் செயல்பட முடியும். நாங்களா... குழந்தைகளா? எப்படி?

மிக எளிது என்றுதான் நினைக்கிறேன்! பார்க்கலாம்.

**முதல் கட்டமாக, புரிதல் பற்றி...**

- கொரோனா பற்றி சரியான புரிதல் அவசியம்
- Covid-19 என்ற நோய் வைரஸ் தொற்றினாலேயே வருகிறது
- வதந்திகளையும் மூட நம்பிக்கைகளையும் அறவே நம்பக்கூடாது

**இரண்டாவது, சில கசப்பான உண்மைகள் பற்றி ...**

- உலகில் கொரோனா தொற்றுக்குள்ளானவர்கள்: **83,66,417.**
- உலகில் இத்தொற்றினால் இதுவரை இறந்திருப்பவர்கள்: **4,50,087.**
- இந்தியாவில் இதுவரை பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை: **3,67,958**
- இந்தியாவில் சிகிச்சை பெற்று வருபவர்களின் எண்ணிக்கை: **1,63,248**
- இந்தியாவில் இதுவரை இறந்திருப்பவர்களின் எண்ணிக்கை: **12,573**
- இந்தியாவில் தொற்று உச்சகட்டத்தை எப்போது அடையும்? **நவம்பர் 2020**

*19-06-2020 நிலவரம்.

**மூன்றாவது, சிகிச்சை பற்றி...**

- பாதிக்கப் பட்டவர்களுக்கு மருந்து இருக்கிறதா? இல்லை.
- தடுப்பு மருந்து கண்டுபிடித்தாகிவிட்டதா? இல்லை.
- எவ்வாறு பலர் உயிர் பிழைக்கிறார்கள்? நோய் எதிர்ப்பு சக்தியினால், பொதுவான சிகிச்சை மற்றும் மருத்துவ கண்காணிப்பு உதவியினால்.

**நான்காவது, கொரோனாவை அரசு கட்டுபடுத்துவது பற்றி...**

- கொரோனா பரிசோதனைகள் (Testing) நடத்துதல் (முதன்மை நடவடிக்கை).
- அரசு கட்டுப்பாடுகளை விதித்தல்.
- அவசியப்பட்டால் முழு அடைப்பும், ஊரடங்கும்.
- அரசு தரப்பில் மருத்துவ வசதியை பெருக்குதல்.
- தடுப்பு மருந்து கண்டுபிடிப்பிற்கு பெரும் அளவில் உதவுதல்.

**ஐந்தாவது, மக்கள் செய்ய வேண்டியது பற்றி...**

- தொற்றின் அறிகுறிகள் தோன்றும் போது தவறாமல் மருத்துவமனைக்குச் சென்று கொரோனா பரிசோதனைக்கு (Covid-19 Testக்கு) ஆட்படுத்தி முடிவெடுத்தல்.

- குவாரன்டைனில் வைக்கப்பட்டால், ஒத்துழைத்தல்.
- தனி மனித சுகாதாரத்தை கண்டிப்பாக கடைபிடித்தல் (கை கழுவுதல், மாஸ்க் அணிதல், சமூக இடைவெளியை கடைபிடித்தல்).
- பொது சுகாதாரம் பேணுதல் (கை கழுவுதல், மாஸ்க் அணிதல், சமூக இடைவெளியை கடைபிடித்தல், கூட்டம் கூடாமல் இருத்தல்).
- பேரிடர் கால அரசு விதிகள் அனைத்தையும், தவறாமல் கடைபிடித்தல்.
- முன்னனி கொரோனா போராளிகளான மருத்துவர்கள், செவிலியர்கள், உதவி மருத்துவ பணியாளர்கள், துப்புரவு தொழிலாளர்கள், காவலர்கள், அரசு அலுவலர்கள் ஆகியோரை பாராட்டுதல், துணை நிற்றல்.
- சமூக நலன் கருதி, தன்னார்வ 'கொரோனா கட்டுப்பாட்டு பணிகளில்' ஈடுபடுதல்.
- வதந்திகளை பரப்பாமல் இருத்தல்.
- தொற்று பாதிக்கப்பட்டவர்களை புறந் தள்ளாமல் அரவணைத்தல்.
- வெளியூர்களிலிருந்து வருபவர்களைப் பற்றிய அவசியமற்ற சந்தேகங்களை எழுப்பாமல் இருத்தல்.
- சுத்தமான மற்றும் சுகாதாரமான சுற்றுப்புறத்தை உறுதி செய்தல்.
- குறிப்பாக ஏழை எளியவர்களுடன் பரிவுடனும், கண்ணியமாகவும் துணை நிற்றல்.

## முக்கியமாக உங்களை பற்றி!

**குழந்தைகளின் பலமும் பலவீனமும்:**

**பலம்:** பெரியவர்களை பற்றுவதைப் போல குழந்தைகளையும் **தொற்று** பற்றும். ஆனாலும், அவர்களுக்கு நோய் பாதிப்பு மிக மிக குறைவு. குறிப்பாக உயிர்ச்சேதம் பெரும்பாலும் விளைவதில்லை என்று ஆராய்ச்சிகள் கூறுகின்றன.

**பலவீனம்:** குழந்தைகளை கொரோனா தொற்று பற்றிக் கொண்டாலும், காய்ச்சல், சளி, இருமல் போன்ற கொரோனா தொடர்பான அறிகுறிகளும் குழந்தைகளிடம் பெரும்பாலும் காணப்படுவதில்லை. அறிகுறிகள் இல்லாமலேயே, நோய் குணமாகிவிடத்தான் மிக அதிக வாய்ப்பு இருக்கிறதாக கூறப்படுகிறது.

**விளைவு: தங்களை அறியாமலேயே, குழந்தைகள் அதிகமாகவும், வேகமாகவும் கொரோனா தொற்றை பரப்ப முடியும்**. குறிப்பாக ஒரு குழந்தை மற்றொரு

குழந்தையிடமும், குடும்பத்தினருடனும் எளிதாகவே கொரோனா தொற்றை பரப்ப முடியும்.

**குழந்தைகளின் பலம் முக்கியம்... பலவீனம் அல்ல!**

**உங்களிடம் இருப்பது நோய் எதிர்ப்பு சக்தி மட்டுமல்ல...**

1. **நோய் எதிர்ப்பு திறன்:** இயற்கையாகவே Covid-19 ஐ எதிர்க்கும் திறன்
2. **அறிவார்வம்:** புதியதாக பார்க்கும் ஒன்றை, புரிந்து கொள்ள விரும்பும் ஆர்வம்
3. **மன தைரியம்:** 1200 கிமீ சைக்கிளில் சென்ற ஜ்யோதி குமரியை மனதில் கொள்ளுங்கள்
4. **பரிவு:** ஜ்யோதி குமாரி தன் தகப்பனார் மேல் கொண்ட பரிவு; குடும்பத்தோடு நின்றுவிட வேண்டிய அவசியமில்லை
5. **படைக்கும் திறன்:** வெறும் கலை, கல்வி தொடர்பான படைப்பு மட்டுமல்ல. வாழ்க்கை பிரச்சனைகளுக்கு தீர்வு காணல்; ஜ்யோதி குமாரி சைக்கிள் மூலம் கண்ட தீர்வு
6. **நெகிழ் திறன்:** ஒரு பிரச்சனையிலிருந்து உடனடியாக மீண்டெழும் திறன் 'resilience'

இத் திறன்களை பெற்றோர், ஆசிரியர் உட்பட பெரும்பாலோர் கவனத்தில் கொள்வதில்லை!

நீங்கள் உங்களை பற்றி கூறியவைகளை, கருத்தில் கொள்ள வேண்டும், கொண்டாட வேண்டும் என்பதே எங்கள் வேண்டுகோள்.

**நோயிலிருந்து தற்காப்பும், நோய் தடுப்பும்**

இரண்டும் ஒன்றோடு ஒன்று தொடர்பு கொண்டவை. உங்கள் வயதிற்கேற்ப, நீங்கள் இதைச் செய்ய முடியும். கொரோனா கட்டாய விடுப்பு முடிவதற்கு முன், வரப் போகும் பள்ளி நாட்களில் என்னென்ன செய்ய முடியும் என்று யோசிக்கலாமே! வயது வாரியாகவே யோசிக்கலாம்!

**6ல் இருந்து 10 வயது வரையிலான குழந்தைகளுக்கு**

1. **கை கழுவுதல்**
2. **மாஸ்க் அணிதல்**
3. **வீட்டிலுள்ள பெரியவர்களை தொடாமல், நெருங்காமல் இருத்தல்**

**கை கழுவுதல் பற்றி:**

| தற்சமயம் வீட்டில் எப்போதெல்லாம் கை கழுவுகிறீர்கள்? | பள்ளி சென்று வரும் காலங்களில் எந்த சூழ்நிலைகளில் எல்லாம் கை கழுவ வேண்டியிருக்கும்? |
|---|---|
| 1.<br>2.<br>3.<br>4. | 1.<br>2.<br>3.<br>4.<br>5.<br>6 |

**படம் வரைதல்:** உன்னிடம் இருக்கும் மாஸ்க்கை அணிந்து, கண்ணாடியில் சிறிது நேரம் உன்னைப் பார். பின்னர் மாஸ்க் அணிந்த உன் முகத்தை கட்டத்திற்குள் வரைந்து வண்ணம் தீட்டு. (சிறந்த ஓவியங்களை **“எங்கள் குரல்’** சிறுவர் இதழில் வெளியிடுவோம்). தேவைக்கு அதிகமான படங்களை வரைய விரும்பினால், தனியே கொடுக்கப்பட்டுள்ள ட்ராயிங் ஷீட்டுகளை உபயோகிக்கலாம்.

கொரோனா கேலிச் சித்திரங்கள் வரைக (தனி ட்ராயிங் ஷீட்டில் நிறைய வரையலாம்)

| | | |
|---|---|---|
|  உதாரணம் 1 |  உதாரணம் 2 | |

**11 வயதிலிருந்து 15 வயது வரையிலான குழந்தைகளுக்கு**

1. சிறு குழந்தைகளுக்கு முன் மாதிரியாக இருத்தல், வழி நடத்துதல்.
2. சமூக இடைவெளியை கடைபிடித்தல்.
3. கொரோனா பற்றிய தகவல் சேகரித்தல்.
4. கொரோனா பற்றி குடும்பத்தில் உரையாடல் செய்தல்.
5. கதை, கவிதை, கட்டுரைகள் எழுதுதல்.
6. விழிப்புணர்வு போஸ்டர்கள் தயாரித்தல்.
7. முழு அடைப்பு கால உங்கள் அனுபவங்களை எழுதி அனுப்புதல்.

**1. சிறு குழந்தைகளுக்கு முன் மாதிரியாக இருத்தல் , வழி நடத்துதல்**

உங்கள் வயது மற்றும் உங்கள் வயதிற்கு கீழ் உள்ள குழந்தைகளுக்கு கை கழுவுதல், மாஸ்க் அணிதல், சமூக இடைவெளியை கடைபிடித்தல் ஆகியவற்றை வலியுறுத்தும் வகையில், 5 காட்சிகள் கொண்ட நாடகம் எழுதவும். பள்ளி திறந்த பின் ஆசிரியர்களின் உதவியோடு அல்லது குழந்தைகள் வள மையத்தில் அரங்கேற்றலாம். சிறந்த நாடகம் தேர்வு செய்யப்பட்டு ‘எங்கள் குரல்’ இதழில் பிரசுரிக்கப்படும்.

**2. படங்கள் வரையுங்கள்:**

i. சமூக இடைவெளியை கடைபிடித்து நடைபெறும் வகுப்பறை.
ii. சமூக இடைவெளியை கடைபிடிக்கும் விளையாட்டு.

iii. டிஜிட்டல் வகுப்பறை.
iv. .... நீங்கள் விரும்பும் பல.

**3. கொரோனா பற்றி தகவல் சேகரித்தல் !**

வீட்டில் இருக்கும் இச்சமயத்தில், கொரோனா பற்றி செய்தித்தாளில் வெவ்வேறு தலைப்புகளில் வரும் செய்திகளையும், கட்டுரைகளையும் வெட்டி எடுத்து வைக்கவும். குழந்தைகள் வள மையம் அல்லது பள்ளி திறந்த பின், குழந்தைகளாக சேர்ந்து, நீங்கள் சேகரித்து வைத்திருக்கும் செய்திகள் மற்றும் கட்டுரைகளில் சிறந்தவைகளை தேர்வு செய்து, பெரிய பிரவுன் தாள்களில் ஒட்டி, பல தாள்களை ஒன்று சேர்த்து பைன்ட் செய்து, கொரோனா புத்தகம் ஒன்று தயார் செய்யுங்கள். பெற்றோர்களிடம் சொல்லி பழைய செய்தித்தாள்களை கூட அவர்கள் மூலம் சேகரித்து இதைச் செய்யலாம்.

**4. குடும்பத்தில் விழிப்புணர்வை உருவாக்க தலைமை ஏற்றுக் கொள்ளுங்கள் !**

வீட்டிலுள்ள அம்மா, அப்பா, தாத்தா, பாட்டி, அண்ணன், தம்பி, அக்கா, தங்கை என்று அனைவரையும் அழைத்து கொரோனா தடுப்பு பற்றி ஒரு உரையாடலை நிகழ்த்தி அதை ஒரு சிறு கட்டுரையாக எழுதி அனுப்புங்கள். நாங்கள் சிறந்த உரையாடல்களை **'எங்கள் குரல்'** சிறுவர் இதழ் மூலம் வெளியிடுவோம். செல்ஃபோன் வசதி இருந்தால், அந்த உரையாடலை பேசுபவரின் அனுமதி பெற்று பதிவு செய்து அனுப்புங்கள் .

**5. விழிப்புணர்வு போஸ்டர்களை வீட்டில் இருந்தபடியே தயார் செய்யுங்கள் !**



உதாரணம்

மேற் கொடுக்கப்பட்டுள்ள உதாரணங்களை நன்றாக பாருங்கள். உங்கள் வீட்டிற்கு, உங்கள் சமுதாய கூடத்திற்கு, உங்கள் குழந்தைகள் வள மையத்திற்கு

அவசியமான, கருத்துப் பொருத்தமான போஸ்டர்களை வண்ணங்கள் கொண்டு சிறப்பாக உருவாக்குங்கள்.

### 6. அனுபவ பகிர்வு !

பள்ளி திறந்தவுடன் அல்லது குழந்தைகள் வள மையங்கள் இயங்க ஆரம்பித்தவுடன், ஆசிரியர் அல்லது எளிதமைப்பாளர்களின் உதவியோடு, கொரோனா பணியில் ஈடுபட்ட துப்பரவு தொழிலாளி முதல், செவிலியர், மருத்துவர் என அனைவரையும் அழைத்து அவர்களது அனுபவங்களை கேட்டு புரிந்து கொள்ளுங்கள். அவர்களை கவுரவப்படுத்துவது மட்டும் போதாது.

## 15ல் இருந்து 18 வயது வரையிலான குழந்தைகளுக்கு


நீங்கள் தான் நாளைய உலகின் குடிமக்கள். சமூக மாற்றத்திற்கான வினையூக்கிகளும், வடிவமைப்பாளர்களும், வருங்கால தலைவர்கள், மருத்துவர்கள், அரசு அதிகாரிகள், ஆசிரியர்கள், சமூக செயல்பாட்டாளர்கள், ஏன் வருங்கால பெறோர்களும் கூட. இந்த புதிய யதார்த்தம், மற்ற எந்த தரப்பினரை காட்டிலும் உங்களைத் தான் நேராக எதிர் நின்று பார்த்துக் கொண்டிருக்கிறது.

மேலே கொடுக்கப்பட்டுள்ள அனைத்துப் பயிற்சிகளும் உங்களுக்கும் பொருந்தும். நீங்களும் உங்கள் தகுதி, திறன், அனுபவம் மற்றும் புரிதலுக்கேற்றாற் போல் வரையுங்கள், வண்ணமிடுங்கள், கவிதைகள், கட்டுரைகள் எழுதுங்கள், நாடகம் எழுதி நடியுங்கள், ஆடுங்கள், பாடுங்கள் மற்றவர்களை மகிழ்வியுங்கள். உங்களில் இளையவர்களுக்கு முன்மாதிரியாக செயல்படுங்கள்.

இதை முடிப்பதற்கு முன் ஒரே ஒரு கேள்வியை மட்டும் நான் உங்கள் முன் வைக்க விரும்புகிறேன். இன்றைக்கு 18 வயது நிரம்பாத நீங்கள், 20 ஆண்டுகள் கழித்து அதாவது 2040ம் ஆண்டில், 35ல் இருந்து 38 வயதை எட்டிக் கொண்டிருப்பீர்கள். பலரும் பல பொறுப்புகளை கட்டாயம் வகிக்க போகிறீர்கள். அன்றைக்கு நீங்கள் காணப் போகும் அந்த உலகம் எவ்வாறு இருக்கும் என்று யோசித்திருக்கிறீர்களா?

**" நான் வாழப்போகும் உலகம் 2040களில்"** என்ற தலைப்பில் 5 பக்கங்களுக்கு மிகாமல் ஒரு கட்டுரை எழுதி அனுப்புங்களேன்! Covid-19 ஒரு பழைய உலகத்தின் இறுதி கட்டம். ஆனால் அது ஒரு புதிய யுகத்தின் ஆரம்பம். அதை வடிவமைப்பதில் பெரும் பங்கு உங்களுக்கு இருக்கிறது.

# 11. நாட்குறிப்பு எழுதுதல்



படத்தில் நீங்கள் பார்ப்பது ஆன் ஃபிராங்க். இவர் 1929ம் ஆண்டு பிறந்தவர். இறக்கும்போது இவருக்கு வயது 15. இரண்டாம் உலக யுத்தம் மூண்டு பேரிடர் நிகழ்ந்த காலங்களில், யூத மதத்தைச் சார்ந்த இவரது பெற்றோர்கள் சர்வாதிகாரி ஹிட்லருக்கு அஞ்சி ஜெர்மனியிலிருந்து நெதர்லாந்து நாட்டில் உள்ள ஆம்ஸ்டர்டாம் நகரில் தஞ்சம் புகுந்தனர். அந்நகரில் ஒதுக்குப்புறமான ஒரு வீட்டில் தங்களை ஒளித்துக் கொண்டே வாழ வேண்டியதாயிற்று. ஆன் கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளாக (1942 - 44) தான் விழித்திருந்த நேரங்களை, அவ்வீட்டின் ஒரு புத்தக அலமாரிக்குப்பின் ஒளிந்திருந்துதான் கழித்தாள். 13 வயதே நிரம்பியிருந்தாலும் தனது மகிழ்ச்சியை, சோகத்தை, பயத்தை, நம்பிக்கையை, தனிமையை, தனது டையரியில் தவறாது தினமும் எழுதி வந்தார். 1944ம் ஆண்டு ஆன் ஃபிராங்கின் பெற்றோர்கள் நாசி போலீசால் கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்டு கொல்லப்பட்டனர். 1945ல் சிறுமி ஆன் ஃபிராங்க்கும் மரணமடைந்தார். அவர் எழுதிய டையரி சில காலங்களுக்குப் பின் வெளிச்சத்திற்கு கொண்டு வரப்பட்டது. ஒரு பேரிடரை ஒரு குழந்தை எதிர்கொண்ட விதம் உலகத்தை மிகப் பெரிய ஆச்சரியத்திற்குள்ளாக்கியது. **தி டையரி ஆப் அன் யங் கர்ல்** (ஒரு சிறுமியின் டையரி) என்ற பெயரில் ஆன் எழுதிய நாட்குறிப்புகள் புத்தகமாக வெளியிடப்பட்டது. இந்தப் புத்தகம் பேரிடர் ஒன்றை எதிர்கொண்ட ஒரு திக்கற்ற குழந்தையின் தன்னம்பிக்கையின் குரலாக இந்த மானுடம் வாழும் காலம் வரை எங்கும் ஒலிக்கும்.

'டையரி' என்ற ஆங்கில வார்த்தை அனைவரது காதுகளிலும் தினந்தோறும் விழக்கூடிய வார்த்தையாக இருந்தாலும், டையரி எழுதுவது நமது சூழலில் குழந்தைகளின் அனுபவத்திற்கு அவசியமற்றதாகவே கருதப்படுகிறது.

குழந்தைகளின் சுயமாக இயங்குதலுக்கும் (self-directed), அவர்களின் ஆளுமை வளர்ச்சிக்கும் டையரி எழுதுவது மிக அவசியமான ஒரு அடிப்படை பயிற்சி.

**டையரி அல்லது நாட்குறிப்பு எழுதுதல்**

1. **எப்படி?** தினமும் படுக்கைக்குச் செல்லும் முன் நீங்கள் உங்களோடு 5 நிமிடமாவது தனித்திருந்து மௌனமாக **பேசுங்கள்.** அப்படி நீங்கள் பேசுவதை எழுதுங்கள்.
2. **எதைப்பற்றி?** குறிப்பாக உங்கள் **உணர்வுகள்** பற்றி. அன்று நீங்கள் எதிர்கொண்ட ஆச்சரியங்கள், மகிழ்ச்சியான நிகழ்வுகள், சிறு, சிறு ஏமாற்றங்கள், கோபங்கள், புதிர்கள், இயலாமை என்று எதை பற்றியும் எழுதலாம்.
3. **ஏன்?** உங்கள் குழந்தை கால அனுபவங்கள் மிக முக்கியமானது. அதை நீங்களே மறந்து போகக் கூடாது. அது நீங்கள் எழுதும் **முதல் புத்தகம்.**

முதலில் 5 நாட்கள், இக் கட்டங்களுக்குள் நாட்குறிப்பு எழுதுங்கள். பின் தனி நோட்டு ஒன்றை வாங்கி அதில் எழுதவும்.

| **நாள்-1** |
| --- |
| |

நாள்-2

நாள்-3

நாள்-4

நாள்-5



**CENTRE FOR EDUCATION DEVELOPMENT ACTION AND RESEARCH (CEDAR)**

**PAPERBOAT CHARITY UK**

For Contact: 47/23, 'Thy Grace', Old Natham Road, (near Balamandhiram School) Madurai - 625014
Phone: 0452 2680701, Mobile: +91 96009 02981, +91 95855 95885
Email: info@cedarindia.org Website: www.cedarindia.org

*Not For Sale